# Some Select Opinions on "

*The Military Secretary to H. E. the Governor of Madras,*
*February 1926 :—*

**I am desired by Her Excellency to acknowledge recei of your letter dated February 3rd and to thank you for t four copies of the 'Chinthamani.'**

**Her Excellency wishes all success to the paper whi appears to be doing very good work.**

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 1
January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintama* From what I have seen of it, they seem well deserved. With more supp from the reading public and regular contributions from those that combi modern knowledge and Tamil scholarship, the magazine should become a gr popular educator.

224432
சென்னை-600 008

***Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,*** M.B.
***Bangalore, under date 1-5-1926 :—***

I have perused the copies of the Journa issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. Th aim of the Journal, viz. the improvement c the present status of Tamil-Nadu Ladies, i well kept up and the consistent manner i which the high standard is maintained eac month, is indeed praiseworthy. The sincer thanks of the public are due to you for t splendid and useful service you are rend ing. I wish the Journal a bright future.

## சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

நிரந்தர (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு ரூ. **50-0-0.** வெளிநாடு டாலர் **40.**

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா ... ... | 50 | 0 | 0 |
| ஜமீந்தார்களுக்கு ... ... ... | 30 | 0 | 0 |
| போஷகர்களுக்கு ... ... ... | 25 | 0 | 0 |
| நன்கொடையாளருக்கு ... ... | 15 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ... ... ... | 10 | 0 | 0 |
| உள்நாடுகளுக்கு ... ... ... | 5 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு ... ... ... | 6 | 0 | 0 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 DEC 1927 MADRAS

---

*M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M. A., B. L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January* 1927 :—

I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.

*M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.*

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

224432

*Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—*

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the womanhood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

*Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.*

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I.S.O., Kilpauk, writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

**

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*

*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

**I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.**

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

# Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows :—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes :—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows :—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

*P. G. Naicker Esq., Durban, 25th April 1925*

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearance of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

*Goonarathinum, Esq., Durban, Natal ; 14th March 1925.*

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

**Vol. IV.]** November 1927. **[No. 4.**


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः

# சிந்தாமணி 4-வது வருட வாழ்த்துப்பா.

(ஸ்ரீமான் கு. பெ. வீ. ராமசாமி செட்டியார்.)

செய்ய பிரபவத்தின் சிராவணிமுதலி
லுய்யும் பிராய மொருநான்கு—மெய்யாகப்
பெற்ற சிந்தாமணியார் பேருலகிற் பெண்மக்க
ளுற்ற பெருநூல் உரை (1)

களியாக்கும் வெய்ய கயமை தவிர்க்கும்
வெளியாக்கு முன்னம் விளைக்கும்—ஒளியாகும்
தானந் தவமுதலாந் தத்துவத் துட்பொருளை
மோன மணிசெய் முறை (2)

கூட்டும் பெரும்புலமைக் கோதைமார் தங்கள்
கேட்டுந் திறன்பலவுஞ் செப்புமால்—கேட்டு
மகிழ்வா ரறமாதர் மாசில் சிந்தாமணிக்கே
நெகிழ்வார் உளமாம் நெறி (3)

தொகுதிக் கெழுநூறு பக்கந் தொகுத்து
பகுதிக் கரசதனைப் பார்க்கில்—மிகுதிக்கண்
மேலாந் தரமாகி மேவு சிந்தாமணியோர்
நூலாந் தரமே நவல் (4)

நாலாம் பிராயம் நடக்கு சிந்தாமணிதான்
மேலாந் தரம்பெற்று மேவுமே—பாலாம்
அருஞ்சொலிளநகையா ரன்பாண்டு தோறுந்
தருஞ்சொ லினிமைதரும் (5)

தக்க மதியாளர் தஞ்சொற் பொருணிலைக
ளொக்க வுடன்கொண்டுறையுமே—திக்குந்
திசைநான்குஞ் சேருமே செல்வ மணியி
னிசையெங்குமாகு மினி (6)

பெண்ணின் பெருங்கலனைப் பேசரு மெஞ்ஞானக்
கண்ணின் கருவிழியாய்க் காணுமே—உண்ணின்
றுரைக்கு மொருமுதலா யொப்பில்சிந்தாமணியைத்
தரைக்குள் பெறுவார் தமர் (7)

செங்கதிரோன் றன்கிரணஞ் செல்லுமுல கெல்லாமே
தங்கதிர்ச்செஞ் சஞ்சிகையாற்றன்பரப்பி—பொங்கு
[மெழில்
கால மிடம்பொருளின் கட்டுரைக டாங்கிவருஞ்
சீலச்சிந் தாமணியின் சீர் (8)

பூங்குயிலின் றீங்குரல்போற் போற்று மடவாரைத்
தாங்குகின்ற சங்கத் தனிப்பலகைப்—பாங்குறைமின்
றத்த மிருப்பதனிற் சார்ந்து வருமணியின்
முத்தமிழைக் கொள்க முறை (9)

நன்குணரும் வித்தாகி ஞானச் செழுந்தளிரா
யன்ப ரகத்துறையு மாமுதாய்த்—துன்பமெலாந்
தூளாகத் தூற்றுகின்ற தூய சிந்தாமணியார்
நாளாக வாழ்க நயந்து (10)

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் IV.] பிரபவ—கார்த்திகை. [இதழ் 4.

## பெண்களின் தேகசுகம்.

(பத்திராதிபர்.)

முற்காலத்தில் பெண்கள் தேகபலமுள்ளவர்களாகச் சிறந்து விளங்கினார்கள் என்பதை அக்காலத்திய ஆடவர்கள் வீரம் நிறைந்தவர்களாக வாழ்ந்து வந்ததைக்கொண்டு நாம் சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம். தற்காலம் எங்கு பார்த்தாலும் சோம்பலும் முயற்சியின்மையும் மனவலிமையில்லாமையும் நோயும் நொடியும் குடிகொண்டிருப்பதைக் காணப் பெண்களின் தேகசுகம் முன்போல் கவனிக்கப்படவில்லை என்பதை எடுத்துரைத்த லவசியமாகின்றது. நமது அத்தைமார்களும் பாட்டிமார்களும் சிறந்த பலத்துடன் குடும்பக் காரியங்களிற் சலிப்பறுக் கடினமாக வேலை செய்து வந்தார்கள். இவர்கள் மாடு கறத்தல், அரிசி தீட்டல், எந்திரத்தில் மாவரைத்தல், தண்ணீர் இறைத்தல், வீடு மெழுகல், துணிகள் தோய்த்தல், காய்கறிகள் பயிரிட்டு அவைகளுக்குத் தண்ணீரிறைத்தல், சமைத்தல், குழந்தைகளைப் பாமரித்தல் இவைகளை மெத்த சுலபமாகவும் உற்சாகத்துடனும் நடத்திவந்திருக்கத் தற்காலத்தியப் பெண்கள் எழுந்தால் கால்வலி, உட்கார்ந்தால் இடுப்புவலி, படுத்தால் முதுகுவலி, வீட்டுவேலை சிறிதளவு செய்யப்புகுமுன் உடம்புவலி, பிள்ளைகளுக்குப் பால்கொடுத்தால் பலஹீனம், சமைத்தால் மாரடைப்பு இவ்வளவுடன் கஷ்டப்படுவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். இவ்வளவில் வருஷம் ஒரு பிள்ளை பெறுவதுடனல்லாது இடையே அகாலப் பிரசவங்களும் ஏற்படுகின்றன. ஒணான் குட்டிபோல் கையிலொரு பிள்ளையும் பாச்சைக் குஞ்சுபோல இடுப்பிலொன்றும் இத்துடன் வயிற்றில் நான்குமாத கர்ப்பத்துடன் இடறி விழுந்தால் உடனே உயிர்போகும் நிலைமையில் நமது பெண்கள் பலர் வாழ்ந்துவரும் பரிதாபத்தை

என்னென்று சொல்வோம்! பெண்களைச் செம்மையாகப் பாதுகாத்து நோய்நொடியின்றிப் பிரஜைகளை அபிவிருத்தி செய்வதற்காகவே முற்காலத்தினர் பலவாறு விரதங்கள் என்றும் விசேஷ நாட்கள் என்றும் ஏற்படுத்தியிருக்கின்றனர். சுமார் இருபத்தைந்து வயதுவரை முழுதும் பிரமசரியத்தை யனுசரித்துப் பிறகு கலியாணமான காலத்திலும் சமய அனுஷ்டானங்களைக் கைக்கொண்டு இயன்றவரையில் பிரமசரியம் கொண்டு வாழ்ந்தனர். பெண்களும் அடிக்கடி பிறந்த வீடு சென்று ஓய்வெடுப்பார்கள். ஒரு பெண் கர்ப்பவதியான ஆறு வாரத்தில் பிறந்த வீடு சென்று ஐந்தாறு மாதங் கழித்துப் புருஷன் வீடு திரும்புவாள். மீண்டும் எட்டாவது மாதத்தில் பிறந்த வீடு சென்று பிள்ளை பிறந்து ஆறு ஏழு மாதங்களானபின்பே புருஷன் வீடு வருவாள். கோவிலென்றும் குளமென்றும் அடிக்கடி வெளியே உலாவி வருவாள். குழந்தைக்குக் குறைந்த பட்சம் இரண்டு வயதளவும் பால் கொடுத்து வருவாள். இந்தியாவின் துர்ப்பாக்கிய நிலையில் நாகரிக வாழ்க்கையின் காரணமாக ஏழைப் பெண்மக்கள் படும்பாடு மிகப் பரிதாபமே. வெளியிற் சென்ற கணவன் இரவு மணி பத்தடித்தும் வீடு திரும்பவில்லையே என மனக் கலக்கத்துடன் சுற்றிலுமுள்ள குழந்தைகளைச் சமாதானப்படுத்தியவண்ணம் கண்விழித்துச் சிறு சத்தங் கேட்டாலும் திடுக்கிட்டஞ்சித் தனியே உட்கார்ந்திருக்கும் பெண்கள் எவ்வளவோ. பகலில் சமைத்த சாதத்தை வேளைக்குச் சாப்பிடாது அகால போஜனம் செய்து நோய்வாய்ப்படுவோர் எவ்வளவோ. கர்ப்பமாயிருக்குங்கால் வேறு சகாயமின்மையால் திகிலடைந்து இதனாலும் அகாலத்தில் பிரசவித்துந் தோலும் எலும்புமாகக் காலங் கழிப்பவர் எவ்வளவோ. வெளிக்காற்றும் உலாவுதலும் சிறிதுமின்றிக் கூட்டிலடைத்ததுபோல ஒரு வீட்டிலடைபட்டு அடுப்புக்கரியின் புகையிலும் குழாய்த் தண்ணீரின் ஈரத்திலும் காலங் கழிப்பவர் எவ்வளவோ. தற்காலம் நடைபெற்று வரும் குடும்ப வாழ்க்கையை உற்று நோக்கினால் அனேகமாக ஆடவர்களின் சுகானுபவத்தை யுத்தேசித்துமட்டும் அங்கு ஒரு பெண்பால் மணக்கப்பட்டு வாழ்வதன்றிப் பெண் என்றால் அவளுக்கும் நியாயமான வழிகளில் பூரண சுதந்திரமும் குடும்ப நிர்வாகத்தில் முழுப் பொறுப்பும் தேகத்தைப் பாதுகாப்பதில் சுயாதீனமும் கணவனுக்கு நல்லுபதேசம் செய்வதில் முழு அதிகாரமும் இருப்பதாக நினைப்பவர் மிகச் சிலரேயாவர்.

ஆடவர்கள் தங்களைப் பொறுத்தமட்டில் மேனாட்டு நாகரிகத்தைத் தாராளமாகக் கைக்கொள்வதுபோலப் பெண்மக்களுக் களித்தாலும் பாதகமில்லை. அல்லது முற்காலத்தின்படி பெண்களைப் பெருமைப்படுத்தி வாழ்ந்தால் தற்சமயம் பெண்களிடையே ஏற்பட்டுள்ள பல குறைகள் நீங்கிவிடத் தடையில்லை. ஆடவர்களின் படிப்புச் செலவுக்காகவும் ஸ்திரீதனம் பெறும்பொருட்டும் விசேஷமாக ஒரு பெண் மணக்கப்பட்டு அவ்வாடவனின் இன்ப நுகர்ச்சிக்காகமட்டும் குடும்பத்தில் வாழ்ந்து குடும்பத்தில் பொறுப்பற்று, புருஷனுடைய பொருள் வருவாயில் அதிகாரமற்று, சுதந்திர வாழ்க்கையற்று, எண்ணிறந்த மக்களை அரைகுறையாகப் பெற்று நல்ல நிலையற்று, உடம்பில் வலுவற்று, முகத்தில் ஒளியற்று, வாழ்க்கையில் உற்சாகமற்றுக் காலங் கழிப்பாளாயின் அவள் ஹிந்துக் குடும்ப வாழ்க்கையின் உயர்வைக் கவனித்து அவ்வழியே தன் வாழ்நாளைக் கழிக்க ஆவல் கொள்ளல் சிறிதும் சாத்தியமன்று. சமூகம் சீர்திருந்தவேண்டுமாயின் சமூக வாழ்க்கைக்கு வேர்போன்றிருக்கும் பெண்மக்கள் கேவலம் விளையாட்டுக் கருவிகளாக மதிக்கப்படாமல் தேகபலமுள்ள தாய்மார்களாகப் பாவிக்கப்பட லவசியம். மிகவும் முக்கியமாயுள்ள இதுவிஷயப்பற்றி நமது நிருப சகோதர சகோதரிகள் தங்கள் அபிப்பிராயங்களை எழுதுவார்களென எதிர்பார்த்து இவ்வியாசத்தை இத்துடன் முடிக்கிறோம்.

# மனைவியின் கடமை.

(ஸ்ரீமதி K. கோகிலாம்பாள்.)

எனது அருமைச் சகோதரிகளே!

வுண்'விழுப்பட்டய தேசமானது ஆதிகாலமுதல் ணைசை பெறுந்த நமது சகோதரிகளினுல் நிறைநிகுநாள் பெருமைபெற்று வருகிறது. ஆனுல் ஆதிகாலத்திலிருந்த ஸ்திரீகளைப்போல் இக்காலத்திலுள்ள ஸ்திரீகள் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதில்லையென்று நம் பாட்டிமார்களும் இன்னுமுள்ள பெரியோர்களும் சொல்வதை, சகோதரிகளே! நாம் காதினுல் கேட்டிருக்கின்ருேம் அல்லவா?

ஆதிகாலத்தில் ஸ்திரீகள் மாமன், மாமி, கணவன் இன்னும் மற்றுமுண்டான பெரியோர் முதலியவர்களிடம் எப்படி நடக்கவேண்டும் என்பதை அறிந்து அப்படியே நடந்து வந்தார்கள். இக்காலத்தில் சில ஆண்மக்களைப்போலப் பெண்மக்களும் தங்கள் கடமை இன்னதென்று அறியாமல் மாமன், மாமி, நாத்திமாரையும் இன்னும் மற்றுமுண்டான பெரியோர்களையும் மதியாமல் சிலர் தன் கணவனுடைய வார்த்தையைக்கூடக் கேளாமல் தங்கள் இஷ்டம்போல் நடந்து கடைசியில் துன்பப்படுவதை, சகோதரிகளே, நாம் நம் கண்ணுல் பார்த்தும், பிறர் சொல்வதைக் கேட்டும் இருக்கின்ருேம் அல்லவா?

அந்தோ! (அது பெரிதும் பாபம்.) ஸ்திரீகள் எப்பொழுதும் மாமன், மாமி இன்னும் இருக்கும் பெரியோர்களையும் வணங்கி இருப்பார்களானுல் நமது தங்கைமார்கள் புகுந்த இடத்திற்கும் பிறந்த இடத்திற்கும் பெருமை உண்டாகும் என்பது திண்ணம்.

கொண்ட கணவனை மதித்து அவன் வார்த்தைப்படி நடக்கிற ஸ்திரீ கோயில் குளங்களுக்குப் போகவேண்டியது அவசியமில்லை. "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்னும் பழமொழிபோல் ஸ்திரீகள் தன் கணவன், மாமன், மாமி இன்னும் சுற்றத்தாராவது அல்லது அன்னிய மனுஷராவது ஏதாகிலும் சொன்னுல் அவர்களுக்கு நாம் எதிர்த்து ஒன்றும் சொல்லக்கூடாது. அப்படி அவர்கள் நம்முடைய க்ஷேமத்தைக் கோரிச் சொன்னபோதிலும் அவர்கள் நம்மை நல்வழியில் நடக்கச் சொல்லுகிருர்களென்று நினைக்கும் ஸ்திரீகளுக்குத்தான் பதிவிரதை என்னும் பட்டம் உலகில் பெயரெடுக்கும் என்பது திண்ணம்.

கலியாணம் செய்து கொண்டபின் ஸ்திரீகள் தங்கள் கணவன்மார் கல்வியில் சிறந்தவர்களா யில்லையென்றும், பணக்காரரா யில்லையென்றும், கௌரவமுடையவர்களா யில்லையென்றும், அழகுடையவர்களா யில்லையென்றும் மனதில் எண்ணுமல் இவ்வளவுதான் கொடுத்து வைத்தோம் என்று சந்தோஷமடைந்து கணவன்மார்களைத் தெய்வம்போல் பாவித்து அவர்கள் கட்டளைப்படி நடப்பது நமது கடமையாகும்.

சகோதரிகளே! உங்களுக்கு ஒன்றும் தெரியாதென்று நான் எழுத முன்வரவில்லை. சாவித்திரி, தமயந்தி, சீதை, துரோபதை, சகுந்தலை இவர்கள் தங்கள் கணவரிடம் எப்படி நடந்துகொண்டார்கள் என்று, சகோதரிகளே! நாம் புஸ்தகங்களில் வாசித்தும் பிறர் சொல்வதைக் கேட்டும் இருக்கின்ருேம் அல்லவா?

அதுபோல நாமும் நடப்போமாகில் நாம் பரலோகம் சென்ருலும் நம் நல்ல பெயரானது நாடெங்கும் சுற்றிப் பரவுமென்பது திண்ணம்.

# மனோகரி அல்லது மரணத் தீர்ப்பு.

(சகோதரி வி. பாலம்மாள்.)

(128-வது பக்கத் தொடர்ச்சி.)

### 3-வது அதிகாரம்.

முற்றுந் துறந்த முனிவராயினும் பெற்ற தாயை மறக்க வியலுமோ? பெற்ற தந்தையும் பணியக்கூடிய சன்னியாசியும் அன்னையின் அடிவணங்கவும் அவளுக்கு ஈமவிதி முடிக்கவும் கடமைப்பட்டிருப்பின் பெற்றாளின் பெருமையைப் பேசவுமியலுமோ? ஆற்றுவாரற்று அழாதேயெனத் தேற்றுவாரற்று அனாதையாக எனதன்னையின் மரணச்சடங்கை முடித்து அஸ்தியைக் கங்கைமாநதியிற் போடும்நிமித்தம் காசிக்குச் சென்றேன். புனித நதியின் நீரோட்டமும் சாதுக்களின் சகவாசமும் விசுவநாதர் விசாலாக்ஷியின் தரிசனமும் என் மனக் கவலையைத் தணித்துவந்தன. தாயையிழந்த துக்கத்தை ஒருவாறு மறந்து வருஷம் முடிய நடத்தவேண்டிய கிரியைகளையும் நடத்திமுடித்தேன். இதற்கிடையே ஒரு வருஷகாலம் ஒரு நொடிப்பொழுதில் கழிந்தது. என் மனத் தடுமாற்றத்தாலோ அல்லது ஊழ்வினையாலோ எக்காரணம் பற்றியோ காசிக்குப் புறப்பட்டது முதல் வருஷம் முடிய நான் இருக்குமிடம்பற்றியும் என் க்ஷேமத்தைப் பற்றியும் என் மாமனுக்கு எழுதாமலிருந்துவிட்டேன். அவ்வாறே நான் முழுதும் மறந்திருப்பேனாயின்—உலக வாழ்க்கையை வெறுத்திருப்பேனாயின்—உலகப்பற்றை ஒழித்திருப்பேனாயின்—மாயவாழ்க்கையை வெல்லுதல் மனிதருக்குச் சுலபமானதோ? மனதை யடக்கவேண்டுமென்றும் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும், ஆசையை யொழித்து ஆத்மஞான மடையவேண்டுமென்றும் வேதாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன. "வாழ்வாவது மாயம்" என்றும், "உன்னைச் சிங்காரித்து 'உன்னம… கைப் பாராமல் என்னைச் சிங்க… தேன் பராபரமே" என்றும், "காதறு… யும் வாராது காண் கடர்வழிக்கே" என்றும், "காண்பது மழிந்து போகும் காயமு மழிந்து போகும்" என்றும் பெரியோர்கள் பாடியிருக்கின்றார்கள். ஜனசமூகத்தின் நிலையை உற்று நோக்கினால் எட்டாத பழம் புளிக்குமென்ற கதைப்படி நாடிய பொருள் கைகூடாது போமாயின் முடிவில் சிறிதளவு ஞானமேற்படுவதன்றி ஆரம்பத்திலேயே ஆசையை யணுகவொட்டாது தடுக்கக்கூடிய சக்தியைப் பெற்றிருப்பதாகக் காணப்படவில்லை. ஆசையென்ற மொழி முதன்முதலில் ஏற்பட்டு அஃதில்லாமை நிராசையென வழங்குகிறது. ஞானம் எதற்கு? அஞ்ஞானத்தைத் தொலைக்க. வெளிச்சமெதற்கு? இருளைப் போக்க. புண்ணியமெதற்கு? பாபத்தைத் தணிக்க. இதனால் கடவுள் சிருஷ்டியில் எல்லாமடங்கியே இருக்கின்றது. "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்றால் பற்றுதலும் ஆசையுமற்ற மனதில் முயற்சியேது? பகவான் கண்ணன் 'கர்மாவைச் செய்யக் கடமைப்பட்டுள்ளாய், ஆனால் பயனை எதிர்பாராதே' என்று உபதேசித்தார். பரோபகாரத்திலும் மறுமை வாழ்க்கையிலும், ஜனசமூக ஊழியத்திலும், தேசத் தொண்டிலும் பயனைக் கருதாது நடத்தல் அவசியமாயினும் மனிதன் சொந்த விஷயத்தில் முதலில் நினைப்பது பயனைப்பற்றிய சிந்தனையையே. பயனை முதன்மையாகக் கொண்டதே இல்லறமாம். என்னைப்போல் எல்லாரும் இன்புற்றிருக்கவேண்டுமென நினைப்பதே சமூகஊழியம். பயனை யடையமாட்டாது

பரிதபிப்பவருக்கு உதவிபுரிவதே உபகாரம். தனது வாழ்க்கையைப் பயனடையச் செய்து முடித்தவர்களால் மட்டுமே பிறருக்கு உதவி புரியும் சக்தி யேற்படுகின்றது. மனைவி மக்களுடன் வாழ்ந்து பெற்றோரைப் பேணிக் கடவுளை வழிபட்டு நடத்தலே இல்லறம். பெண்ணாசை பெருங்கேடு என்பதை ஆத்மஞானிகள் நிரூபித்தால் அதை இல்வாழ்க்கையில் அனுஷ்டிக்க முடியுமா? இல்லாளைக் கொண்டதே இல்லறமாகையால் இவ்வுலக வாழ்விற்கும் உலக சிருஷ்டிக்கும் பெண்ணே அதிதேவதையாக விளங்குகிறாள்.

நாகரிக உலகிலும் பெண் பிரபஞ்சமாகவே இருக்கின்றது. கடவுள் பெண்ணை எதற்காகப் படைத்தார் என்று வினவினால் ஆடவனுக்காக என்ற பதில் கிடைக்கின்றது. இந்த உண்மையை யறிந்தே வியாபாரிகள் ஆடவருக்கான பொருள்களை விளம்பரம் செய்வதென்றால் அதனிடையே அழகிய பெண்பாலின் உருவத்தைச் சித்திரிக்கின்றார்கள். பெண்மக்கள் சிற்றின்பக் கருவிகள் என்பதை நிச்சயிக்க வேண்டுமானால் தற்காலம் காட்டப்படும் சினிமா படக்காட்சிகளும் அயல் நாட்டுக் கதைகளும் போதிய சான்றாக இருக்கின்றன. மதபோதனையும் பூர்வ சரித்திர ஆராய்ச்சியும் முன்னோர்களின் பெருமையும் இந்தியத்தாயின் உயர்வும் இந்தியப் பெண்களின் ஒப்பற்ற வாழ்க்கையும் இந்திய நாகரிகமும் இன்னதென்று நானறிந்து கொள்ளமுடியுமோ. கலாசாலைகளில் கட்டுக்கட்டாகப் புத்தகங்களைப் படித்துத் தள்ளினேனாயினும் அயலான் ஒருவன் நீ யார் என்று கேட்டால் நான் நாகரிக உலகில் வாழும் மனிதன் என்று சொல்வேனல்லாது இந்தியன் என்று கம்பீரமாயுரைக்கக் கூடியவன்மை என்னிடத்தில் கிடையாது. ஆங்கிலப் புத்தகத்தை ஆதாரமாக்க வியலுமல்லாது பார்புகழ்ந்துரைக்கக் கூடிய பாரதமாதாவின் அந்தஸ்தை பாரதசக்தியை எடுத்துரைக்கும் நிலைமையுமுண்டோ? அயல் நாட்டுப் பெண்கள் அதிமேதாவிகளென்றும் இந்தியப் பெண்கள் மந்த புத்தியுள்ளவர்களென்றும் நினைத்திருக்கும் பேதைமக்களிடையே உயர்நோக்க மேற்பட வழியேது. தாமிழந்த உயர்வை மீண்டும் பெறுவதற்கான முயற்சி கொண்டுள்ள தேசாபிமானிகளின் உழைப்பைப் பின் பற்றுவதாகக் கனவு கண்டுகொண்டிருக்கும் சுயநல வாதிகளின் மத்தியில் நானொருவன்றானே. எனக்கு முக்கிய உத்தேசமும் மாறாச் சிந்தனையுமாக விருப்பது என்னவென்பதை நீங்கள் அறிவீர்கள். அதை நான் இவ்வொரு வருஷகாலமாகத் தள்ளிவைத்ததற்குப் பெருமை பாராட்டிக்கொள்ளல் உசிதமானதே. தாய்க்குச் செய்யவேண்டிய வருஷக் கருமம் முடிந்ததும் சிறிது சிறிதாக மனோகரியின் திருவுருவம் என் மனக்கண் முன் தோற்றவாரம்பித்தது. சாமுத்திரிகா சாஸ்திரப்படி அழகே உருவாக்கப்பெற்ற மனோகரியின் செவ்விய விதழ்களில் தவழும் கபடமற்ற இளநகையை, களங்கமற்ற புன்சிரிப்பை, நினைவுற்றேன்.

வீணாகானமோ! வேணுவின் (புல்லாங்குழல்) தொனியோ! குயிலின் ஓசையோ வெனத் தோற்றும் மனோகரியின் குரலோசை என் செவிகளில் ஒலிக்கத் தொடங்கியது. அர்த்த புஷ்டியும் ஆராய்ச்சியும் தீர்க்க தரிசனமும் தேசாபிமானமும் கொண்டுள்ள அன்னாளின் சம்பாஷணைகள் என் நினைவிற்கு வந்தன. மின்னல் போலொளியும் கன்னங்கறுத்த விழியும் அமுதமொழியும் அன்ன நடையும் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தின் நிறமும் அமைதியுற்ற மனமும் கொண்டுள்ள மனோகரியை என் மனம் நாடிற்று. என் ஹிருதயேச்வரியாகிய மனோகரியை மணந்து என் வாழ்நாளை இன்பமயமாக ஆனந்த மயமாக உற்சாகமயமாக உள்

ளன்பு மயமாக ஒற்றுமை மயமாக உயர்வாக நடத்தக் கருதினேன். என் மனதிற்கிசைந்த மங்கை நல்லாள் மனோகரியுடன் இல்லறம் நடத்துவதால் மரணமடைந்த என் தாயின் ஆத்மாவுக்கும் திருப்தியுண்டாகுமென எண்ணினேன். ஹிந்துக் குடும்பவாழ்க்கையினுடையவும் ஹிந்து விவாக முறையினுடையவும் இந்தியப் பெண்மணிகளுடையவும் லட்சியமறியாது கேவலம் சிற்றின்ப வாழ்க்கையிலீடுபடுவதே இல்லறமெனக் கருதும் நவநாகரிகவாலிப உலகத்திற்கு என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யாது, என் கருத்துக்கிசைந்த மனோகரியுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தத் தீர்மானித்தேன். மனைவிக்கு மணவாளனளிக்கக் கூடிய மனமொற்ற வாழ்விற்கும் கௌரவத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்றவள் என் மனோகரியே என மனமகிழ்ந்தேன். இல்லறத்தைச் சிறப்புடன் நடத்தவேண்டுமென்றும் அதில் என் கடமையை நன்குணர வேண்டுமென்றும் தீர்மானித்தேன்.

தோழர்களே !

மங்கையொருத்தியை மணந்து வாழ்வதில் கஷ்டமென்ன விருக்கிறதென்று நினையாதீர்கள். "இல்லறமல்லது நல்லறமில்லை" எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு—
மிறந்தார்க்கு—மில்வாழ்வா னென்பான் றுணை"

என்ற முதுமொழியைக் கவனித்தீர்களா? அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்குவித புருஷார்த்தங்களையும் நமக்களிப்பது இல்லறமே. இல்லாள், அர்த்தாங்கி, (Better Half) என்றும் ஏற்பட்டுள்ள மனைவி எனக்குற்ற பணிவிடை செய்யுங்கால் பணியாளாகவும் யோசனை கூறுங்கால் மதி மந்திரியாகவும் உண்டியளித் துபசரிக்குங்கால் தாயாகவும் இன்பமளிக்குங்கால் காமக்கிழத்தியாகவும் மக்களை வளர்க்குங்கால் ஆரம்ப ஆசிரியனாகவும் நடந்துகொள்ள வேண்டுமானால் அது எனது புத்தியைப் பொறுத்திருக்குமன்றோ? எனக் களவற்ற இன்பமளிக்கும் மெல்லிய உடல் அடுப்பங்கரை அனலில் வாடவேண்டி யிருப்பதையும் குடும்ப காரியங்கள் செய்யும்போது அவளது அழகிய நெற்றியில் அரும்பும் வியர்வைத் துளிகளையும் நான் சகிக்கவேண்டும். வீட்டு வேலை செய்பவள் நமக்கடிமை என்ற எண்ணத்துடன் குடும்ப நிர்வாகத்தில் அவளுக் களிக்கவேண்டிய அதிகாரம், சுதந்திரம், சமத்துவம் இவைகளை நானளிக்கத் தவறுவேனாயின் என் குடும்பம் நன்கு நடைபெறுமா? என் வீடு தேடிவரும் விருந்தினரை உபசரிப்பதில் அவளுக்கேற்படும் சிரமத்தை நான் பொருட்படுத்தக்கூடுமா? பெண்பால் ஆனாலும் மனித சமூகத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்தால் அவளுக்கும் ஆறறிவும் ஆராய்ச்சியும் ஆற்றலும் உண்டு என்பதை நான் தள்ள முடியுமா? எனதில்லமாகும் ஆஸ்தானத்தில் எனதுள்ளமாகும் சிம்மாசனத்தில் வீற்றிருந்து என் குடும்பமாகும் அரசியலை நடத்தும் அரசி என் மனைவியென்றும், அம்முறையில் அவளுக்கு நான் பணிந்து நடக்கக்கூடிய சந்தர்ப்பம் பல வுண்டென்றும் நான் அறிந்திருத்தல் அவசியமன்றோ?

என் கொள்கைக்கு மாறான குணம் அவளிடமிருப்பின் மெய்யன்பென்ற பாசங் கொண்டு அவளை என் வசப்படுத்திக்கொள்ளல் சுலபமானதோ? என் நிலைமைக்கும் வருமானத்திற்கும் ஏற்றபடி நடந்துகொள்ளும்படி எனக்கவள்மீதுள்ள அன்பை வரையறைக்குட்படுத்தல் எளிதோ? சுத்த ஆகாயமும் சுகாதாரமும் கல்விப்பயிற்சியும் நற்சகவாசமும் ஓய்வும் உற்சாகமும் அவளுக்குக் கிடைக்கச் செய்வதில் நான் சிரத்தை யெடுக்காமலிருக்க வியலுமோ? பெற்றோரைப் பேணல், அண்ணன் தம்பிகளை ஆதரித்தல், சகோதரிகளைக் கவனித்தல் இவைகளால் மனைவியின் மதிமுகமும் வாடாமலிருக்கவேண்டுமேயென்று மனந் தவித்தல் போன்ற கஷ்டங்கள் எனக்கில்லை. என் குடும்ப நிர்வாகத்தில் முழு அதிகாரத்தையும் வகிக்கக்கூடிய தன்மையை மனோகரி பெற்றிருந்தாள். என் ஆசைக் களஞ்சியம், அன்பின் நிலைகளம், இன்பக்கடல், இணையற்ற செல்வம், ஒப்பற்ற துணை, உயர்நவரத்தினம் என நான் மதித்துள்ள மனோகரி பெண்மக்கட்குரிய படிப்பைப் படித்திருந்தாள். அதிருஷ்ட தேவதையை அணுகி வாழ்ந்திருக்க வேண்டுமென்ற ஆவல் என்னைத் தன்வசப்படுத்திக் கொண்டது.

(தொடரும்.)

# அன்னையின் அன்பானது.

(ஸ்ரீமதி நாமகிரியம்மாள்.)

I

ஒருநாள் சரவணய்யர் கிராமத்திலிருந்து ஊருக்குத் திரும்பி வந்ததும் அவர் எதிர் பாராத சம்பவம் நடந்தேறியது. அவரது ஒரே தமக்கை, சர்வ ஏழை, ஓர் சிறு குழந்தையைப் பரதவிக்க விட்டுவிட்டுப் பரலோகப்ராப்தியாய்விட்டிருந்தாள். அது பிறக்கு முன்னமேயே தந்தையை விழுங்கியிருந்ததுமன்றி அதற்குச் சிற்றப்பன், சிறியதாய், பெரியப்பன், பெரியதாய், அத்தை, பாட்டி என்ற ஒருவித பந்துவுமிருக்கவில்லை. ஆகவே விதவை வைதேகி சகோதரனது கால்களைப் பிடித்துக் கெஞ்சினாள். அவர் என்ன செய்வார். மனைவிக்குத் தன் தமக்கை வீட்டிலிருப்பது பெரிய கஷ்டமாகப்படுமென அறிந்து, பாபம்! தமக்கையைத் தேற்றி அவளைத் தனியேயிருத்தி வேண்டியதை மனைவி அறியாமல் ரகசியமாய்த் தந்து அவர்களை ஆதரித்துவந்தார். ஆனால் அந்தச் சிசுவின் விதி மகா கொடியது. ஆறு மாதத்திற்குள் தாயுமிறந்துவிட்டாள். பிறகு வேறென்ன வழி. மாமியான பார்வதியினிடம் தான் ஈசுவரன் அதை விட்டுவிட்டார்.

இன்சொல்லோ வன்சொல்லோ பாடுபடாமல் குழந்தை பெரியதாகுமா? கல்யாணி என்ற அந்தக் குழந்தை ஒருமாதிரியாக மாமன் வீட்டில் வளரலானாள். சரவணய்யருக்கும் ஓர் மகனுண்டு. சரவணய்யருக்கு அவனுக்குத் தன்னோடு காடு, வயல் இவைகளில் உழைத்துவர ஊக்கமில்லையே என்று வருத்தமாயிருந்தது. வரவரக் கோபமாய் மாறியது. சுந்தரனும் அவரை ஏமாற்றிவிட்டுக் கல்யாணியோடு விளையாடுவதிலும் அவளுக்காகத் தாயிடம் பரிந்து பேசுவதும் இல்லாவிட்டால் படிப்பதும் எழுதுவதுமாகவே யிருப்பான்.

சரவணய்யருக்குப் படிப்பில் நம்பிக்கை கிடையாது. எவ்வளவோ பெயர்கள் எம். ஏ. என்றும் பீ. ஏ. என்றும் படித்துவிட்டு சோற்றுக்கு அலையவில்லையா? படித்தால் பண நஷ்டமேதவிர வேலை கிடைப்பது என்ன நிச்சயம்? ஆகவே அவருக்குக் கிராமவாழ்க்கையே சிறந்ததாகப் பட்டது. மகனோ நேர்விரோதமாகவிருக்கிறான். வர வர மகன்மீது மிகவும் கோபமும் வெறுப்பும் கொண்டவரானார்.

கல்யாணி மிகவும் எழில் வாய்ந்தவள். வானம்பாடிப் பறவையைப்போலச் சோம்பல் என்பதே அறியாத அவ்வளவு உற்சாகமுடைய பெண். மாமிக்கு வேண்டிய சகல பணிவிடைகளையும் வீட்டிலுண்டான சகல வேலைகளையும் ஒருவிதத் தவறுதலுமின்றி அவ்வளவு நேர்மையாகச் செய்வாள்.

ஒருநாள் ஏதோ காரணம்மேலிட்டுச் சரவணய்யர் ஓர் வண்டியைப் பேசி அதில் மகனையும் அவனது சாமானையும் ஏற்றி ரயிலடி சென்று டிக்கட்டு வாங்கிப் பட்டணம் சென்றார். பார்வதி கல்யாணியை வினவ "அம்மா, அப்பா அம்மாஞ்சிமேல் மிகவும் கோபித்துக் கொண்டு பட்டணத்திலுள்ள கலாசாலையில் சேர்க்க அழைத்துப் போனார்" என்றாள்.

அவர் வீடு திரும்பியதும் பார்வதி சங்கதி வினவ அவர் மகா கோபத்துடன் "உன் மகன் பிரியப்படி அவனைக் கலாசாலையிற் சேர்த்துவிட்டேன். இனி அவன் சில வருஷங்கள்வரை திரும்பாமலிருக்கவும் ஏற்பாடு செய்து விட்டேன். நம்மைவிட்டுக் கொஞ்ச நாள் பிரிந்திருப்பதே அவனுக்குரிய தண்டனை" என்றார்.

பெற்ற தாய்க்கு இச்சொல்லும் காரியமும் மகா வருத்தத்தைத் தந்தது. ஊரான் மகள்

தங்கள் வீட்டில் சுகமே வளரத் தன் ஒரே மகன் தந்தையின் கோபத்திற்காளாய்க் கடைச் சோற்றிற்குக் காத்துக்கொண்டு பட்டணத்தில் தனிமையாயிருக்க நேர்ந்ததே எனப் பரிதவித்தாள்.

இந்தக் காரணத்தால் வரவர அவளுக்குக் கல்யாணிமீது வெறுப்புத் தட்டியது. இவ்விதமே ஐந்தாறு வருஷம் சென்றது.

ஒருநாள் பெற்ற தந்தைக்குத் தனயனிடமிருந்து ஓர் நிருபம் கிடைத்தது. அதில் அவன் உத்தியோகம் பார்ப்பதாக எழுதியிருந்தான்.

பார்வதி அழலானாள். "எல்லாம் உங்களால் தான். நமக்கிவ்வளவு ஆஸ்தி பூஸ்திதி யிருக்க நம்முடைய ஒரு மகனுக்கு அதை சம்ரட்சித்துக்கொண்டு சௌக்கியமாக விருக்க இடமில்லையா? படிக்கிறேன் என்று போய் அதையும் விட்டுவிட்டுச் சொந்த சிலவுக்குத் தந்தையைக் கேழ்ப்பதா என்ற அகம்பாவத்தால் உத்தியோகம் பார்க்கிறானமே. அது என்ன உத்தியோகம்? நீங்கள் அன்போடு ஒரு கடிதம் போட்டிருந்தால் அவன் நம்மிடம் வந்திருக்கமாட்டானோ?" என அங்கலாய்த்தாள்.

அதற்கவர் உதடு துடிக்க மகா கோபத்தோடு கூறிய பதில் அவளைப் பின்னும் தாக்கியது. "உன் மகன் எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்னடி? அவன் என் மகனோ? இதோ இவள், நமது கல்யாணிதான், என் மகள். என் சொல் தவறாத என்னருமைக் குழந்தை. அவளால் நமக்கு எவ்வளவு உபகாரங்கள் உண்டாகிறது? நீ வியாதிக்காரி. அதனால் நமது வீட்டில் வேலையாள் உண்டா? எல்லாம் அந்தக் குழந்தைதானே செய்கிறது? சிறிதாவது அதிருப்தி காட்டுகிறதா? பணத்தை மகனுக்கென்று மண்ணிற் கொட்டுவதைவிட என் கல்யாணிக் கெழுதிவிட்டு அவளை ஒருவனைக் கைப்பிடிக்கச் செய்து வீட்டோடு வைத்துக்கொள்ளுகிறேன். அவளே என் அந்தியத்தில் என்னைக் காப்பாள். நமது பூஸ்திதிகளையும் நமது பெயர்கெடாமல் பாதுகாப்பாள்" என்றார். அவரால் பின்னும் அங்கு நிற்க முடியாமல் வெளியே சென்றார்.

அவளைத் தாயாக எண்ணிவரும் கல்யாணி தாய் அழுவதைக் கண்டு ஓடிவந்து வினவ, பார்வதி "கல்யாணி, என் மகனுக்கு வரும்படி ஓர் கடிதம் எழுதமாட்டாராமடி. ஆஸ்திகளையும் யாருக்காவது தான் இட்டுவிடுவாராமடி. மகனில்லையாமடி. நீயாவது ஓர் கடிதம் நான் எழுதுவதுபோல் எழுதடி" என்றாள். பேச்சிலேயே எவ்வளவு அடிகள் தண்டனிட்டுவிட்டாள்! கல்யாணிக்குப் பத்துப் பிராயம். உணர்ச்சி என்பது அவளிடம் உபாயமாக விருந்தது. "அம்மா நானிருக்கும்பொழுது நீங்கள் என் அழவேண்டும்?" என்றாள் அச்சிறுபெண், பாபமென்பதையே அறியாத பாவை.

"ஆ என்ன சொன்னாய்? நீ இருந்தால் என் மகனாவாயா? நீ அனாதைப்பெண்! என் மகனாவாயா?" என்றுவிட்டாள் பார்வதி.

## II

இக்கடுஞ்சொல் கல்யாணியை மிகவும் துக்கத்திலாழ்த்தி விட்டது. தான் பலரால் அனாதை என்று கூறப்படுவதை அவளறிந்தவளே. ஆனபொழுதிலும் தான் மிகவும் நம்பிக்கை வைத்திருந்த பெற்ற தாய்க்கொப்பான மாமியே அவ்விதம் கூறிவிட்டாள் என்றால் பிறகு அவளுக்கு வேறென்ன தைரியம் உண்டு. மனதின்கண் அங்கலாய்க்கலானாள். "என்னால் வருத்த முண்டாக நியாயமிருக்கின்றபொழுது என் மாமி அவ்விதம் என் கூறமாட்டாள்? பெற்றமகன் தூரத்தப்பட ஊரான் மகள் நானிங்கிருப்பது என் மாமிக்கு வேதனையாக விராது? ஆ! இந்த தேகமே அனாதையாகப் பிறரால்லவோ தாங்கி நிற்கிறது, இது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, நிற்குமிடம், உட்காருமிடம், படுக்குமிடம் சகலமும் தருமத்தாலல்லவா?

நான் தருமப்பெண்ணல்லவா, ஆகவே எனக்கு அச்சொல் புண்ணாப்பட என்ன நியாயம்?''

ஒருவாறு கல்யாணி தன்னைத் தேற்றிக் கொண்டு அதை மறந்துபோக எண்ணித் தன் வேலைகளைச் செய்துகொண்டு காலங்கழித்து வந்தாள்.

ஏழையைக் கண்டால் "எளக்காரம்'' என்று ஓர் சொல்லுண்டு. அந்த மாதிரி அழகிய சிறு பெண் கல்யாணிமீது மணியன் என்ற ஓர் பட்டிக்காட்டான் கண் நாட்டமாயிருந்தான். அடிக்கடி அவள் தனியே பட்டால் அவளை இழுப்பதும் கேலிசெய்வதும் தன்னைக் கலியாணம் செய்துகொள் என்பதும் இவ்விதமாகத் தொந்தரவிட்டுக் கொண்டேயிருப்பான். ஒரு தடவை அவன் "அடி கல்யாணி! என் வீட்டிற்கு வந்து விடு. நிறையச் சோறு—நல்ல சுகம் கிடைக்கும். அனாதையான உன்னை வா என்றழைத்தால் கூட இருமாப்புக் காட்டுகிறாயே—என்னைக் கலியாணம் செய்துகொள்ளடி,'' என அவளைப் பின் தொடரலானான். கல்யாணி ஓடோடி வீட்டினுள் வந்துவிட்டாள். பார்வதி ஏன் என்று வினவ அவள் நடந்ததைக்கூறி அழலானாள். பார்வதி சமாசாரமறிந்து மகா சந்தோஷத்திலாழ்ந்தாள். ஏனெனில் சுந்தரன், தாயின் கடிதத்திற்கு வருவதாகக் கடிதம் போட்டிருந்தான். வந்ததும் எங்கு கல்யாணியை விவாகம் செய்துகொள்ள ஆசைப்பட்டு விடுவானோ என்று பார்வதி மிகவும் பயந்திருந்தாள். இப்பொழுது கல்யாணியை விவாகம் செய்து கொடுத்துவிட்டால் பிறகு தொந்தரவு நீங்கிவிடுமல்லவா! வந்த வரனைப்பற்றிக் கணவனோடு கூறினாள். "நல்ல ஆஸ்திதி பூஸ்திதியுண்டு. மணியன் அவ்வளவு விகாரமானவனல்ல, கறுப்பு தான், ஆனால் ஜகத்ரட்சகரான கிருஷ்ணனே கறுப்பாய்ப் பிறந்ததாக வன்றோ சாஸ்திரமிருக்கிறது. பெண்ணை இடித்துப்பேச பந்து—யாருமில்லை, போனதும் இவளே வீட்டிற்கு எஜமானி. பெண்ணைக் கொடுத்துக் கலியாணத்தைச் சிக்கிரம் முடித்து விடுங்கள்'' என்று போதித்தாள்.

சரவணய்யரும் ஒரு விதமாய்ச் சம்மதித்தார். சுப்பிரமணியனை அழைத்துச் சொல்ல அவன் தேன் குடித்தாப்போல மிகவும் சந்தோஷத்திலாழ்ந்தான். கல்யாணிக்கென்னமோ அவன் மீது மகா வெறுப்பாக விருந்தது. அவனிடம் அவள் எந்தக் காரணத்தைக்கொண்டு ஆசைப்பட யிடமுண்டு? பாபம், அவளது சம்மதத்தை யார் கேட்பார்கள்? மகளாயிருந்தாலும் பார்வதி கேட்பாளோ என்னமோ சந்தேகம். கலியாணத்திற்கு எல்லாம் சித்தமாய்க் கொண்டிருக்கிறது. கல்யாணி அழுதழுது மனம் நொந்தாள். சுந்தரனைக்கூவி அழைத்தாள். சுந்தரன் எங்கே, பட்டணத்திலல்லவோ விருக்கிறான்? அவளது குணம் உள்ளம் ஓர் சிந்தனையுற்று "அடுத்த தெரு விசாலாட்சி கண்ணுக்கு ரம்மியமான அவளது மாமி மகனைச் செய்து கொண்டாளே, நான் ஏன் என் அன்பான சுந்தரத்தைக் கட்டிக்கொள்வது முடியாது? ஏழை என்றல்லவா? பணமே!'' என்று அழுதாள். அவளை யார் கவனித்தார்கள்!

மிகவும்—மிகவும் சொல்பமாக—கலியாணம் என்ற பெயருடன் மணியனது திருக்கையால் கல்யாணிக்குக் கழுத்தில் மாங்கல்யதாரணம் செய்யப்பட்டாய் விட்டது.

அகஸ்மாத்தாய் அன்று மாலை ரயிலில் சுந்தரன் வீடு வந்து சேர்ந்தான். "யாருக்குக் கலியாணம்—என் கல்யாணி குட்டிக்கா?'' என்றுகொண்டே ஓடோடி வந்தான். 'இன்று என்ன நிச்சிதார்த்தமோ?' எனக்கேட்டான். ஆனால் அதற்குள்ளாகவே ஒரு நாள் விவாகமும், அதற்குள் அது முடிந்து விட்டதையுமறிந்தான். அவனது வியப்பு இவ்வளவு அவ்வளவல்ல, நிலத்தைக் காலால் ஓர் உதை

உதைத்தான். பார்வதி திடுக்கிட்டு அங்கு வந்தாள். "அம்மா, எனக்கேன் சொல்லவில்லை?" என்றான். பார்வதி மாயமாலங்கள் செய்து "எனக்கு எழுதத்தெரியுமா, படிக்கத்தெரியுமாடா? அவர் எழுதவில்லையோ?" என்றாள்.

சுந்தரன் கல்யாணியிடம் ஓடினான், 'கல்யாணி. எங்கே நீ கைபிடித்த அதிர்ஷ்டவசத்தான்? யார் உன்னை அடைந்தது? அவன் எங்கே?" என்று அவளது கைகளைப் பிடித்து வினவினான். கல்யாணி ஸ்தம்பித்து நின்றாள். கல்யாணியின் மனம் முழுவதும் சுந்தரத்திடமே பதிந்திருந்தது. சிறு பெண்ணுக்கென்ன தெரியும்? "இந்தத் தாலியல்லவோ நம்மைப் பிரிக்கிறது" என்று தான் அவளுக்குப்பட்டது. "ஓர் சிறு கயிறு" என எண்ணிக் கொண்டாள். அதன் மகிமையை அவள் எங்ஙனமறிவாள்?

"யாரை விவாகம் செய்து கொண்டாய் கல்யாணி?" என்றான் சுந்தரம். அதற்குள் யாரோ அங்கு "கல்யாணி, உன் அகமுடையானை யாரோ பார்க்கவேண்டுமாடி, எங்கே யடி—மணியா—மணியா," என அழைத்தனர்.

சுந்தரம் மலைத்து நின்றான். கல்யாணியைப் பரிதாபத்தோடு பார்த்தான். "கல்யாணி—என் கற்பகமே—அந்தக் கிராதகப் பயலையா மணந்தாய்? அவன் பெருத்த மிருகமாயிற்றே, மனிதத்துவமே அவனிடமில்லையே. நீயே அவனை வரித்து விட்டாயோ கௌரி மாதிரி" என்றான்.

கல்யாணிக்கு துக்கம் தாங்க முடியவில்லை. கண்களிலிருந்து அருவி போடியது.

## III

விவாகமானதும் மணியன் தன் அழகிய சிறு மனைவியுடன் தன் "சிறு சுவர்க்கம்" என மதிக்கும் அவனது பட்டிக்காட்டிலுள்ள வீட்டிற்குச் சென்றான். சென்று தன் ஆஸ்தி பூஸ்திதிகளை, மாடுகன்றுகளை, வீடுவாசல்யாவற்றையும் மனைவிக்குக் காட்டிப் பெருமைப்படலானான். அவனைப்போலக் கருமியில்லையென்பது ஊரறிந்த விஷயம். அவன் இதுவரை பிரம்மசாரியாகவிருந்த காரணமும் அதுவே. அடுத்தாற்போலக் குடியிருந்த அவனது தமக்கை தன் ஒத்தாசையின்றித் தம்பிக்கு முடியாது என்று எண்ணத் தொடங்கியதை அறிந்தே அவளைச் சிட்சிக்க எண்ணி மணியன் பேரழகுடைய கல்யாணியை சிறைப்பிடித்தான்.

கல்யாணிக்கு எல்லாம் அதி ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. இப்படியும் ஓர் வீடு உண்டோ என எண்ணினாள். எங்கும் உதவாத சாமான்கள்! உதவும்படியானது ஒன்றுமில்லை. அவைகள் வீட்டிலிருப்பானேன்? அவைகளைப் பிரியக்கூட மணியன் மனம் செல்லாததே காரணம். எங்கும் ஒடிந்த சாமான்கள்! ஒடிந்த பொருள்கள்! உதவாத சாமான்கள்! வீண் குப்பை கூளங்கள்! மாமன் வீடு இதற்கு அத்தாட்சியாக எவ்வளவு சிறப்பாயிருந்தது! மாமன் வீட்டிற்கு இது திருஷ்டி பரிகாரமாக அவள் எண்ணினாள். ஆனால் அடுத்த க்ஷணம் தன் கடமையை அறியலானாள். இந்த வீடு அவளுடைய சொந்தவீடல்லவா? இங்கு அவள் அனுதைபல்ல அல்லவா? வீட்டின் மனையாளான தன்னுள் அல்லவோ இவைகள் அடங்கியிருக்கின்றன? இவைகளைச் சீர்திருத்த வேண்டியவள் அவளல்லவோ?

அதற்குள் மணியன் வந்து "என்னடி தடியாட்டமா நிற்கிறாய்? சாப்பாடு சமையற்காரன் செய்வான் என்று எண்ணினாயோ?" என்று அதட்டிச் சென்றான்.

அதற்குள் அவனுக்கென்று தெய்வமருளிய தமக்கையார் வந்து எல்லாவற்றையும் அலட்சியமாகக் கவனித்துவிட்டு "என்டி நிற்கிறாய்? இதற்குள் என் தம்பி என் வீட்டில் சாப்பிட்டு

ஜரித்துக்கொண்டுகூட இருப்பான். நீ சமைய லுக்கு அடுப்புக்கூட மூட்டவில்லை! ஏனடி?'' என்றாள்.

கல்யாணி பயந்து நின்றாள். "அக்கா, என் பெட்டியில் மடிப்புடவையிருக்கிறது. பெட்டியை எப்படி உள்ளே கொண்டு வருவது? அவர் வேலையாயிருக்கிறாரோ என்னமோ! நீங்கள் சற்றுகைகொடுத்துப்பிடிப்பீர்களா?'' என்றாள்.

ருக்மணி என்ற அவள் நாத்தி ஓர் பார்வை பார்த்து விட்டு வெளியேறி விட்டாள்.

கல்யாணி மெதுவாக வாயிலண்டை வந்தாள். உடனே அவள் ஏதோ நினைத்துக் கொண்டவள் போலச் சற்று கூவினாள்.

மணியன் மாடுகளுக்கும் அவனது குதிரைக்கும் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தான். "ஏனடி கத்துகிறாய்?'' என்றான்.

அவளது பெட்டி கீழே கிடத்தப்பட்டுத் திறந்து கிடந்தது. அவள் விரைந்து சென்று அதைத் திறந்து பார்த்து மனமிழந்தவள்போலானாள். கணவனை எறிட்டுப் பார்த்தாள். அவளது செய்கைகளைக் கவனியாததுபோலக் கவனித்தான் மணியன்.

"என்னடி தேடுகிறாய்?''

"என் மாமி கொடுத்த நூறு ரூபாய் பணம் காணவில்லையே'' என இரைந்தாள் கல்யாணி.

"பெண்களுக்குப் புருஷன் இருக்கையில் பணம் எதற்கடி? எவனோடாவது ஓடிப் போகவா? நானிருக்கும்வரை உனக்கு ஊண், உடை கொடுக்கக் கடமைப்பட்டிருக்கையில் உன் கையில் எதற்கடி பணம்? நீ ஏதாவது அங்கிருந்து திருடிக்கொண்டு வந்தாயோ என்று சந்தேகப்பட்டு உன் பெட்டியை வந்ததும் பார்த்தேன். அதை எடுத்துச் செலவழித்துவிட்டேன்.''

கல்யாணிக்கு மனம் எவ்விதமாயிருக்குமோ அந்த ஸ்திதியிலுள்ளவர்களால்தான் ஊகிக்க முடியும். சுந்தரனுக்கிவன் எந்த வகையில் ஈடாவான்? தெய்வத்தை இவள் புஷ்பத்தால் பூசித்திருந்தால் இந்தக் கணவனை அடைந்திருப்பாளா என்பது சந்தேகம்! கல்யாணி மனம் புண்ணுயிற்று.

## IV

இதன் நடுவே சுந்தரன் கல்யாணியைப் பார்த்துப்போக அடிக்கடி அவர்களது வீட்டிற்குக் காலையில் வந்து மாலைவரை இருந்து போவது வழக்கம். ஆனால் அச்சமயங்களில் எல்லாம் மணியன் அநேகமாய் வீட்டிலிருப்பதில்லை. அலுவலாய் வெளியே சென்றிருப்பான்.

அவனது கபடமுற்ற தமக்கைக்குமணவியையும் கணவனையும் முறித்துவிட ஏதாவது சாக்குப் போக்கு அகப்படாதா என்று சுந்தரமும் கல்யாணியும் தனித்திருக்கும்பொழுது திருட்டுத்தனமாய் அவர்களைக் கவனிப்பதே வேலையாகவிருந்தது. மணியன் சமுசாரமற்றுப்போனால் சொத்தனைத்தும் தன் மக்களையே சாருமல்லவா?

ஒரு நாள் மணியன் வீட்டிலிருக்கையிலேயே சுந்தரன் வந்தான். சுந்தரன் சற்று படித்தவன் என்று அவனிடம் மணியன் ஆசையாய்த்தானிருந்தான். "அடீ கல்யாணி, அம்மாஞ்சி விருந்தாளியாயிருக்கிறான். எல்லாம் சடுதியில் செய்'' என்று உத்தரவிட்டான்.

அச்சிறுபெண் நகரவாசம் மாதிரி கோகோ பானமும் (பார்வதி கொடுத்தனுப்பியது) உப்புமாவும் ஒரு விநாடியில் பரிவாகச் செய்துவந்து கொடுக்கலானாள். முதலில் சுந்தரத்துக்கீந்து பிறகு கணவனுக்கீந்தாள். மணியன் பொறுமையோடு வாங்கி அவள் திரும்பியதும் கோகோ பானத்தை அவள்மீது கொப்பளித்து உப்புமாவை அவள்மீது விட்டடித்தான். சுந்தரனுக்கு மீசை துடித்தது.

அங்கம் பதறியது. ஆனல் அவனுக்கென்ன உரிமை உண்டு? மணியனுக்கு மெய்ப்பிக்க அன்போடு தனக்களித்த உண்டியை யருந்தி எழுந்து நின்ருன்.

மணியன் உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்தான். சுந்தரன் அவன் மனைவியை அடித்திருப்பான் என்றெண்ணி மகாவேதனைப் படலானன்.

சுந்தரன் வெளியே புறப்படுவதைக் கண்ட மணியன் "சுந்தரம், மழையில் என் போகிருய்?" என்ருன்.

சுந்தரன் திரும்பிவந்து "ஓர் குடையிருந்தால் கொடு" என்ருன்.

"எங்கள் வீட்டில் குடையிருக்குமா, சுந்தரம்? என் இப்பொழுதே போகிருய்? நானில்லாவிட்டால்கூட மாலைவரை இருக்கிருயாமே, நானிருந்தால் இருக்கமாட்டாயா? இருந்துவிட்டு, நாளைக் காலை மழை ஓயும், பிறகு போ" என்ருன்.

சுந்தரமும் சரியென ஒப்புக்கொண்டான். ஏனென்ருல் சமயம் அகப்பட்டபொழுது குழந்தை கல்யாணியைத் தேற்றிவிட்டுப் போகலாமல்லவா?

"அடி, சீட்டுக்கட்டு கொண்டுவா" எனக் கூவினன் மணியன்.

"சுந்தரம், நான் பெண்டாட்டியின் புடவையைப் பிடித்துக்கொண்டு ஓடுகிறவனல்ல. சுதந்திரமானவன்" என்ருன் மார்பைத் தடவிக்கொண்டு. சுந்தரம் அவனது மிருகத்தனமான நடவடிக்கைகளைக் கண்டு கல்யாணிக்காக வருந்தினன்.

அதற்குள் கல்யாணி வேறு ஓர் சேலை கட்டிக்கொண்டு ஓர் பாயும் சீட்டுக்கட்டுமாய் வர சுந்தரன் அதை வாங்கி விரிக்க மணியன் அதற்குள் அதைப் பொருதவனுய்ச் சரேலென அவளது கையிலிருந்த சீட்டுக்கட்டைப் பிடுங்கிக்கொண்டான்.

கல்யாணி எட்டி நின்றபடி யிருந்தாள்.

மணியன் சீட்டாட்டத்தாலேயே ஆஸ்தி சேர்த்ததாகப் புகார். அந்தப் புலியோடு பச்சைப் பாலகன் சுந்தரன் ஓர் பத்து ரூபாய் பணத்தோடு சீட்டாட ஆரம்பித்தால் அது எம்மாத்திரம்?

கல்யாணி பல ஜாடைகள் காட்டியும் சுந்தரமறிவதாகக் காணேம். சிறுவயதின் பான்மை! அன்பின் பாசம்! சகோதரத்வம்! "சுந்தரம்! போ! வீட்டிற்குப் புறப்படு. மணி ஆய்விட்டது" என்ருள். மணியன் மனைவியை வெரித்துப் பார்த்தான். "ஓகோ! ஏது, நீ உன்னை அறியவில்லையோ? உன் புருஷன் யார்? நானு, அவனு? என்னை அல்லவோ நீ ஜாக்கிரதைப் படுத்தவேண்டும்?" என்ருன்.

சுந்தரத்துக்கு இது அதிகமாய்விட்டது. எழுந்து சென்ருன்.

இவ்விதம் பல தடவைகளில் மணியனது குணங்களைக் கண்டறிந்து சுந்தரன் தன் அன்பான கல்யாணிக்காக மனம் வருந்தினன்.

ஒரு தடவை கல்யாணி தனித்திருக்கையில் சுந்தரன் வந்து சேர்ந்தான்.

"அடி குழந்தாய்! உனக்கு என் இந்த மாதிரி புத்தி சென்றது? எதனுல் அவனை மோகித்தாய்? அவனுஸ்தி பாஸ்திக்காக எமந்தாயோ? என் நீ எனக்கு ஒரு வரி எழுதவில்லை? அவனது ஆசை உன்னை விழுங்கிவிட்டதோ?" என வினவினன் சுந்தரன்.

தனது கடமைகளைக் கல்யாணி அறிந்தவள். கணவன் கெட்டவன் என்று அவள் கூறுவது நியாயமாகுமா? தான் ஒழுங்காக நடப்பதிலிருந்து அவனைத் திருத்த முயல்வது அவளது கடமையன்ருே? இதை வெளியே கூறுவது அற்பத்தனமன்ருே? ஆனல்—சுந்தரன், அவ

னது இன்னுயிர்த்தோழன், சிறுமையிலிருந்து உயிர்க்குயிராகக் கருதப்பட்டவன், நண்பன், அம்மாஞ்சி, சகோதரனுக் கொப்பானவன், பல மாதிரி கூறுவானேன்? அவளுடைய சிறு மனதென்னும் ஜகத்தில் வியாபித்திருந்த சந்தோஷம் அவன் தான். வந்த அழுகையை அவளால் அடக்கமுடியவில்லை.

“சுந்தரம், என் கதை ஓர் உண்மைக்கதை. உன்னையே எண்ணியிருந்தேன். நீயே தான் என் ஹிருதய குடீரத்தில் தெய்வமாயிருந்தாய். ஆனால் அதை நினைப்பது பாபம்! உன் தாய் என்னை அனாதை என்றும் வீடு வாயிலற்ற அனாதை என்றும் இவரை மணக்காமற் போனால் தெருவே வீடு என்றும் ஆகாசமே அதன் கூரை என்றும் என்னைப் பயமுறுத்தி இவரிடம் என்னைத் தாரை வார்த்து விட்டாள். நமது வகுப்பில் விவாகம் வேண்டாம் என்று சொல்லும் சட்டமிருந்திருந்தால் நான் உனக்காகத் தெருவில் கூட இருந்திருப்பேன்! இல்லையே!—பெண்களை நமது சமூகம் விழுங்கி விடுகிறதே” என்றாள்.

சுந்தரத்தின் கண்கள் சிவந்தன. கல்யாணி அதை அறிந்து அவனது கைகளைப் பிடித்து “சுந்தரம்—நீ என் சகோதரனுக் கொப்பானவன். நீங்கள்—யாவரும் அருகேயிருக்கையில் எனக்கென்ன குறைவு? அவர் என்னிடம் ஆசையில்லாமலில்லையே! அடிக்கிறதில்லையே! பட்டினி போடுவதில்லையே” என்றாள்.

சுந்தரம் அவளை அணைத்து ஒரு முத்தமீந்தான். அவ்வளவே! அன்பினாலிருக்கலாம்! பரிதாபத்தாலிருக்கலாம்! தன் சகோதரி என்ற எண்ணத்தாலிருக்கலாம். ஆனால்! ஆனால் கொடியஜகமன்றோ! கெட்டது தானே நிலைநிற்கும். இவர்களைத் தூரவிருந்து ருக்மணி கண்டு கொண்டாள்.

## V

சிறிது நாட்கள் சென்றன. சுந்தரன் பார்வதியிடம் தனக்கு ஊரிலிருக்கப் பிரியமில்லை என்றும் தான் உத்தியோகம் பார்த்துக்கொண்டு போய் விடுவதாகவும் கூறி வந்தான். பார்வதி வியந்தாள், வினவினாள்.

சுந்தரன் சினத்தோடு “அம்மா! நான் எண்ணியிருந்ததனைத்தையும் நீ உன் மோசமான புத்தியால் பாழாக்கின பிறகு எனக்கிந்த இடத்தில் என்ன வேலை?” என்றான்.

பார்வதி என்னவென்று வினவ,

“உன்னைத் தாயென்று அழைப்பதும் பிசகு. அந்தக் குழந்தையை கிராதகப் பயலுக்கென்ன காரணத்தை முன்னிட்டு நீ விவாகம் செய்தாய்? என் என்னைக் கேழ்கவில்லை? என்னை உத்தேசித்தேயன்றோ?” என்றான்.

பார்வதி மாயமாலங்காட்டி “எனக்கெழுதத் தெரியுமா, படிக்கத் தெரியுமாடா, உன் அப்பா நல்ல வரன் என்று கட்டிக் கொடுத்தார். உன் மீது கோபத்தால் உனக்கு எழுத வில்லை போலும்” என்று பதிலுரைத்தாள்.

ஒரு தடவை பார்வதி மிகவும் சொல்லியனுப்பியதின் மேல் கல்யாணியை மணியன் ஊருக்கு அனுப்பியிருந்தான்.

பார்வதி மகளை அணைத்து சுகதுக்கங்கள் விசாரிக்க அவளும் சற்று அழுதுவிட்டு “அம்மா நீங்கள் ‘கணவனும் மனைவியும் பழகப்பழக நூலும் ஊசியும் போல அவர்கள்’ என்று கூறும் நம்பிக்கையில் தான் உஜ்ஜீவிக்கிறேன். அவர் என்னைத் துன்புறுத்துகிறாரில்லையே—அன்பற்றில்லையே” என்றாள். பணத்தை என்ன செய்திருக்கிறாய் என்று பார்வதி சந்தேகப்பட்டுக் கேழ்க அவள் பதிலுரைக்க வில்லை. என்? தானும் கணவனும் ஒன்றுபட்ட பின் தங்களுக்குள் எனது, உனது என்ற ஒரு விதப் பொருளுமிருப்பது கூடாதல்லவா!

"குழந்தாய்! தினமும் நீ கணவனிடமிருந்து அன்பையே எதிர்பார்ப்பது முடியாது. தேவாதி தேவர்கள் முன் அவன் சத்தியம் செய்திருந்த போதிலும் இந்த உலகம் கஷ்டமான உலகமல்லவா? கஷ்டம், சுகம், இன்பம், துன்பம் மாறிமாறித்தான் வரும். பெண்கள் பொறுமையோடு நடப்பதில்தான் அவர்கள் சுகமடைய வழியுண்டு. மணியன் அழகனல்ல."

"அவரது குணத்தை நான் அப்பொழுதே அறிவேன் அம்மா. நான் அவரைப்பற்றி எண்ணியமாதிரி தான் அவரிருக்கிறார் அம்மா."

"உன் மீது அவன் ஆசையாயில்லையா, குழந்தாய்?"

"ஆசையற்று என்னை யன்றி பரஸ்திரீகளிடம் அவர் செல்வதில்லை அம்மா!"

பார்வதி மகளை வியப்புடன் உற்றுப் பார்த்தாள். "எனக்குத் தெரிந்திருந்தால் உன்னை அவனுக்கு கொடுக்கச் சம்மதித்திருக்க மாட்டேன் கல்யாணி. நல்லதாய் முடியும் என்றுதான் மோசம் போனேன்" என வருத்தப்பட்டாள். உடனே கல்யாணி "யாருக்கும் இந்த உலகத்தில் சந்தோஷம் கிடையாதம்மா. விவாகத்தால் யாரும் சுகமடைவதில்லை. அறிந்த விஷயமே. நமது வகுப்பில் விவாகமில்லாது இருந்து விடலாம் என்றிருந்திருந்தால் நான் உங்களை விட்டுவிட்டு விவாகம் செய்துகொண்டே யிருக்கமாட்டேன்.

"ஆனால் உண்மையாக எனது வாழ்வுதான் மிகவும் கஷ்டமானதுஎன்று எண்ணக்கூடாது. என்னைவிடப் பரிதாபகரமான பெண்கள் எவ்வளவோ பெயர்களுண்டு. என்னிடம் நீங்கள் சிறு வயதில் அளவற்ற அன்பு பாராட்டி வளர்த்து விட்டதால் தான் எனக்கிப்பொழுது புருஷன் வீட்டில் மனம் கஷ்டப்படுகிறதே யன்றி வேறல்ல" என்று அவளைத் தேற்றலானாள்.

"அம்மா, சுந்தரம் இங்கேயே யிருப்பது பற்றி நீங்கள் சந்தோஷப்படுவீர்களல்லவா?"

"இல்லையேடியம்மா—அவன் உத்தியோகம் பார்த்துக்கொண்டு ஊருக்குப் போகிறானமடீ" என நொந்துகொண்டாள் பார்வதி.

"அம்மாஞ்சி என்ன? குழந்தையா! அவனுக்கும் வயதாயிற்றல்லவா? கணவனைப் போலவே தான் மகனும். வயது வந்த மகன் பெற்றோர்களிடம் பிரீதியற்றுப் போகமாட்டான். இருந்தாலும் அவனுக்கு வயது வந்தால் இன்னும் மற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டி வருகிறதல்லவா? அவனுக்கும் சுயேச்சையாயிருக்கவேண்டும் என்றிருக்கும். உத்தியோக ஆசை விழுந்து விட்டது, போகிறான்; இதனால் உங்கள் மீது ஆசை போய்விட்டது என்று அர்த்தமாமோ?"

பார்வதி கண்களைத் துடைத்துக்கொண்டு "கல்யாணி, அவனை 'உமாபதி அய்யர் மகள் லட்சுமி ஏகபுத்திரி, திரண்ட சொத்து உன்னைச் சேரும்; செய்துக்கொள்ளடா,' என்று எவ்வளவோ சொல்லியும் கேளாமல் ஓடுகிறானடி" என்றாள்.

கல்யாணி சிரித்தாள். "அந்தப் பெண்ணின் பணத்தால்தானா அம்மாஞ்சி பிழைக்கவேண்டும்? அந்தக் குரூபியை எப்படி அம்மா அவன் ஒப்புக் கொள்வான்?" என்றாள்.

பார்வதி வீட்டில் கல்யாணியை யிருக்கும்படி சொல்லி, கோவிலுக்குச் சென்றாள்.

தாய் வெளியே சென்றதை அறிந்த சுந்தரம் கல்யாணியிடம் வந்தான்.

கல்யாணி சந்தோஷமாய் "வா சுந்தரம், நீ என் ஊருக்குப் போகிறாய்? பெற்ற தாய் வியாதியாயிருக்கிறாளே. அவளைக் கவனிப்பது யார்? உன் கடமையன்றோ? உன் வழிகள் தான் அவளை இவ்வளவு தேக அசௌக்கியப்

படுத்தியது. நீ என் லட்சுமியை மணந்து கொண்டு விட்டோடு இருந்துகொண்டு அவளைச் சௌக்கியமாக வைத்துக் கொள்ளக் கூடாது? நீ புருஷன், உன் வருத்தங்களைப் பல விதத்தால் மறந்து விடலாம். பெண்கள் மறப்பது எப்படி? உன்னையே தானே அவள் நம்பியிருக்கிருள்!" என்று பார்வதிக்காகப் பரிந்து பேச, சுந்தரன் அவளை உற்றுப் பார்த்தான். "கல்யாணி, நீ இங்கிருக்கும்பொழுது நான் ஊருக்கு எதற்காகப் போகிறேன்? போவதில்லை. உனக்காகவே காத்திருந்தேன், படித்தேன், ஓடிவந்தேன். நீ யாரை, யாருக்காக இவ்வளவு பரிந்து பேசுகிருயோ, அந்தப் பெண் எனும் பேய் உன் வாழ்வையே திருப்பி விட்டு உன்னை நசித்துவிட்டதை நீ அறிந்தாயில்லை. அந்தப் பேய்க்காக வாதாடுகிருய். எப்படி அவளை நான் என் தாயெனப் பாராட்டுவேன்? என்னை ஆசை காட்டி வஞ்சித்துப் பணத்திற்கு அடிமையாக்க எண்ணும் பிடாரியல்லவோ அவள். மகனை வஞ்சித்ததுமன்றி நம்பின பெண்ணை நசித்துவிட்ட கிராதகியல்லவோ அவள்" என்று சொன்னுன். கல்யாணி பயந்துபோனுள். "அண்ணு, அண்ணு, பேச வேறு பேச்சுகளில்லையா? நான் அன்னியப் பெண்ணுய்விடவில்லையா? ஒழுங்காய்ப் பேசேன்" என வேண்டினுள் கல்யாணி.

சுந்தரன் வெறிபிடித்தவன்போலிருந்தான். "எப்படி நீ அன்னியவளாய் விடுவாய்? உன்னை அவ்விதம் செய்ய யாருக்கு உரிமை? அதை மாற்றிவிட என்னுலாகும். கல்யாணி, அந்தப் பாபியின் பேச்சைவிடப் பேச எவ்வளவோ பேச்சுகளுண்டு. ஆனபொழுதிலும்— ஆ! ஓடாதே." எனெனில் சுந்தரன் கல்யாணியைப் பின்பற்றுவதைக் கல்யாணி அறிந்து, பயந்தவளாய்த் தன் ஊரை நோக்கி விரைக்க விரைக்க ஓடிக்கொண்டிருந்தாள்.

அதற்குள் பார்வதி வர மகனின் முக விகாரத்தை யறிந்து பயந்து பேசாமலிருந்துவிட்டாள்.

## VI

கல்யாணிக்கு பயத்தால் தான் செய்வது என்னவென்றே புரியவில்லை. பட்டிக்காட்டிற்கும் ஊருக்கும் நடுவேயுள்ள ஓர் பிள்ளையார் கோவிலண்டை ஒரே மூச்சாய் ஓடிவந்து நின்றுள். "பிள்ளையார் பெருமானே! சகலர்க்கும் தயை அளிக்கும் சர்வேச்வரனே! கேட்கும் வரனையளிக்கும் வரப்பிரசாதகனே! பிள்ளையிலார்க்குப் பிள்ளை வரமளிக்கும் பிள்ளையார் கோமானே! இன்பமிலார்க்கின்பமூட்டும் இன்பவள்ளலே! ஆபத்தில் வந்துதவி புரியும் ஆபத்பாந்தவனே! ஈச்வரா! என்னை அந்தப் பாதகன், அந்த வெறியனிடமிருந்து காப்பாற்றும்" எனக் கதறினுள்.

சுந்தரத்தின் நடவடிக்கைகள் அவளுக்கு அருவருப்பா யிருந்தன. ஏன்? அவன் தனக்காகப் பரிதாபப்பட்டபொழுதிலும் தன்னிடம் ஒழுக்கமற நடந்தானல்லவா? தன் வாழ்வை மறதியாகத் துலைக்க வழிவிட்டுக் கொடுத்தானல்லவா?

பாபம்—அவ்வேழைப்பெண்ணுக்கு அச்சமயம் அவளது நினைவே அவளுக்கில்லாமலிருந்தது.

விதிவசம்! மணியன் இதற்குள்ளாக சகோதரியிடமிருந்து ஒரு மாதிரியாக சுந்தரத்திற்கும் கல்யாணிக்கும் நட்பு விகாரமானது எனக் கிரகித்துக்கொண்டு அதே வேதனைப்பட்டு மனைவியின் மென்னியைத் திருகிவிடுவதும் சரியே என யோசித்தான். என்ன காரணத்தாலோ திடீரென அவளைத் தன் வீட்டிற் கழைத்து வந்து விடுவதே சரியென எண்ணி ஊரை நோக்கி அன்று தான் புறப்படலானுன். கல்யாணி—'கிராதகப் பயலிடமிருந்து காப்

பாற்றும்' என்ற சமயமும் அவன் அங்கு வந்த சமயமும் ஒன்றாக முடிந்தது. இச்சொல் தற்புத்தியே ஆதாரமாய் உடைய மணியனுக்கு வேறு விதமாக மனதிலேறியது. மனைவியைத் தரதர வென்று பிடித்து இழுத்து நிறுத்தி "பாதகி—இரவில் நீ ஏனடி வீட்டை விட்டு வெளிக் கிளம்பினாய்? நீ கேழ்க்கும் வரனைப் பகலில் கேட்டால் ஊரார் கேட்டு விடுவார்கள் என்றா? இல்லை—இரவில் பிள்ளையார் தூங்கும் பொழுது கேட்டால் அவருக்கு அந்தப் பாபம் தெரியாமல் வரனளித்து ஏமாந்து போவார் என்றா? உன் கூட அந்தப் பயல்வந்தானாமே—எங்கே? "என்று கூறி ஓர் உதை உதைத்து "நட முன்னே'' என்றான்.

கல்யாணி ஜகத்ரட்சகனைத் தான் அண்டி நின்றாள். கணவனிடம் கூறுவதிற் பயனில்லை என அறிந்தாள். பேசாமல் பின் தொடர்ந்தாள். இருள்மயம்! ஒரே இருள்! காரிருள்! கல்யாணியை விதி பலமாகப் பின்பற்றியிருந்தது. ஓர் பெரிய பாறாங்கல் தடுக்கி மணியன் குப்புறவிழுந்து மூர்ச்சையானான். காலில் பலத்த காயம். கல்யாணி ஓடின ரத்தத்தைத் தன் முன்றானியைக் கிழித்துத் துடைத்துக் கால்களைக்கட்டி அவனை மூர்ச்சை தெளிவித்தாள்.

வலியின் கொடுமையோ என்னமோ? மணியன் என்ன எண்ணினானோ? "நீ முன்னே நட'' என்றான் பயங்கரத்துவனியில். கல்யாணி நடுநடுங்கி—பாபம் சிறு பெண்—பேசாமால் முன் நடந்தாள்.

திடீரெனத் திரும்பிப் பார்த்தாள். கணவன் குனிந்து நிமிர்ந்ததாக அவளறிந்தாள். ஆனால் சமுசயப்படாமல் ஏதோ காரணம் என்றெண்ணிப் பின்பாராமல் முன் நடந்தாள். இரண்டடி வைத்திருப்பாள். அவள் பின் மண்டையில் ஓர் பெருத்த கல்லடி விழுந்ததுதான் அவளறிவாள். பிறகு மயக்கமாய் விழுந்து விட்டாள். மணியன் வீட்டை நோக்கி ஒரே ஓட்டமெடுத்தான். என்னே நமது பச்சைக் குழந்தைகளின் பரிதவிப்பு! சிறு பெண்களின் வாழ்வு! ஜனசமுகமே, இன்னமும் உனக்கு உன் மக்களின் துயரமறிய வழியில்லையோ?

அவனது முகம் ஓர் பேயினுடையது போலிருந்தது. அவனது புத்தி ஸ்வாதீனத்திலிருப்பதாக அவனுக்கே தோன்றவில்லை. வழியில் அவனது தமக்கை சந்தித்து "என்ன விபரீதம் நேர்ந்தது? காலில் என்ன கட்டு? யார் உன்னை அடித்தது? எங்குபோயிருந்தாய்?'' என்று பல மாதிரி கேழ்க அவன் அவளை ஏய்க்கப் பலமாதிரி பதிலளித்து "அந்த முண்டையை அழைத்து வரப்போனேன்—வழியில் இருட்டில் கல்தடுக்கிக் காலுடைந்தது'' எனப் பொய்யுரைத்து நடந்ததை முழுவதும் கூறாமல் வீட்டினுள் ஓடிப்பொத்தெனச் சாய்ந்தான். மணியனுக் கேற்றவளாகவன்றோ அவனது தமக்கையும் இருப்பாள்! கால்கட்டுத் துணி அவனது மனைவியின் முன்றானியுடையது தான் என அறிந்து உண்மையாக நடந்தவைகளை அவள் மனதிலேயே ஊகிக்கலானாள். பிறகு மெதுவாக உள்ளே வந்து தம்பிக்கு சிகித்சை செய்யலானாள்.

"அடி, அதென்ன சப்தம்?'' என்பான். "அடி அது யாருடைய நிழலடி?'' என்பான். கைகளை நெரிப்பான். அடிக்க ஓங்குவான். வெரித்துப் பார்ப்பான், பல்களை நறநறவெனக் கடிப்பான், உட்காருவான், எழுந்து நிற்பான், பொத்தென விழுவான். இவ்விதம் அக்கிராதகன் மனோவேதனையினாலும் தேக அசௌக்கியத்தாலும் அவதிப்பட்டான். எழுந்து ஓடச் சக்தியில்லை. இறந்திருந்தால் கதை முடிவடைந்திருக்கலாம். ருக்மணிக்கும் திகிலுண்டாய் விட்டது.

யாரோ பின் வழியாக உள்ளே நுழைந்தது போலிருந்தது. "அதோயாரடி, கல்யாணியா?''

எனக் கூவினள் ருக்மணி. "கல்யாணி! உன் கணவர் உன்னை அழைத்துவரப்போய் கால் ஒடிந்து வந்தாரடி. இனி உன் பாரம்—வா, பார்த்துக் கொள்'' என்று விட்டு வெளியே சென்றாள்.

கல்யாணி எங்கு போலீசுப்புலிகளுடன் வந்து விட்டாளோ எனப் பயந்தான் மணியன். உடம்பில் வலுவில்லை. இருந்தால் மறுபடி மனைவியை ஒரு கை பார்த்திருப்பான். கூட—பார்வதி—சுந்தரன் இருவரும் வந்திருந்தனர்.

பார்வதி கல்யாணியை நடந்தவைகளை சர்வ காசமாய்க் கேழ்க்கக் கல்யாணிக்கு மனம் தாங்காமல் அழுகைவர, பார்வதி அவளுக்காக விசனப்பட்டாள். கல்யாணி ஒருவாறு எல்லாவற்றையும் கூறிமுடிக்க, அவ்வனுதைச் சிறுமிக்காகப் பார்வதி அப்பொழுதுதான் உண்மையாக வருத்தப்பட்டு அழுதாள்.

"அடியம்மா.தெரியாமல் கிளியை வளர்த்துப் பூனைக்குத் தந்தேனடி. என் வீட்டிலேயே நீ வாழ நான் கொடுத்து வைக்காத பாபியடி. என்ன செய்வது? உன்னையும் கெடுத்து விட்டதுமன்றி என் மகனது ஆசையையு மிழந்து விட்டேனடி'' என அங்கலாய்த்தாள்.

கல்யாணி மனமிழந்து போகாமல் மாமியிடம் காதோடு ஏதோ கூறப் பார்வதி பரம சந்தோஷமடைந்தாள்.

"குழந்தாய், இனி உன் கஷ்டம் தீர்ந்துவிடுமடி. குழந்தைகள் பிறந்துதான் பெற்றோர்களுக்குள் அன்பை விருத்தி செய்யும். குழந்தாய்; இனி நீ சந்தோஷமாயிரு'' என ஆசிர்வதித்தாள்.

வைத்தியன் தந்த மருந்துகளை மனைவி கொடுப்பதைக் கூட மணியன் விரும்பவில்லை. அவைகள் அவ்விதமே அலமாரியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. கணவனின் கொடுமைகளைப் பாராட்டாமல் கல்யாணி நல்ல காலத்தை எதிர் பார்த்தவளாய்க் கணவனது தேக சௌக்கியத்திற்கு மிகவும் பாடுபடலானாள். மணியன் ஒரு மாதிரி சொஸ்தமடையலானான். ஆயினும் என்ன? எதற்கெடுத்தாலும் எந்தப் பேச்சு வந்தாலும் கல்யாணியோடு சுந்தரத்தை இணைத்தே பேசுவான்.

ஓர் உத்தமிக்கு அவ்வித வார்த்தைகள் முட்களைப் போல அல்லவோ இருக்கும். கல்யாணி சுந்தரத்தை மனதைவிட்டு அறவே ஒழித்து விட்டு எவ்வளவோ தினங்களாய் விட்டது. கடவுளை அவனது நினைவுவாராமலிருக்கச் சதா பிரார்த்தனை செய்து வந்தாள். சுந்தரனை அவள் மறப்பது முடியுமா? சகோதரனை அறவே மறந்து விடுவது சுலபமா? இல்லை, அவனைப் பற்றிப்பேசும் கொடுஞ் சொற்களைக் கேழ்ப்பது சுலபமோ?

## VII

சில மாதங்களானதும் கல்யாணியின் இளந் தேகத்திற் கேற்றபடியும் அவளது மனோ விசாரத்திலேயே வளர்ந்து பிறந்ததற்கு அத்தாட்சியாகவும் ஓர் அழகிய ஆண் மகன் அவர்களுக்கு உற்பவித்தான்.

பிரசவத்திற்கு யார் வருவார்கள்? பார்வதி பல மாதங்களாய்ப் பாயும் படுக்கையுமாயிருப்பது தெரிந்தும் மணியன் மனைவியை அங்கு போய்வர அனுமதி தரவில்லை. சுந்தரன் வந்திருப்பான். நல்ல காலத்திற் கடையாளமாக அவன் ஊரிலில்லை. கல்யாணியின் மேல் அளவற்ற பிரேமை யுடைய ருக்மணி தான் ஏதாவது பெற்றுப்போகலாம். தவிர, தம்பிக்கும் தன்னிடம் நல்லெண்ணம் உதிக்கும் என்றெண்ணி வந்திருந்தாள்.

சிறு குழந்தையை—அதுவும் ஓர் திடகாத்திர மற்ற குழந்தையை—ஒன்று மறியாத பதினன்கு வயதுடைய பெண் ஒருவள் வளர்ப்பது எங்கனம்?

கல்யாணி பத்து மாதமாய் எதை நம்பி ஆனந்தப்பட்டு வந்தாளோ அது அவளை ஏமாற்றி விட்டது! குழந்தையல்ல! அதனுலடையக்கூடும் என்று நம்பின வீண் எண்ணங்களே.

குழந்தை பிறந்ததும் கணவன் தன்னிடம் ஆசைகாட்டுவான் எனக் கல்யாணி எண்ணினுள். ஆனல் மணியன் குழந்தையை ஏறெடுத்துப் பார்க்கக்கூடப் பிரியப்படவில்லை.

ஒரு நாள் அவள் மிகவும் வேண்டியதின் மேல் மணியன் அங்கு வந்தான். 'பாபம்! வேலைகள் நடுவே குழந்தையைப் பார்க்கக்கூட ஒழிகிறது இல்லை'' என்றுள் கல்யாணி வினயமாய்.

"சரி, உன்னேடு நின்று பேச எனக்கு முடியாது, சொல்லவந்ததை அத்தியாயம் அத்தியாயமாய்ப் பிரிக்காமல் சடுதியிற் சொல்'' என்றுன்.

"எனக்குச் சொல்லவேண்டியதென்ன விருக்கிறது? நமக்குள் அன்பைப் பிணைக்கக் கடவுளால் இந்தச் செல்வனளிக்கப் பட்டான். இனி இதன் முகத்தைப் பார்த்தாவது நீங்கள் என்னிடம் அன்பு காட்டுதல் கூடாதோ? நமக்குள் சமுசயங்களும் அவிருப்பங்களும் இனியும் வேண்டாமே'' என வேண்டினுள் ஏழைக் கல்யாணி.

மணியன் மனைவியை மிகவும் அசட்டையாக ஓர் பார்வைப் பார்த்தான். "நீ பெண்ணே, பேயோ—எனக்கு உரைக்க முடியவில்லை. பிள்ளையாற் கோவிலண்டை பிள்ளையாரை வேண்டிவிட்டு என்னைக் குப்புறத்தள்ளின பாதகி நீ யல்லவோ? கட்டினவனை மறந்து வேற்றுனை எண்ணின அற்பப் பதரன்றோ நீ! நீயா என்மனைவி, இதுவாஎன் மகன்? நம்மைப் பிணைக்க வந்ததோ—களைக்க வந்ததோ, நீயே பார்ப்பாய்'' என்று சீறினுன் மணியன்.

கல்யாணி ஒரே நம்பிக்கை கொண்டாள். இனியாவது நடந்ததைச் சொல்லி விடுவது மேல் என எண்ணி, தான் ஊருக்குப் போனதும் சுந்தரன் கூறியதும் தான் பிள்ளையாரை வேண்டினதும் பிறகு கல் தடுக்கிக் கணவன் விழப்பெற்றதும் பிறகு கணவனுல் தானடிபட்டதும் பிறகு தன் கற்பின் சிறப்பால் நன்மை பெறலாம் என்றும் கணவனை விடச் சிறந்தது மனைவிக்கில்லை என்றே அவரைத் தான் பின்பற்றி வருவதாகவும் சுந்தரனைத் தான் நினைக்கக் கூடாதென்றும் இன்னும் பல விதம் தன் நிலைமைகளையும் வருத்தங்களையும் கூறினுள். முடிவில் மணியன் "நல்ல கதை பிணைக்கிருயே ! எந்தப் பள்ளியிலாவது பரிசு பெற்ருயோ? பெற்றிருக்கலாமே—''

கல்யாணி வியந்து நின்றுள். "என்னைக் கொன்று விட எண்ணித்தானே குப்புறத் தள்ளினுய்—சொல்லிவிடு'' எனக் கர்ச்சித்தான் மணியன். கல்யாணி இன்னும் என்ன வென்று கூறமுடியும்? "யோசனை யென்பது உங்களுக்கிருப்பின் என்வார்த்தைகளை நம்புப்'' என்றுள்.

மனம் தாங்குமா? கணவனை ஆனமட்டும் பிரிய முண்டாக்கப் பார்த்தாள்.

"என் வயிற்றிலுற்பவித்த இப்பாலகனை ஆசிர்வதிக்கக்கூடாதா ?'' என்றுள்.

மணியன் வெளியே சென்றுன். "கணவனே!'' எனக்கூறி ஒரு பெருமூச்சு விட்டாள் அப்பேதைப் பெண்! குழந்தையை ஓர் தாலாட்டுத் தாலாட்டி மார்புறத்தழுவி தோளின் மேல் சாய்த்துக்கொண்டாள். தாலாட்டி மார்புறத்தழுவும்பொழுது அவளது கண்களிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் குழந்தையின் மேல் விழ, ஆச்சரியம்! அது அழுகையை நிறுத்தித் தாயை உற்று நோக்கியது. மீண்டும் அழத்தொடங்க, தோளின் மீதிட்டு அங்கு மிங்கும் நடந்து சமாதானப்படுத்தலானுள்.

மணியன் திரும்பி வந்து "என்னைத் தேடிக் கொண்டு யாராவது வந்திருந்தார்களா?" என வினவினன்.

கல்யாணி அவனது கரங்களைப்பற்றி இழுத்துக் குழந்தையின் மீது வைத்து "ஆசிர்வதியுங்கள், நமது செல்வனை—நம்மை இணைக்க வந்த சிறுவனை—பெயரிட்டழையுங்கள்" என்றாள்.

மணியன் பாம்பென மசித்தானே, என்னமோ. சரேலெனக் கைகளை இழுத்து உதறி தூரச் சென்றான். "ஐயோ—பெயர் கூடக் கொடுப்பதரிதோ" எனக் கூவினள் கல்யாணி.

"என் சிரமம்—உனக்கே தெரிந்திருக்கலாமே அதன் பெயர்?—இளஞ் சுந்தரம்—அல்லது கல்யாணசுந்தரம்—ஏதாவது அழை" என்றான். கல்யாணியின்உடம்பு சில்லிட்டுக்கூட போயிருக்கலாம். யார் அவளைக் கவனித்தனர்? தெய்வம் தான் அங்குமிங்கும் சோதிக்கிறது.

## VIII

பார்வதி மரணப் படுக்கையிலிருக்கையில் சுந்தரன் மனமிளகி ஊருக்கு வந்திருந்தான். அவனுக்கும் வாவா மணியன் காரணமாகக் கல்யாணியையும் பிடிக்கவில்லை. "ஏன் அவன் அவளையே பின்பற்றவேண்டும்? ஏன் அவள் அவனை விட்டு விட்டு நம்மோடு இருக்கக் கூடாது, அவன் உதைக்க உதைக்க அவனுடனேயே இருந்தழுவேண்டும்?' என எண்ணினனே, இல்லை. 'நடந்தேறிவிட்டது; இனி அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்' என்றெண்ணினனே—சில மாதங்களாக சரவணய்யர் வீட்டிலிருந்து மணியன் வீட்டிற்குப் போவது வருவது நின்றுவிட்டது. கல்யாணிக்குக் கணவனைத் தவிர எங்கும் ஆதாவற்றிருந்தது. சுந்தரன் கடைசி நேரத்தில் தாயின் சொற்படி நடக்கச் சம்மதித்து விட்டான். சரவணய்யர் கூட வருமையடைய ஆரம்பித்ததை எண்ணியே அவன் தாயின் சொற்படி நடக்கத் தலைப்பட்டான். இருந்த போதிலும் பார்வதி "கணவரே—என் மகனே, —நம் வீட்டில் வளர்ந்த அந்த அனுதையை நான் பல விதத்திலும் துன்புறுத்தி விட்டதை நினைத்தால் அந்தத் துக்கம் என்னுவி வேகும் பொழுதுகூடக் கரையாது. அதனுல் அதைத் தீர்த்துக்கொள்ள ஒரு வேளை மணியன் அவளைத் தள்ளி விட்டால் பிழைத்துக் கொள்ளும்படி அவளது குழந்தைக்கு வயது வந்ததும் வரும்படிக்கு ஓர் நிதி தயாரித்து பாங்கியிலிடுங்கள். சுந்தரம்! நீ லட்சுமியை மணந்துகொள். குழந்தை குட்டிகளுடன் சௌக்கியமாக இரு" என்று கடைசியிற் கூறிய வாய்மொழிகளைச் சுந்தரன் நிறைவேற்றுவதாக வாக்களித்தான். பார்வதி கல்யாணியை அழைத்துப் பார்க்க விருப்பம் வைக்கவில்லை. ஏன்? முன்னொரு தடவை அழைத்து வந்துதான் அமளியானது ஊர் அறிந்த விஷயமே! பார்வதி இறந்த செய்திகூட வீட்டினுள் அடைபட்டுக்கொண்டு குழந்தையின் நோவுடன் போராடிக்கொண்டிருந்த கல்யாணி அறிந்தவளல்ல. அதன் மேல் நிதி இருப்பதாகக்கூட அவள் அறியாள். அறிந்திருந்தால் இனிநேரும் விஷயம் நேர்ந்தேயிராது.

சுந்தரனது விவாகம் கூடக் கல்யாணி அறியவில்லை. லட்சுமி சுந்தரத்தோடு ஒத்து வாழ்ந்துகொண்டு இன்பமாயிருந்தாள்.

கல்யாணிக்கு, பாபம், அவளை விதி தொடர்ந்தே சென்றது.

மணியன் கருமித்தனத்தில் ஓர்பெருத்ததொகையைச் சேர்த்திருந்தான். மற்றவர்கள் போல் அவன் மனைவியை நம்புவதில்லையாகையால் அத்தொகையை அவன் ஓர் முறிந்துப் போகக் கூடிய பாங்கியில் யாருக்கும் கூறுமல் யாருடைய யோசனையுமின்றி போட்டிருந்தான். அது தெய்வத்தின் மனப்போக்கின்படி இந்த சமயத்தில் முழுகிவிட்டது. ஆகவே மணிய

னின் பணமனைத்தும் போய்விட்டு மணியனின் கொடிய புத்தியும்—கருமித்தனமுமே அவனிடம் கடைசியாக நின்றது. சொல்ப பூஸ்திதியிருந்தது, அவ்வளவே! கல்யாணிக்குக் கூடத் தெரியாதிருக்க, மணியன் குழந்தையின் மேல் நிதியிருப்பதையும் அது அக்குழந்தை இறந்தால் தன்னைச்சேருமென்றும் அறிய வந்தான் பாதகன், கொலைக்கஞ்சாத பாதகன்!

## IX

ஒரு நாள் குழந்தை மிகவும் தேக அசௌக்கிய முற்றது. மணியன் வெளியிலிருந்து வந்ததும், பெற்ற தாயின் மனம் குழந்தைக்காகவே ஊசலாடிக் கொண்டிருந்தபடியால் ஓடிச் சென்று "குழந்தை பிராணாவஸ்தைப்படுகிறதே! கடுஞ் சுரம்கொண்டு கதறுகிறதே—ஊரில் ஓர் வைத்தியனில்லையா?" எனப் பரதவித்தாள்.

அவன் சிறிதும் கவலைகொள்ளாமல் பரம சந்தோஷமடைந்தவனாய் "அப்படியா?—சரி, நாம் இருக்கும் நிலைமை உனக்குத் தெரியவில்லையோ? பாங்கி முழுகிப் பணம் கரைந்துவிட்டதை நீ அறியவில்லையோ? நாம் அரச குமாரர்களோ?— உன் சாவான், என்ன அரசிளங் கோமானோ! நீ கல்யாணி அரசிபோலும்—இவ்வளவென்ன? ஏழைகளாகிய நமக்கு வியாதி அணுகத்தான் அணுகும். உன் மகன் வியாதிபடத்தான் படுவான். ஒன்றிரண்டு போனால்தான் பிறகு ஒன்றிரண்டு நிலைநிற்கும்" என மிகவும் மிருகத்தனமாய்ப் பேசலானான்.

கல்யாணி கணவனை மனதோடு உண்மையாய் வெறுக்கும் காலம் சமீபித்து விட்டது போலும். "முதலில் என் பொருளைக் திருடினான், பிறகு என்னை வினைக சமுசயித்தான். பிறகு என்னை ஒழிக்க எண்ணினான். பிறகு இப்பொழுது தெய்வத்தால் என்னிடம் ஒப்புவிக்கப்பெற்ற இப்பாலனை—என் கரும்பை—என் தங்கக்கட்டியை —ஒழிந்துபோ—என்கிறானே, ஈசுவரா! உனக்குக் கண்ணில்லையா?" என வருந்தினாள். தெய்வத்தைக் கூட அவள் அந்த நிமிஷத்தில்தான் நொந்தாள்.

குழந்தை அழுதவண்ணமேஇருந்தது. புரண்டு புரண்டு படுத்தது, கண்கள் சுற்றிக் கறுத்து விழி மாறி யிருந்தது. மணியன் இரவு போஜனம் முடிந்ததும் அங்கு வந்து "கல்யாணி—உன் பாய் படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு வெளியே படு. எனக்கு இந்தக் கூக்குரலில் தூங்கமுடியாது. நிச்சப்தமாய்த் தூங்கப்பிரியப் படுகிறேன்" என்றான்.

கல்யாணி பயத்துடன் தன் உலகமாகிய குழந்தையுடன் வெளித்தாழ்வாரத்திற்கு வந்து விட்டாள். மனச்சங்கடங்களாலும் குழந்தையைப்பற்றிய விசாரத்தாலும் கல்யாணி மிகவும் அயர்ந்த நித்திரையை விரும்பினாள். ஆனபொழுதிலும் அடிக்கடி விழித்துக்கொண்டு மகனைப் பார்த்துவிட்டு உறங்குவதாயிருந்தாள். சமுசயத்திற்கேற்றபடி ஒரு சமயம் அவள் குழந்தையினருகே தன் கணவன் நின்றுகொண்டு குனிந்து அதன் சுவாசத்தைக் கவனிப்பதைக் கண்டாள். பயந்தாள்; ஆயினும் மறு நிமிஷம் அவளது இளகிய மனம்—பாபமற்ற மனம்—நல்லதையே கருதிற்று—மனமாகிய சமுத்திரம் தன் கணவர் ஒருவேளை அன்புமேலீட்டினால் குழந்தையை இரவில் வந்து கவனித்துக்கொள்ளுகிறார் போலும் என்றெண்ணி உறங்கத்தொடங்கினாள். ஏதோ மறுபடியும் அவள் விழிப்புக் கொண்டாள். பின் குழந்தையை ஆபத்திலிருந்துகாப்பாற்ற அவளது மனம் படும்பாட்டை எண்ணிக் கடவுளே அவளிடத்தில் வந்திருந்தார் போலும்!

கலிகாலமே! மனைவியைக் கொல்லும் கணவன்மார்கள் பிறந்த கொடுங் காலமே! மக்களைத் தின்னும் மாந்தர்களுதித்தமகாகாலமே! தாயின் அன்பைவிட அன்பேதாவது உலகிலுண்டோ! தாயை விடச் சிறந்த தெய்வம் நாம்

காண்பதெளிதோ? உலகமே தாயாலல்லவோ போஷிக்கப்படுகிறது! தாயாலல்லவோ நாம் முன்னேற வேண்டும்? தாயின் மனதில் கல்வி வீற்றிருப்பின், பணப்பேய் மறைந்திருப்பின் —அவர்கள் மனம் பொறுமை—தியகுணம்—எனது—உனது—என்றில்லாதிருப்பின் உலகம் எவ்வளவு சிறப்போடிருக்கும்? கல்யாணிக்கு இவ்விரக் கஷ்டங்கள் நேருமோ? எல்லாம்பார்வதியின் பார்வையற்ற தனமல்லவோ, மதியற்ற நடத்தையல்லவோ? மதியீனமே! மாந்தர்களை விட்டு அகல மாட்டாயோ?

மணியன் மகனது முகத்தில் ஓர் தலையணையை வைத்தழுத்த நினைத்தநேரம்! அழுத்தும் சமயம்! கல்யாணி அவனைப் பிடித்துத் தள்ளினாள். அவளுக்கு அச்சமயம் ஆயிரம் யானை பலம் கூட வந்து விட்டதெனலாம். கோவெனக் கதறி மகனை வாரி யணைத்துக்கொண்டு முஷ்டியைக் காண்பித்துக்கொண்டே ஓடி விட்டாள். என்னே அன்பின் வலிவு? காற்று—மழை—இருட்டு—நடுநிசி—தனிமை — ஒன்றையும் தாயானவள் எண்ணவில்லை. மகனைக்காப்பாற்றுவதொன்றையே கடைப்பிடித்தாள். எங்கு ஓடுவது—என்னசெய்வது என்பதையே அவள் எண்ணவில்லை. அந்த ஆபத்து நேரத்தில், அவள் அவைகளை யோசனை செய்ய இடமிருந்ததோ? குழந்தையைக் காப்பாற்றி விட்டதாக மட்டும் அறியலானாள். தான் அவ்விதம் ஓடுவதில் குழந்தைக்கு ஆபத்து உண்டாகுமே என்றுகூட அவளாலறியக் கூடவில்லை. ஜுரம் கொண்ட குழந்தையை மழை—காற்று—இவைகளில் போற்றிக்கொள்ள ஓர் துணி எடுக்கக் கூட அவளுக்கு நேரமிருக்கவில்லை? நேரமா? ஓர் கொலை நடக்கவிருக்க அதை மீட்டின நேரமன்றோ அச்சமயம்! வேண்டியவைகளை ஆராய்ந்தெடுக்கும் நேரமா?

## X

கல்யாணி எங்கு போவாள்? பொழுது விடிந்ததும் மனிதர்கள் அவளைக்கண்டு என்ன கூறுவார்கள். மணியன் வந்து மகனை எடுத்துக் கொன்றுவிட்டால் பிறகு ஆண்டாண்டு அழுதாலும் மாண்ட மகன் வருவானோ—ஆகவே என்னசெய்வது? அவனது மனம் கல்லோ, இரும்போ—கோடாலியால்பிளப்பினும் பிளவு படாதோ? "மாமி, எல்லாம் உன் வார்த்தை—உன் நடத்தையால் ஏற்பட்டதன்றோ? என்னை வளர்த்து முறித்துவிட்டதைக் காட்டிலும் வளர்க்காமலேயே முறித்திருப்பின் என் மனம் இப்பாடு படாதன்றோ?"

அவள் அங்கலாய்க்கும்பொழுது அவளது மடிமீது கிடந்தச் சிசுவுக்கு ஓர் வித வலிப்பு வரவே அவள் கூவினாள், கதறினாள், யாது செய்தென்ன? ஈசனால் இட்டபடியன்றோ; மறுபடியும் அக்குழந்தை சோர்வுற்றுக் கிடந்தது; எடுத்து முத்தமிட்டாள். மாற்புறத் தழுவினாள். முகத்தில் அரும்பின வியர்வைகளைக் கண்டு தைரியம் கொண்டு முன்றானியால் துடைத்தாள். "மகனே — என்னை அவன் — பாபி கொன்றிருந்தாலும் நான் பின் வாங்கியிருக்க மாட்டேனடா — உன்னைக் கொல்லவந்தானேயடா—என் உலகமே! உன்னைக்கொல்லவந்தானேயடா—என் கண்ணே! கரும்பே!" என அதை மாற்றி மாற்றி முத்தமிட்டாள். பிறகு அது சற்று உறங்குவதாகப்படவே அசையாது தோளின்மேற்சாத்திக்கொண்டு அப்பதினன்கு பிராயமுடைய சிறு பெண்—ஓர் குழந்தை—பின் தாயானவள்—மெள்ள—மெள்ள சுந்தரத்தின் வீட்டை நாடி நடக்கலானாள்.

சுந்தரன் வாயிற்படியண்டை நின்றான். கல்யாணியின் கோலம் அவனுக்கு அதிக ஆச்சரியமாக விருந்தது. "கல்யாணி—என்ன நேர்ந்தது? என்? கணவனோடு கடைசியாகச் சண்

டையிட்டுக்கொண்டு விட்டாயோ?" என்றான்.
கல்யாணி அவனருகே சகல அலங்கிருதையாக லட்சுமி நிற்பதைக் கண்டு மாய்மயிறந்துவிட்டிருப்பதையும் ஊகிக்கலானாள். ஆனால் அவளுக்கு அவைகளைப்பற்றி என்ன சிந்தனை? அவள் யார்? மணியனின் மனைவியல்லவா? அதை அவள் தவிர்த்துவிடமுடியுமா? குழந்தைக்காகவே அவள் கணவனைத் துறந்துவிட்டாளேயன்றி வேறு என்ன? அகவே தன் நிலைமையை உணர்ந்து மனதை ஸ்திரப்படுத்திக் கொண்டு "சுந்தரம் என் மகனைப் பாரேன்" என, லட்சுமி, நல்ல ஹிருதயமுடையவள், கதறினாள்; ஓடிச்சென்று வைத்தியனை அழைத்துவந்தாள். ஆனால் அதற்கு முன்னால் தாயே இறந்துவிடுவாள் போலிருந்தாள்.

கல்யாணிக்குச் சுந்தரன் வீட்டை அடைந்து உள்ளே படுத்ததுதான் தெரியும். அவளுக்கு நினைவு வரவும் மெதுவாக பல தாங்கமாட்டாத சமாசாரங்கள் அவள் காதில் விழ்ந்தன.

அவள் எதற்காக உலகத்தையே வெறுத்திருந்தாளோ—கணவனையும் துறந்து ஓடிவந்தாளோ—அந்தப் பிரம்மாண்டம், அந்த அவளது சிறு பிரபஞ்சப், அவளின் ஆனந்தம்—அவள் நம்பியிருந்த அவளது பொற்கொடி—ஒரே மகன் இறந்து புதைக்கவும் பட்டுவிட்டான். யாருக்காக அவள் இவ்விதத் துன்பம் அடைய நேரிட்டதோ—தானிருக்கவேண்டிய ஸ்தானத்தில் யாரிருக்கிறார்களோ—அவனும் அவளுமாய்த் தான் கடைசியில் அவனைக் காத்து ஆதரித்திருந்தார்கள்.

யாரால், யாருடைய செய்கையால், அவள் இவ்வித வாழ்வை—கேழ்க்க முடியாத, பார்க்க முடியாத, அனுபவிக்க இயலாத—வாழ்வை தன் மட்டில் கடைசிவரை பொறுத்தாளோ—அந்தக் தாயின் ஸ்தானத்தை வகித்திருந்த பார்வதியும் மகளது துன்பத்தைக் காணப்பிரியமற்றோ என்னமோ கண்மூடி விட்டிருந்தாள்.

இனி அவளுக்கென்ன உண்டு? மகனுக்குப் பின் அவள் யாருக்காக உயிர் வாழவேண்டும்? அதற்காகவன்றோ—அவள் வீடு வாசல்—கணவனையிழந்தாள். பின்னும் அந்தக் கணவனைச் சார அவள் மனம் நாடுமா?

"சுந்தரம்—அப்பாதகன் என்னைக்கொல்ல முயன்றதும் என்னை வருத்தவில்லை. ஆனால் என் குழந்தையைக் கொல்ல முயன்றதானது என் ஹிருதயத்தையே ஒடித்துவிட்டது. அக் கடைசி நேரத்தில்கூட அவனை பாபி என்று கருதாமல்தான் என் மனதைப்பாதுகாத்தேன். ஆனால் அவன் என் களஞ்சியம்—வந்து மணத்ததே,' அந்த சோபிதத்தை அழிக்க முயன்றதை என் கண்ணாரக் கண்டதும்—என் மனம் அவனுக்கும் எனக்குமுள்ள பாசத்தை வேரறுத்துவிட்டது. அறவேகளைந்து விட்டது. இனி நான் வேறு, அப்பாபி வேறு. நம்முள் இனி சம்பந்தமேயில்லை—என் கடமை முடிந்துவிட்டது. வந்தவிடம் செல்கிறேன். சுந்தரம்! என்னை மறந்து விடு."

இவைகளுக்காகவே கல்யாணி விழித்தாள் போலும். மறுபடியும் கண்ணயர்ந்துவிட்டாள். அவள் சென்ற உலகம் அவளைச் சந்தோஷமாக வைத்திருக்குமென்பது திண்ணம்.

# யோஷிதாபரணம்.

(ஸ்ரீமான் R. M. சுப்பராமய்யர்.)

அருமைச் சகோதர சகோதரிகளே,

இந்தக் காலத்தில் நம்முடைய தேசத்தி லுள்ள பெண்மணிகளுடைய நிர்ப்பாக்கிய திசையானது எவ்வளவு வருந்தத் தக்கதாக இருக்கிறதோ அதனைச் சொல்லுவதற்குச் சாத்தியமில்லை; இதனை உலக துக்கத்தைக் கண்டு சகியாத ஆடவர்கள் ஆலோசித்தால் அவர்களுடைய ஹிருதயம் துயரத்தினால் கரைந்து போகும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இத்தேசத்துப் பெண்மக்கள் தங்களுடைய முன்னேற்றத்துக்குச் சகாய மற்றவர்களாகவும் ஞான சூனியர்களாகவும் இருக்கின்றனர். தங்களுடைய நன்மையைத் தாங்களே எவ்விதந் தேடிக்கொள்ள வேண்டுமோ அவ்விதத்தை அவர்கள் அறியாதவர்களாயிருக்கின்றனர். இத்தகைய காரணங்களினாலே புத்திமான்களான பெரியோர் நம் பெண்மக்களுக்கு நன்மையுண்டாகும் குணவிசேஷங்களைப் போதித்து அவைகளால் அவர்கள் அறிவு பெற்று முன்னேற்றம் அடையும்படி செய்யவேண்டுவது அவர்களுடைய கடமையும் அவசியமும் ஆகும். தற்காலத்தில் நம் பெண்மக்களுக்கு அறிவுண்டாகாவிடின் நமது தேசத்திற்கு முன்னேற்றம் உண்டாவதில்லை என்பதையும் விவேகிகள் தெரிந்துகொண்டு இருப்பதுடன் அவரது முன்னேற்றத்தில் ஒரு சிறிது பிரயத்தினப்பட்டுக்கொண்டும் தான் இருக்கின்றனர். அனந்த காலம் நெடுந்தூக்கத்திலிருந்த ஆடவர்களாகிய விவேகிகள் இச்சிறு பிரயத்தினம் செய்ததற்கும் நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

உலகத்தில் மனிதர்களுக்கு நீதி சாஸ்திரத்தில் பிரியமும் அதன்படி நடக்கவேண்டும் என்னும் பேராசையும் இருந்தாலொழியத் தங்களுடைய முன்னேற்றத்திற்கு வழியில்லை. தற்காலத்திலோ பெண்மக்களுக்கு சாஸ்திரப் பிரியமும் அதனை யநுஸரிப்பதுமான இவ்விரண்டு வழியும் முற்றுமில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! இதற்குக் கல்வியறிவில்லாமலிருப்பதே முக்கிய காரணமாகும். நமது பாரத பூமியில், தர்மம், நீதி முதலியவற்றை போதிக்கும் சாஸ்திரங்கள் மிகவுங் கடினமான ஸம்ஸ்கிருத பாஷையில் பெரும்பான்மையும் இருந்து வருவதால் படிப்பாளிகளல்லாத மிகப் பல தற்காலப் பெண்களுக்கு அந்த சாஸ்திர ஞானம் உண்டாவது மலடி மகனும் முயற்கொம்பும்போல அசம்பவமே யாகும். ஆதலால் தேசத்தில் வாடிக்கையாயிருக்கும் சுலபமான பாஷையில் மேற் கூறிய தர்ம சாஸ்திர, நீதி சாஸ்திர, புராண இதிகாசாதிகள் எழுதப்பட்டு அதன் மூலமாகப் பெண்மக்களுக்கு அறிவுண்டாக்குவது உலக முன்னேற்றத்திற்கு உழைக்கும் ஆடவர்களுக்கு இன்றியமையாக் கடமையாகும். இவ்வுயர்வுற உயர்ந்த பாரத மாதாவின் முன்னேற்றக் கைங்கரியமாகிய மேற்கூறிய வண்ணம் நூல்களை இயற்றுதலும் அதற்கு உதவி செய்தலும் முறையே பண்டிதர்களுக்கும் தனவந்தர்களுக்கும் ஏற்றதொருசெயலாம். தற்கால நாகரிகத்தில் ஈடுபட்ட நம் தேச ஆடவர்கள் பெண்மக்களைச் சீர்திருத்துவதாக எண்ணி அவர் முன்னே இயற்கையில் அடைந்திருந்த பரம்பரையான சீரைத் திருத்தி விடுகிறார்கள் [நன்மையை வேறுபடுத்துகிறார்கள்]. அந்தோ! நமது இந்தப் புண்ணிய பூமியில் ஜனித்து வேதங்கள், உபநிஷத்துகள் முதலிய தெய்வ வாணிகளை ஓதியுணர்ந்து இருஷி பத்தினிகளாக

வும், மன்னவர் மனைவியர்களாகவும், மண்ணுலகும், விண்ணுலகும் புகழத் தமது ஒழுக்க வழக்கங்களை நிலைநாட்டிச் சென்ற பெண்மக்களின் பின்னவர்களான மாதர்கள் அறிவு விழியின்றி அடவர்பாற்பட்டு அகமுடைந்து வருந்தி நிற்பதைக்கண்டு எவர் தான் சகிப்பர்.

செல்வம் படைத்த சீமான்கள் தம் பெண் மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டவேண்டுமென்ற ஆசையால் கற்பிக்கும் நூல்கள் இன்னவை என்று அறியாது அவர்களை நாவல்களில் நாவலர்களாக்குகின்றார்கள் [நாவலர் விரைந்து படிக்கும் வல்லமையுடையவர்கள்]. அது மட்டுமோ, ஆசை மிகுதியால் அரிய பெரிய ஆங்கில, வடமொழி காவிய நாடகங்களைக் கற்பிக்க முற்பட்டு அவர்க்கு இழைக்குந் தீங்கு அளவில் அடங்காதது. இதுவன்றியும் உலகத்திலுள்ள ஒவ்வொருவரையும் கிறிஸ்தவராகக் கனக் கண்டுகொண்டிருக்கும் கேதோலிக், பிராடஸ்டண்டு பாதிரிப் பெரியோர்களால் பல்லாயிரமாகப் பாடசாலைகள் அமைக்கப்பட்டுப் பக்குவமான வார்த்தை பேசுவதில் வல்லமையுடையவரும், தம் மதத்தைச் சார்ந்த பண்டைய ஒழுக்க வழக்கங்களைச் சொப்பனத்தும் கேட்டறியாதவருமான உபாத்திமைப் பெண் மக்களிடத்தில் தம்மக்களைக் கல்விகற்க அனுப்பி இந்துமத தர்மங்களைத் தம் பெற்றோர்களின் முன் தாம் கற்ற கல்வியின் பயனாக இகழ்ந்து உரைப்பதைத் தாம் களிப்போடு காதாரக் கேட்டுத் தங்களுக்கு இருந்த இந்து மத நம்பிக்கையும் இகழ்ந்து விடுகின்றனர். இத்தகைய தீங்கு தமக்குந் தம்மக்கட்கும் நேரிடாதிருப்பதற்கும் இயற்கையில் பொறுமையின் பூஷணங்களான பெண்மக்கள் முன்னேற்றமடைந்து வருவதற்கும் ஏற்ற மார்க்கத்தை ஆராய்ந்து அறிந்து சொல்லளவிலும், வியாச அளவிலும் நின்று விடாதபடி கற்கவேண்டிய நூல்களையும் கல்விக் கழகங்களையும் உண்டுபண்ணி மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உடலினுடையவும் உயிரினுடையவுமான வளர்ச்சியைப் போதிக்கும் அரும் பெரும் கைங்கரியத்தைக் கைக் கொள்ளவேண்டும் அல்லவா? அக்கைங்கரியத்தின் பாகுபாடுகளை ஒன்றின் பின் ஒன்றாக ஆராய்வோம்.

(தொடரும்.)

# திரிவேணி.

(ஒரு சிறு கதை.)

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி.)

(166-வது பக்கத்தொடர்ச்சி.)

## எட்டாவது அதிகாரம்.

### அநாதாசிரமம்.

சிம்மனாஜி பந்தர் பூர்வத்தில் இரத்தினகிரியில் இருந்தவர்; ஆனால் உத்தியோக சம்பந்தமாய் அநேகமாய் அவருடைய காலத்தைக் கான்தேசம், நாசிக் இவ்விரு ஜில்லாக்களில் போக்கி இருந்தனர். பூனா, ஸிவில் இஞ்ஜினியரிங் காலேஜில் இவர் எல். ஸி. இ. பரீட்சையில் தேர்ந்திருந்தனர். அதிலும் முதன்மையாகத் தேர்ந்திருந்தமையால் அவருக்கு முதல் எடுத்ததும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. முன்னுக்குப் போகப்போக அவர் எக்ஸிக்யூடிவ் இஞ்ஜினியரும் ஆனார். இவ்வுத்தியோகத்தை அவர் ஐந்து வருஷகாலம் சரிவரப் பார்த்தமையால் அவருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்ததல்லாமல் ராவ் பகதூர் என்

னும் பதவியும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக அவர் கௌரவம், சம்பத்து இவ்விரண்டையும் பெற்ற போதிலும், அவருக்குச் சமாதானம் ஏற்படவில்லை. நன்றாக வயதிற்கு வந்த அவருடைய ஒரே புதல்வன் திடீரென்று இறந்து போனான். மனைவியும் க்ஷயத்தினால் இறந்தனள். ஏற்கனவே அவருடைய மனம் வேதாந்தத்தை நாடியிருந்தது. இப்படியிருக்க இத்தகைய ஆபத்துகளும் சேர்ந்தமையால் அவர் உலகத்தை முற்றிலும் வெறுத்தார். மீதியுள்ள ஆயுளை எங்காவது 'ஹரி ஹரி' என்று கொண்டே கழிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டார். அவர் பென்ஷனுக்காக எழுதிக் கேட்டுக்கொண்டார். அது சாங்ஷன் ஆகி மாதம் நானூறு ரூபாய் பெறலானார். பிறகு அவர் தனது சொத்தின் சில பாகத்தைத் தனது உறவினருக்குக் கொடுத்துவிட்டு, சுமார் இருபதினாயிரம் ரூபாய் ரொக்கமாக எடுத்துக்கொண்டு அவர் நாசிக்கில் போய் வசிக்கலானார். அவ்விடத்தில் போய் வசிப்பதில் அவருக்கு இரண்டு உத்தேசங்கள் இருந்தன. முதலாவது உத்தேசம் யோகாப்பியாசம் செய்யவேண்டும், இரண்டாவது அநாதாசிரமம் ஸ்தாபித்தல். இருபதினாயிரம் ரூபாயில் எத்தனை அநாதைகளை போஷிக்க முடியும்? இருந்த போதிலும் சக்தியின்படி ஏதாவது பரோபகாரமான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் இவ்வெண்ணத்தைக் கொண்டிருந்தார். தனது பென்ஷன் பணத்தில் தன்னுடைய சொந்தச் செலவுக்கு ஐம்பது ரூபாய் வைத்துக்கொண்டு மீதி முன்னூற்றைம்பது ரூபாயை இவ்வாறே பரோபகாரத்தில் செலவழிப்பதாக சங்கற்பித்துக் கொண்டிருந்தார்.

சிம்மனாஜிபந்தர் தன்னுடைய பரோபகாரத்தைப்பற்றி சமாசாரப் பத்திரிகைகளின் மூலமாய்ப் பறையறைவிக்காவிடினும், கர்ண பரம்பரையாய் வெகு பேருக்குத் தெரிந்திருந்தது. கங்காதரன், சதாநந்தன் இவர்களுக்கும் அமிர்தராவ் மூலமாய்த் தெரிய வந்தது. இத்தகைய புண்ணிய காரியம் செய்யப்பட்ட சுசிலரும், பரோபகாரியுமான மனிதனைத் தாம் பரிசயப்படுத்திக் கொள்ளவேண்டும், மேலும் தம்மால் பரோபகார காரியத்திற்கு ஏதாவது உதவி புரியவேண்டுமானால் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஓர் விடுமுறை தினங்களில் நாசிகிற்குக் கட்டாயம் போகவேண்டுமென்று அவர்கள் விருப்பங் கொண்டார்கள். அவர்கள் போகப் புறப்பட்டபோது சிம்மனாஜிபந்தருக்கு அமிர்தராவ் ஒரு கடிதமெழுதிக் கொடுத்தார். அதாவது "யாரோ ஓர் மனிதன் தங்களுடைய ஆச்சிரமத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க விரும்புகிறார். அதைத் தாங்கள் தயவு செய்து பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. தான் புகழ் பெறவேண்டும் என்கிற எண்ணம் அமிர்தராவுக்கு இருந்திருந்தால் தன் எண்ணத்தை அவர் சமாசாரப் பத்திரிகைகளின் மூலமாய் வெளிப்படுத்தியிருப்பார். ஆனால் அப்படியன்று, இது பலனை எதிர்பாராத நிஷ்காம தானமாயிருந்தது.

சிம்மனாஜிபந்தர் நாசிகிற்குப்போய் வைராக்கியத்துடனிருந்து யோகாப்பியாசம் செய்வதற்கும், அத்துடன் அநாதாசிரமம் கட்டுவதற்கும் ஆரம்பித்தார். இதைப்பற்றி ஜனங்கள் பலவிதமாகப் பேசவாரம்பித்தனர். நிந்தனை செய்யப்பட்ட ஜனங்கள் இல்லாத இடம் ஏது? க்ஷேத்திரத்தைப் போன்ற இடங்களிற்றான் அவர்கள் அதிகம். நிந்தனை செய்பவர்களிடமிருந்து பிரத்யட்ச தேவர்களும் தப்பவில்லை. அப்படியிருக்க சிம்மனாஜிபந்தருடைய கதை எம்மட்டும்? ஒருவர் சொன்னார், 'ஏன் ஓய், இவன் உத்தியோகத்திலிருக்கும்போது இவன் வரும்படியிலிருந்து ஒரு பிராமணனுடைய ஜீவனத்திற்குக்கூட வழி செய்யவில்லை. இப்பொழுது பெரும் பரோப

காரம் செய்வதுபோல் வேஷம் பூண்டு உட்கார்ந்திருக்கிறான்!' மற்றொருவன் சொன்னான்: 'இஞ்ஜினியரிங்' ஆபீசிலிருக்கும் பொழுது கன்ட்ராக்டர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாய்கள் பிடுங்கினான். இப்பொழுது ஜனங்களிடத்திலிருந்து நல்ல பெயரெடுக்கும் பொருட்டு யோகாப்பியாசமும் பரோபகாரமும் செய்வதுபோல வேஷம் பூண்டிருக்கிறான்!' இன்னொருவன் சொன்னான்: 'பேருக்குத்தான் அநாதாசிரமம், உண்மை என்ன வென்றால் விதவைகளுக்கு விவாகம் செய்துவைக்கும் ஏஜன்ஸி தான் இவன் ஏற்படுத்தியிருக்கிறான்.' இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, நாராசம் போன்ற நிந்தனைகளை க்ஷேத்திரத்து ஜனங்கள் சொல்லிக் கொண்டிருந்தனர்.

நாசிகிற்குப் போகும்பொருட்டு இருவரும் நாசிகிற்குப் பயணச்சீட்டு வாங்கி வண்டியில் உட்காரும் தருணத்தில் டாக்டர் சதாநந்தராவ் அவர்களுடைய வேலைக்காரன் ஓர் அவசரச் சிட்டைக்கொண்டு ஓடி வந்தான். டாக்டர் சதாநந்தராவ் அதைப் படித்துப் பார்த்ததும் அவர் மனம் குன்றியது. ராவ் பகதூர் ஏகநாத பந்த் அல்லது பாபாஸாஹேப் டாக்டர் சதாநந்த ராவிடம் மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். காலையில் டாக்டர் அவரைப் போய் பார்த்து வந்தபோது அவர் சௌக்கியமாயிருந்தார். அதற்குப் பிறகு திடீரென்று அவருக்கு அதிக அசௌக்கிய முண்டாய் சில மணி நேரங்கூடப் பிழைத்திருப்பாரென்று நம்புவதற்கில்லை. ஆதலால் மோட்டார் அனுப்பப்பட்டிருக்கிறது, அதில் உடனே வந்து பார்க்க வேண்டும் என்னும் சங்கதி அச் சீட்டில் எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டு டாக்டர் மனம் தயங்கலாயிற்று. அப்பொழுது கங்காதரன் சொன்னதாவது, 'நோயாளியின் உயிரைக் காப்பது டாக்டருடைய முக்கிய கடைமையாகும், அதுவும் ஓர் புண்ணிய காரியந்தான்; ஆதலால் நாசிகிற்குப்போவதைவிடக் கடைமையை நிறை வேற்றுவது தான் மேன்மை.' கங்காதரன் சொன்ன யோசனை சதாநந்த ராவுக்கும் இசைந்தமையால் அவர் தன் சாமான்களை வண்டியினின்றும் எடுக்கச்சொல்லி கங்காதரனிடம் விடை பெற்றார். அப்பொழுது ஒரு ஆயிர ரூபாய் நோட்டைக் கங்காதரனிடம் கொடுத்து அதைச் சிம்மனாஜிபந்தருடைய அநாதாசிரமத்திற்காகச் சொற்ப வெகுமதி யென்று சொல்லிக் கொடுக்கச் சொன்னார்.

கடந்த அதிகாரத்தில் வருணித்த துர்நடத்தையும், சுயநல சிகாமணிகளைப் போன்ற கிரகங்களும் உபகிரகங்களும் எங்கே? மேலான மனோ தர்மத்தையும் சுயநலத்தை நீக்கிப் பரோபகாரம் செய்வதில் தற்பராயும், சுத்தமான நடத்தையையும் உடைய சிம்மனாஜிபந்தர், அமிர்தராவ், சதாநந்த ராவ், கங்காதரன் இவர்களெங்கே! ஒரு திசையில் பாபத்தின் பிரவாகம் தோதோ வென்று ஓடிக் கொண்டிருக்க மற்றொரு திசையில் கோதாவரியைப் போன்ற சகலருக்கும் சுகத்தைத் தரும் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கிறது.

## ஒன்பதாவது அத்தியாயம்.

## துவந்துவம்.

ராவ்பகதூர் பாபாஸாஹேப் பொம்பாயிலுள்ள கனவான்களில் ஒருவராவர். இவர் கர்ப்பச்சீமானாயிருந்து இவருடைய கொள்கைகளெல்லாம் ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு அநுகூலமாயிருந்தன. இவர் முன் ரெவின்யூ இலாகாவில் தாசில்தாராகவிருந்தார். இவர் சுதந்திரப் பிரியராய் இருந்து தன் மேலதிகாரியினிடம் காரியமின்றிப் பேசாதவராயிருந்தபடியால், அவருக்குக் கீழ் நெம்பரிலிருக்கும் ஜனங்கள் மேலதிகாரியைச் சந்தோஷப்படுத்தி டெப்யூடி கலெக்டர் உத்யோகத்தைச் சம்பாதித்துக் கொண்டமையால் இவருடைய ஊக்

குக் குறைக்கப்பட்டது. இவ்வாறு பன்முறை நடந்தமையால் இவர் சலித்துப்போய்த் தன் உத்தியோகத்தை ராஜினாமாக் கொடுத்துவிட்டு பொம்பாயில் ஓர் பெரிய வியாபாரக் கம்பெனியில் தலைமை ஏஜெண்டு வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவருடைய சுபாவம் சற்று கடுகடுப்புள்ளதாயும் ஒற்றுமை அற்றதாயும் இருந்தது. ஆனால் அதற்குக் காரணம் சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் பொழுது அவர் விஷயமாய் நடந்த அநியாயந்தான். அவருடைய முகம் ஒரு நாளும் மலர்ந்திராது. சிரிப்பானது தேவலோகத்து அமிருதமாம். இவ்வமிருதத்தை அவர் சுபாவமானது அவரை ஒரு நாளும் ருசி பார்க்கவிடவில்லை.

அவருடைய மனைவி—இந்திராபாய்—மிக்க சமத்தாயும் இல்லறத்திற்கு ஏற்றவளாயும் இருந்தாள். மகளாகிய சாந்தா முற்றிலும் அன்னையின் பிரதிபிம்பமாயிருந்தனள். சிகப்பு நிறம், அழகிய தேக வமைப்பு, சிரித்தமுகம் இவைகளால் பார்ப்போர்களுடைய மனதைக் கவரக்கூடியதாயிருந்தன. அவளுக்குப் பதினைந்து வயதாகியும் விவாகமாகவில்லை. பாபாஸாஹேப் அவளை பார்சிப் பெண்கள் பாடசாலையில் சேர்த்திருந்தமையால், அப்பெண்களுடன் அவள் கொஞ்சம் ஆங்கிலம் எழுதப் படிக்கவும், பியானோ முதலியன வாசிக்கவும் கற்றுக்கொண்டிருந்தனள். பாபாஸாஹேப் வீட்டில் சாந்தையின் வயதுள்ள ஓர் சிறு கைம்பெண் இருந்தாள். அவளுடைய பெயர் மாலதி. அவள் பாபாஸாஹேப் அவர்களுக்குச் சகோதரியின் மகளாயிருந்த போதிலும் பாபாஸாஹேப் வீட்டிலேயே வசித்துக் கொண்டிருந்தாள். பாபாஸாஹேப் பெண்களின் முன்னேற்ற விஷயத்தில் மிக்க அபிமானமுள்ளவரா யிருந்தமையால் அவளுடைய கூந்தலைக் களையாமலிருக்கச் செய்தார்.

பாபாஸாஹேப் நோயாகவிருக்கும் போது டாக்டர் சதாநந்தராவ் அடிக்கடி அவரைப் பார்க்கப்போக வேண்டியதாயிருந்தது. அங்கு அவருக்குப் பன்முறைகளில் சிற்றுண்டி, தேத்தண்ணீர் அருந்தும்படி நேரிட்டது. இந்தச் சிற்றுண்டி, தேத்தண்ணீர் சித்தப்படுத்தும் வேலை சாந்தாபாயினிடம் இருந்தது. அதனால் அவருக்கும் அவளுக்கும் நன்றாகப் பரிசியமாயிருந்தது. பாபாஸாஹேப் வீட்டில் ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் அதிகமானபடியால் சாந்தாபாய் சங்கோசமின்றி டாக்டருடன் பேசிக் கொண்டிருப்பாள். சிற்சில சமயங்களில் அவரைச் சிற்றுண்டி தேத்தண்ணீரருந்த வரும்படி கட்டாயப்படுத்துவது முண்டு. வரவர இந்தப் பரிசயத்திற்கு விசேஷ நட்பின் உருவம் ஏற்பட்டது. பிறகு டாக்டர் சதாநந்தர் பேரில் அவளுக்குக் காதல் ஏற்பட்டது. அவரின்றி அவளுக்கு வெறொன்றும் தோன்றாமலாயிற்று. அவர் வரச் சற்று தாமதமானால், அவர் வரவை எதிர் பார்த்து நிற்பாள். அவள் மனம் மெல்ல மெல்ல அவள் கட்டுக் கடங்காமற் போகலாயிற்று. அவள் முற்றும் காதலின் வசமானாள். டாக்டர் அவர்களுக்கு விவாகமாயிருக்கும் சங்கதி அவளுக்குத் தெரியாது, பாபம்!

காந்தம் கவரத் தலைப்பட்ட பிறகு இரும்பு எவ்வளவு நேரம் அதற்கு விரோதமாகச் செல்லும்? அது கவரப்படத்தான் வேண்டும். ஸ்திரீகளின் மோகவலையில் என்றும் அகப்பட்டுக்கொள்ளாத மன அடக்கமுடைய புருஷர்கள் வெகு சிலரேதான் இருப்பார்கள். காதல் என்னும் உஷ்ணமான ஜ்வாலையில் மிகவும் திடமனதுடைய புருஷர்கள் கூடக் கரைந்து விடுவார்கள். டாக்டர் ஒன்றும் சுகாசாரியருடைய இனத்திற் சார்ந்தவரன்று; சாந்தாபாயின் மனதில் உற்பத்தியான சஞ்சலத்தை அவர் உணர்ந்தார். அன்றி அவர் மெல்ல மெல்ல அந்த சஞ்

207617

சலத்திற்கு வசப்படுவார் என்கிற குறிகள் காணலாயின.

சாந்தாபாயிக்குத் தன் மனதிலுள்ள எண்ணத்தை டாக்டரிடம் வெளியிடத் துணிவு போதவில்லை. அவள் தன் காதலை மனதிலேயே வைத்துக்கொண்டு துன்பப்படலானாள். இதன் பரிணாமம் வெகு சீக்கிரத்திலேயே அவளுடைய கோமளமான சரீரத்தின் மீது காணப்பட்டது. அவளுக்கு உணவு செல்லாமலாயிற்று, சக்தி குறையலாயிற்று ; கடைசியில் அவள் படுக்கையைப் பிடித்தாள்.

இங்கு டாக்டருடைய மனதில் சாந்தையின் பேரிலுள்ள காதல், அவருடைய தர்ம பத்தினியாகிய ஜானகிபாயின் விஷயத்தில் தனது கடைமை இவ்விரண்டிற்கும் துவந்துவம் ஆரம்பித்தது. கடைமையானது அவருக்குச் சொல்லலாயிற்று, 'நிரபராதியும், உன் சேவையில் சதா காலமும் கழிக்கும் சுசீலையான பத்தினியைத் துக்கக் கடலிலாழ்த்துவதினால் உனக்கு ஒரு போதும் சுகம் உண்டாகப் போவதில்லை. அவள் ஆசிரயித்து வந்த விரதமானது இந்திய ஸ்திரீயின் மேன்மையான உதாகாணத்தை அவள் முன்னிலையில் வைத்து, முழுமையும் அதைத் தழுவியதேயாகும். அவளுக்குச் சிறு பருவம் முதல் அவ்வாறே பழக்கப்பட்டிருக்கிறது. உன்னுடைய திருஷ்டி மேநாட்டுக் கல்வியினாலும், மேனாட்டு ஜனங்களுடன் மேல் மேலாகப் பழகுவதனாலும் மாறுதலடைந்திருக்கிறது. இதில் அவளுடைய தோஷமென்ன விருக்கிறது? கற்புடைய ஸ்திரீயுடன் தர்மாசரணம் செய்வதனால் உனக்கு சுகம் கிடைப்பது போல், காதலினால் புத்தி இழந்து மனம் போன போக்கில் போகும் ஸ்திரீயின் சகவாசத்தினால் உனக்கு ஒரு போதும் சுகம் கிடைக்கப்போவதில்லை. நீ அருகிலிருக்கும் சுகத்தை கவனியாமல், தூரத்திலிருக்கும் பரிணமத்தைக் கவனிப்பாயாகில் உனக்கு நன்கு விளங்கும் !'

காதல் சொன்னது, 'அப்பா ; காதலானது பலவந்தமாய் வரப்போவதில்லை. அது இயற்கையாக விருக்கின்றது. காதலின்றி இந்த சகல சிருஷ்டியும் பாழும் வனத்தைப் போன்றதாகும். மனிதனுடைய உள்ளத்தில் காதல் என்னும் ஈரம் இயற்கையாக இல்லாவிடில் அது சாஸ்திரார்த்ததால் உண்டுபண்ண முடியக் கூடியதல்ல. ஜானகியுடன் அக்கினி சாட்சியாக உன் விவாகமாயிருப்பது உண்மைதான், ஆனால் அவள் பேரில் உன் உள்ளத்தில் காதல் உண்டுபண்ணி உனக்குச் சுகமுண்டாக்கும் சாமார்த்தியம் அந்த அக்கினி தேவதையினிடத்திலிருக்கிறதா? காதலில்லாப் பத்தினிக்கு அன்னவஸ்திரங் கொடுக்க நீ கட்டுப்பட்டிருக்கிறாய். அதைக் கொடுத்து விடு. என்றால் நீ கடைமையென்னும் பந்தத்திலிருந்து விடுதலை அடைந்து விடுவாய்.' இந்தத் துவந்துவத்தில் கடைமையானது தோல்வியடைந்து, காதல் வெற்றி பெற்றது. டாக்டருடைய மனம் சாந்தையையே நாடலாயிற்று. ஆ! சதாநந்தா! உன்னுடைய வித்தை, உன்னுடைய யோசனையெல்லாம் ஓர் அற்பமான இளம் பெண்ணின் நேத்திர கடாட்சத்தின்முன் அபஜயமடைய வேண்டுமா! ஓர் அல்ப வயதுடைய சாமானியமான அபலையானவள் உன்னுடைய பகுத்தறிவைச் சின்னாபின்னப்படுத்தி, உன்னை அடிமையாக்கி விடுவதானது எவ்வளவு பரிதாபகாமாயிருக்கிறது !

## பத்தாவது அத்தியாயம்.

## பயங்கரமான திவ்வியம்.

'எனக்கு விவாகமாயிருக்கிறது. ஆதலால் காதல் என்னும் நாடகத்தின் திரையை இவ்விடத்திலேயே போட்டுவிட வேண்டும்' என்று சாந்தையினிடம் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட வேண்டுமென்று சதாநந்தாவுடைய மனதிற் பன்முறைகளில் தோன்றியது. ஆனால் இரு

வரும் ஒருவரை யொருவர் சந்தித்தபோது இதை மறந்து விடுவார்.

சாந்தா, சதாநந்தர் இவ்விருவர் மனதிலும் சஞ்சரித்திருந்த இந்தக் காதலை இனி யொருவர் கவனித்திருந்தமையால், தனக்கு இந்த சுகம் பிராப்தமில்லை யென்று அவர் மனதிலேயே மிகவும் துன்ப மடைந்து உருகிக் கொண்டிருந்தனர். இது யார் என்பதை ஸ்பஷ்டமாய்ச் சொல்லத்தான் வேண்டுமென்பதில்லை. ஸ்திரீ ஜாதியே பொறுமையுடையதாயிருக்கிறதென்று சாமானியமானகொள்கையாயிருக்கிறது. அது உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி, மாலதிக்கு மாத்திரம் இப்பொழுது சாந்தையின் பேரில் பொறாமை யுண்டாய், அவளுடைய சுகத்தில் மண்ணைப் போட முயன்று கொண்டிருந்தாள் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. அவள் பேரில்தான் தோஷமென்ன? அவள்சொல்லுவாள்—'ஒவ்வொருவனும் என் அழகைக்கண்டு மெச்சுகிறான். ஆனால் பூவின் மணத்தை அனுபவிப்பவர்கள் இல்லாவிட்டால் அந்தப் பூ எதற்கு? தீயைப் போட்டுப் பொசுக்கவா? ஆ தெய்வமே, என் தலையில் நான் தனிமையாக இருக்கவேண்டுமென்றே எழுதப்பட் டிருக்குமானால் இவ்வனப்பு எனக்கு எதற்காகக் கொடுத்தனை? என்னைச் சந்தியில் இழுக்கவா?' என்று சொல்லி அவள் அடிக்கடி கண்ணீர் விடுவாள்.

இந்து விதவையின் ஆதரிசமானது மிகவும் மேன்மையான தென்பது உண்மைதான்; ஆனால் எல்லா விதவைகளுக்குமே அவ்வாதரிசத்தின்படி நடந்து கொள்ளும்படியான மனோதிடம் எங்கிருக்கிறது? மாலதியின் உள்ளத்தில் விதவை ஸ்திரீக்கு அநுசிதமான காதலின் பிரவாகம் உற்பத்தியாய் அது பல்குனி நதியைப் போல் இது காறும் மறைந்திருந்தது. லஜ்ஜைதான் எம்மட்டும் இந்தப் பிரவாகத்தைத் தடுக்கும்? பரிசுத்தமான அன்பின் ஸ்பரிசத்தினால் ஸ்திரீயானவள் மானிட உருவைத் தரித்த தேவியாவாள். அதுவே பரிசுத்தமில்லாத மனோவிகாரத்தின் ஸ்பரிசமானவுடன் தானவரூபத்தைத் தரிக்கிறாள். மாலதியின் உள்ளத்தில் காதலென்னும் தீ பற்றியெரிந்து கொண்டிருந்தது. அவளுடைய நிலைமையைப் பற்றி யோசிக்குங்கால் அத்தீயானது அவளைத் தேவியாக்குமோ தானவியாக்குமோ வென்று சொல்வதொன்றும் கடினமான காரியமல்ல.

சாந்தாபாய் வியாதியாயிருக்கும் போது அவளுக்கு டாக்டர் சதாநந்தராவ் வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்தா ரென்பதை ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். அவளுக்கு பிரான்கையடீஸ் (மார்ச்சளி) வந்திருக்கிறதென்று டாக்டர் சொன்னது முதல், மேலும் அவளுக்குச் சுரம்வந்தது முதல் வீட்டிலிருக்கப்பட்டவர்களுக்கெல்லாம் அவளைப் பற்றிக் கவலை அதிகரித்தது. சாந்தையின் தாய் இந்திராசித்தி—எப்பொழுதும் அவள் படுக்கையினருகில் உட்கார்ந்திருப்பார். ஒரு நாள் பாபாஸாஹேப் எங்கோ வெளியிற் சென்றிருந்தார். இந்திராசித்தி சாந்தாவினருகில் உட்கார்ந்திருந்தார். டாக்டர் தன் பேஷன்டுக்குச் செய்ய வேண்டிய ஔஷதோபசாரம் செய்துவிட்டு பாபாஸாஹேப்புடைய ஆபீஸ் ரூமில் டையம்ஸ் எடுத்துப் படித்துக்கொண்டு தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்தார். தன்னுடைய எண்ணத்தைச் சதாநந்தருக்குத் தெரிவிக்க இது தான் தக்க சமயமென்று மாலதி ஆபீஸ் ரூமில் வந்து டாக்டருடைய நாற்காலியின் பக்கத்தில் நின்று, மெல்லிய குரலுடன் சொன்னாள். 'இன்னும் எத்தனை நாள் என்னைப் பரீட்சிப்பீர்கள்?' டாக்டர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க அங்கு மாலதி நின்று கொண்டிருந்தாள்! அவர் சொன்னார்:—'உங்க

ளுக்கென்ன வாகிறது?' மாலதி :—' என்ன வாகிற தென்பதைச் சொல்லவேண்டுமானல் பின்னென்ன தேவையாயிருக்கிறது! என்ன வாய்க் கொண்டிருக்கிற தென்பதை என் வாயால் சொல்லுவிக்க வேண்டுமா? தங்கள் பேரில் காதல் கொண்ட ஸ்திரீயின் உள்ளத்தில் எத்தகைய வேதனை யுண்டாகிற தென்பது புருஷர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது? ஆனல் ஏழை அபலைகளைப் படுத்துவதிற்றன் புருஷார்த்த மிருப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றுகிறது.' சதாநந்தர்—(தடுமாறிக்கொண்டு) 'இது யென்ன இது? நான் உங்களை—''

மாலதி:—''ஒரு போதும் படுத்தினதில்லை யென்று தானே நீங்கள் சொல்லுகிறீர்கள்? முதலிற் பிறர் மனதில் ஆசையை உண்டு பண்ணி விட்டுப் பிறகு அதற்குத் தேவையானதை ஒன்றும் போடாமல் வாடச்செய்து கொல்வதானது தயவின்மை யில்லாவிடி லென்ன?''

சதாநந்தர் :—'' என் மனமறிய நான் ஒரு போதும் அவ்வாறு செய்ததில்லை. மாலதிபாய்! என் பேரில் தயவு செய்து இனி இத்தகைய வார்த்தைகளைப் பேசாதீர்.''

மாலதி:—''எனக்குச் சகலமும் நீங்களே யென்று உறுதியாய் நம்பிச்சகலத்தையும் உங்களுக்கே அர்ப்பித்து விட்டேன். அதை இப்பொழுது எப்படி மறுபடியும் எடுத்துக் கொள்ளட்டும்.''

சதானந்தர்:—''உங்கள் மனதில் இயற்கையாக லஜ்ஜையில்லாவிடினும் ஜனங்களுக்காகவாவது லஜ்ஜை பாராட்டுங்கள்.''

மாலதி :—'' ஜனங்களுக்காக லஜ்ஜை பாராட்டும்படி இதில்கெடுதலென்னவிருக்கிறது? நான் செய்வதென்ன கெட்டகாரியமா? இப்பொழுது சட்டப்படி வெளிப்படையாக விதவையை மணம் புரியலாமென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆதலால் நீங்கள் தான் ஜன லஜ்ஜையை விட்டு என்னைக் கைப்பிடித்து ரட்சிக்கவேண்டும். உங்களுடைய கொள்கைகளும் சீர்திருத்தத்தைச் சார்ந்தவைகளாகவே இருக்கின்றன.''

சதாநந்தராவ் :—'' நீங்கள் இப்படிச் செய்வீர்களாகில் எனக்கு மறுபடியும் இவ்வீட்டில் அடிவைக்க முடியாமற் போய்விடு மென்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன் ''

என்று சொல்லி டாக்டர் அவசரமாய் எழுந்து செல்லலானர். மாலதி அவரைத் தடுத்து அவருடைய காலில் சிரத்தைவைத்துச் சொல்லலானள் :—' வேண்டாம், அவ்வளவு கோபம் வேண்டாம். சாந்தாபாயிடம் அன்புடன் பேசும்போது உங்களுக்கு சங்கோஜ மிருப்பதில்லை. பாபியாகிய எனக்கு அன்பென்னும் பிச்சையிடும்போது உங்களுக்கு இவ்வளவு சங்கோஜம் உண்டாவானேன்? நான் விதவை என்ற? அப்படியானல் என்னுடைய குறையை நிறைவேற்றுவது உங்கள் வசத்திற்றன் இருக்கிறது.'

சதாநந்தர் :—'' இதென்ன வெட்கக் கேடு! பெண்களுக்கிது அழகல்ல. மாலதிபாய்! உங்கள் வாயினலேயே தீர்ப்பாகட்டும். நான் சாந்தையின் பேரில் காதல் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரிந்தால் நான் அவளை விசுவாச காதம் செய்ய வேண்டுமென்று உங்களால் எப்படிச் சொல்ல முடிகிறது?''

மாலதி:—(கோபத்துடன் எழுந்து) '' உம்! உம் ! நீங்கள் இவ்வளவு விசுவாசத்துடனும் நேர்மையுடனும் நடந்து கொள்ளப்பட்டவ ரென்று எனக்கு இப்பொழுது தான் தெரிந்தது. புருஷர்களுடைய ஜாதியே மாயாவியாயும் கபடமுள்ளதாயு மிருக்கிறதென்று சொல்லுகிறர்கள், அதொன்றும் பொய்யல்ல. நல்லது!

கான் கேட்கிறேன். நீங்கள் விசுவாசத்திற்காக இவ்வளவுபாடுபடுகிறீர்களானல் உங்களுடைய தர்மபத்தினியை உதைத்துத் தள்ளிவிட்டுச் சாந்தாபாயின் மோக வலையிற் சிக்கிக்கொண்டிருக்கிறீர்களே! அதெப்படி? அந்தச் சமயத்தில் விசுவாசத்தை எப்படி மறந்தீர்கள்?''

மாலதியின் இக்கடைசி வாக்கியம் சதாநந்தராவின் மனதிற்கு மிகவும் உறுத்தியது. தனக்கு சாந்தையின் பேரிலும் சாந்தைக்குத் தன் பேரிலும் காதலிருக்கும் சங்கதி இவளுக்கெப்படித் தெரிந்தது? அன்றி தன் பத்தினியின் பேரில் தனக்கு இருக்கவேண்டிய அன்பு இல்லை யென்பது எவ்வளவோ ரகசியமாயிருக்கும்போது, இவள் காதிற்கெப்படி யெட்டியது? இவ்விரண்டு விஷயங்களால் அவருடைய சித்தம் கலங்கி விட்டது. அந்நிலைமையிலேயே அவர் வெளியிற் சென்றார்.

மாலதி அசாத்திய கெட்டிக்காரி யென்பது அவருக்கெப்படித் தெரியும்?

## பதினோராவது அதிகாரம்.

## மாறுபாடு.

கடந்த அதிகாரத்தில் நடந்த சங்கதிக்கு வெகு நாட்களான பிறகு ஒருநாள் பிற்பகலில் டாக்டர் சதாநந்தராவ் தன் ஔஷதசாலையில் வியாதிக்காரரை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் பொழுது அவர் வீட்டு வேலைக்காரி ஓடி வந்து பயந்து நடுங்கிக்கொண்டே சொன்னாள்:—'சுவாமி, சீக்கிரம் வீட்டிற்கு வாருங்கள். அம்மாவைப் பாருங்கள்; என்னமோ செய்கின்றனர்!' அவளுடைய இவ் வார்த்தைகளைக்கேட்டு டாக்டருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. காரணம், அவர் அப்பொழுது தான் வீட்டிலிருந்து ஔஷதசாலைக்கு வந்திருந்தார். அப்பொழுது ஜானகிபாய் கொஞ்சம் தலைவலிக்கிறதென்று சொல்லிக் கொண்டிருந்தனள். இவ்வளவு சீக்கிரத்தில் அந்தத் தலைவலி இப்படியாகுமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. டாக்டர் அவர்களுக்குப் பத்தினியின் பேரில் அன்பு மிதமாகத்தான் இருந்த போதிலும், ஜீவகாருணியம் மிகவும் மேலிட்டிருந்தமையால் வேலைக்காரி ஜானகியைப் பற்றி பயப்படும்படியாகச் சொன்ன சங்கதியைக் கேட்டவுடன் 'நான் போய் வருகிறேன். யாராவது வந்தால் உட்காரச் சொல்' என்று கம்பௌண்டரிடம் சொல்லி டாக்டர் துரிதமாய் வீட்டிற்குப் போனர். வீட்டிற்குப்போய் பார்க்க அவருடைய பத்தினி மரணத் தருவாயில் இருந்தாள். உயிர் துடித்துக் கொண்டிருந்தது; நாடிகள் உள்ளுக்கிழுத்துக் கொண்டிருந்தன; கண்கள் உள்ளுக்குப் போய் ஒளி மழுங்கி இருந்தன, நாக்கு உலர்ந்து போயிருந்தது. சதாநந்தராவ் தன் பத்தினியின் தலைமாட்டில் உட்கார்ந்து என்னவாகிற தென்று கேட்கலானர். அவரை நோக்கி ஜானகிபாய் சொல்லலானள், 'நாதா சாகும் பொழுது தங்கள் சரணத்தை தரிசிக்க வேண்டுமென்று இச்சையாயிருந்தது. அதைக் கடவுள் நிறைவேற்றினர். இனி நான் சுகமாய் உயிரை விடுவேன். இந்த ஜன்மத்தில் என்னல் தங்களுக்குச் சுகமுண்டாகவில்லை. அது அடுத்த ஜன்மத்திலாவது உண்டாகட்டு மென்று நான் கடவுளைக் கேட்டுக்கொள்கிறேன். என்னல் தங்கள் சேவையில் ஏதாவது குற்ற மேற்பட்டிருக்கும், நான் பிசகியிருப்பேன்; அவைகளை மன்னிக்க வேண்டும். நான் இப்பொழுது போகிறேன். இப்பொழுது கடைசியாகவாவது என்னை 'ஏற்றுக் கொண்டேன், மன்னித்தேன்' என்னும் இனிய வாக்கியங்களைக் கேட்கும்படி செய்யவேண்டு மென்பது தான் என் கோரிக்கை.'

சதாநந்தராவுடைய கவனம் அவளுடைய பேச்சைவிட அவளுடைய நிலைமையின் பேரில் தான் அதிகமாயிருந்தது. தன் பத்தினி

விஷம் சாப்பிடவில்லை யல்லவா? காரணம் விஷ பாதையின் லக்ஷணங்களெல்லாம் இருக்கின்றனவென்று சந்தேக முண்டாயிற்று. இச்சந்தேகம் மனதிலுதிக்கவும் அருகிற்கிடந்த ஒரு சிறிய புட்டி அவர் கண்ணுக்குத் தென்பட்டது. இப்புட்டி ஒரு கொடும் விஷத்தின் புட்டியாகும். அதைக்கண்டதும் சதாநந்தராவின் வாயினின்றும் பின்வரும் வாக்கியம் வெளிவந்தது:— 'ஹா! ஜானகி! நீ என்ன செய்தனை?' இனி ஒரு க்ஷணமும் வீண் போக்கக்கூடாதென்று, அவர் உடனே அந்த விஷத்திற்கு முறிவான மருந்தைக் கொடுக்க ஆரம்பித்தார். தக்க சமயத்தில் ஔஷதோபசாரம் செய்தமையால் விஷமெல்லாம் வாந்தியாய் ஜானகிபாயிக்குச் சற்று அனுகூலப் பட்டது. அன்றயதினம் முழுவதும் சதாநந்தராவ் தன் பத்தினியை விட்டு அசைந்திலர்.

இரண்டு மணி நேரத்திற் கெல்லாம் ஜானகிபாயிக்கு நன்றாகக் குணமுண்டாயிற்று. பிறகு ஜானகிபாயின் தலையைத் தன்மடியில் தூக்கி வைத்துக்கொண்டு, அன்புடன் அவள் முகத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சதாநந்தராவ் சொன்னார், 'என் செல்வமே, ஏன் இப்படிப் பைத்தியக்காரத்தனம் செய்தனை? நான் வீட்டிற்குச் சற்று தாமதமாய் வந்திருந்தால் எவ்வளவு அநர்த்த முண்டாயிருக்கும்?'

ஜானகிபாய்:—என்ன சொல்லட்டும்? தங்களுக்குச் சுகமுண்டாக வேண்டுமென்று நான் இதைச் செய்யப் போனேன்.

சதாநந்த ராவ்:—அப்படியானால் உன் சாவால் நான் சுகியாவேனென்று நீ எண்ணங் கொண்டனை யல்லவா! பேஷ்! நீ என்னை நன்றாகப் பரிசோதித்தனை.

ஜானகி:—ஜலமின்றி மீனின் ஜீவியம் எப்படி வீணோ அப்படியே அன்பின்றி ஸ்திரீயின் ஜீவியம் வீண்! அவ்வன்பு என் பங்கிற்கு வாராமல் சாந்தாபாயின் பெரும் பாக்கியத்தினால் அவளுக்குக் கிடைத்த பிறகு நான் உயிர்த்திருக்கக் காரணமே யில்லை யென்று எனக்குத் தோன்றியது.

சதாநந்த ராவ்:—(நகைத்து) இது உனக்குச் சொன்னது யார்? யார் சொல்லியிருந்த போதிலும் சரி, அது முற்றிலும் பொய் என்று நான் சொன்னால் நீ என்னை நம்புவாயோ மாட்டாயோ? என் அன்பே! இதுவரையில் நான் உன்னைப் பொருள் பண்ணாமலிருந்தது உண்மைதான்; இருந்தபோதிலும் நான் அன்னிய ஸ்திரீயின் வலையிற் சிக்கி உன்னை அநாதரவு செய்ததும் இல்லை, இனிச் செய்யப்போவது மில்லை. சமீபத்தில் நடந்த ஓர் சங்கதியினால் என் இல்லற சுகத்தில் மண்ணைப்போடும் பொருட்டு யாரோ முயன்றிருக்கின்றனர் என்று என் புத்தியிற் படுகிறது. உனக்கு அம்மனுஷியின் உண்மையான சுபாவம் இத்தகையதென்று தெரிந்திருந்தால் நீ ஒருபோதும் இப்படி மோசம் போயிருக்க மாட்டாய். நான் சாந்தாபாயின் வனப்பையும், மதுரமான பேச்சையுங் கண்டு சிறிதுகாலம் மயங்கி இருந்தது உண்மைதான். ஆனால் உன்னை விலக்கிவிட்டு அவளை இல்லாளாக்க வேண்டுமென்கிற எண்ணம் கனவிலும் என் மனதிலுதிக்கவில்லை. நீ சகஜமாய்க் கேட்டதின் பேரில் நானும் நேர்மையாய் ஒன்றையும் ஒளிக்காமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். இத்தனை நாள் ஆனது ஆயிற்று. இதுவரையில் உன்னிடம் இருக்கும் அரிய குணங்களை நான் அறியவில்லை—எனது நண்பன் கங்காதரன் சொல்லியும் நான் அறியவில்லை—என்னுடைய இந்த மூர்க்கத்தனத்திற்காக நான் மிகவும் பச்சாதாபப்படுகிறேன். உண்மையாக உன்னுடைய துக்கத்துக்கு நான் தான் காரணமானேன். விஷத்தைச் சாப்பிடும் வரையில் வந்தும் கூட, நீ உன் துக்கத்தை வாய் திறவாமற் பொறுத்தனை. இதில் தோஷ

மெல்லாம் என்னுடையது தான். இந்த அபராதத்திற்காக நீ என்னை மன்னிப்பாயாக. இன்று முதல் என் நடத்தை மாறுபட்டிருப்பது உனக்குத் தெரியவரும். துக்கமானது இனி உன்னை ஸ்பரிசிக்கப் போவதில்லை' என்று சொல்லி அவர் தன் தர்மபத்தினியின் கன்னத்தில் முத்தமிட்டனர். அது முதல் ஜானகி பாயின் தேகத்தில் நிகரற்ற சுகமயமான நவ ஜீவனத்தின் சஞ்சாரமாய் அவள் தன் பதியை அன்புடன் இருகத் தழுவிக் கொண்டாள்.

சதாநந்த ராவ் சமுசயம் கொண்டது உண்மையாகத் தான் இருந்தது. மாலதியை அவர் நிராகரித்த தினம் முதல் அவள் அதற்குப் பழிவாங்க எண்ணங்கொண்டு அவர் இல்லாத சமயங்களில் ஜானகிபாயிடம் வந்து போய்க்கொண்டிருந்து வெகு மாயாவித்தனத்துடன் கபட மறியாத ஜானகிபாயின் பரிசுத்தமான உள்ளத்தில் அவள் கணவனின் துர்நடத்தயைப்பற்றி—விசேஷமாய்ச் சாந்தாபாய்க்கும் அவருக்கும் எற்பட்ட நட்பைப் பற்றி—கண்டபடி சொல்லிக் கலக்கமுண்டாக்கி இருந்தாள். போதாக்குறைக்கு விஷத்தைத் தின்று வது இந்த துக்கமயமான ஜீவியத்தை யொழிக்க வேண்டுமென்கிற கற்பனையையுங்கூட மாலதிதான் ஜானகிபாயின் மனதில் நிறப்பி இருந்தாள்.

கங்காதான் ஜானகிபாயினிடம் அமைந்திருக்கும் நிகரில்லா நற்குணங்களைப் பற்றி எடுத்துரைத்திருந்தான். அவள் விஷமருந்திய சந்தர்பத்தினுல் அவளுடைய உள்ளத்தின் பரிசுத்தத் தன்மையும் அன்புடைமையும் அவருடைய அனுபவத்திற்கு வந்தது. இவ்விரண்டு விஷயங்களால் சதாநந்தராவுடைய மனதில் இஷ்டமான பரிணமமுண்டாய் அவருக்குத் தன் நடத்தையைப் பற்றி மிகவும் பச்சாதாப முண்டாய் அன்று முதல் அவர் நடத்தையில் மாறுபாடுண்டாயிற்று. பிறகு அவர் சாந்தாபாய் வீட்டிற்குப் போக்கு வரத்து முற்றிலும் குறைந்து விட்டது. ஏனென்றால் அவ்விடம் போக்கு வரத்து வைத்து கொண்டால் ஜானகி பாயியின் மனதில் மறுபடியும் வீண் சங்கைக்கு இடமுண்டாகும் என்று பயம்; இரண்டாவது காரணம் மறுபடியும் சாந்தாபாயின் மோக வலையிற் சிக்கிக்கொண்டு மோசம் போனல் என்ன செய்வது என்று டாக்டருடைய துர்ப் பலமான மனது அவரைக் கேட்டுக்கொண்டிருந்தது.

## பன்னிரண்டாவது அதிகாரம்.

## திரிவேணி ஸங்கமம்.

தோண்டுநானா தன் நண்பர்களுடன் பொம்பாயில் கொட்டமடித்துக் கொண்டிருந்தான். மஹேசன் தன் சகோதரியினிடத்தில்—மாயி ஸாஹேப்பினிடத்தில்—இருந்தான். அவனையும் அவர்கள் இரகசியமாய்க் கடிதம் எழுதி வரவழைத்துக் கொண்டு தமது துர்நடத்தையின் தீட்சையைக் கொடுத்தனர். மாயிஸாஹேப்பினிடத்தில் இப்பொழுது துணைக்குத் திரிவேணியைத் தவிறவேறுஒருவருமிலர். திரிவேணியின் பேரில் அவருக்கிருந்த அன்பு எப்படி வீண் போய்க் கொண்டிருந்தது என்பது வாசகர்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது.

நாட்கள் ஒன்றின் பின் ஒன்றாக எத்தனையோ நாட்கள் ஓடிப்போயின. மாயிஸாஹேப்பிற்கு மாத்திரம் அதே தினங்கள் வெகு கஷ்டமயமாகவும், அசிங்கமாகவும் தோன்றலாயின. இரண்டு வருஷங்களுக்கு முன் தமது நிலைமை எப்படியிருந்தது, அதுவே அதிருஷ்டமென்னும் சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டமையால் அது எப்படியாயிற்று என்பதைப் பற்றி யோசிக்க இப்பொழுது அவருக்கு வேண்டிய சாவகாசம் கிடைத்தது. 'உருளும் சக்கரத்தைப் போல் மனிதனுடைய நிலைமை மேலும் கீழும் போய் வந்து கொண்டிருக்கின்

றது' என்னும் வாக்கியத்தில் சிரத்தைவைக்கும் படியான தூரதிருஷ்ட வசத்தினால் அவர்களுக்குக் கிடைக்காமையினால், சதாகாலமும் தமக்குண்டான துன்பத்தைப்பற்றி நினைத்துக் கடைசியில் அவருக்குப் பைத்தியம் பிடித்தது. அப்பைத்தியத்தின் வெறியில் ஒரு நாள் இரவு அவர் கிணற்றில் விழுந்து உயிரைத் துறந்தனர்.

இப்பொழுது திரிவேணி ஒருவள் தான் மீந்தாள். பாபம், அவள் துன்பங்களால் சூழப்பட்ட, உலக அனுபவமற்ற பதினைந்து பதினாறு வயதுடைய சிறுமி! மாயிஸாஹேப் இருக்கிற வரையில் அவருடைய குடையின் கீழ் அவள் எப்படியோ தைரியமாய்க் காலத்தைக் கழித்தாள். அவர் போனவுடன் அவள் தன் தைரியத்தை இழந்தாள். அவள் ஒன்றும் தோன்றாதவளாய் வீட்டைப் பூட்டிக்கொண்டு நாசிக்கிலிருக்கும் ஆசிரமத்தை நாடிச் சென்றாள்.

இவ்விடத்தில் நமது சக்கிரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் காரணத்தை முன்னிட்டு அநேகக் கைதிகளை விடுதலை செய்தார்கள். அவர்களுள் பாவுஸாஹேப்பும் விடுதலை யடைந்தார். தன்னுடைய கஷ்டம் ஒழிந்து இனிதான் தன் குடும்பத்திலிருக்கும் ஜனங்களைச் சந்தோஷமாகக் காணலாமென்று உற்சாகத்துடன் அவர் தன் வீட்டிற்கு வந்து பார்க்க வீடு பூட்டப்பட்டிருந்தது! அக்கம் பக்கத்தில் விசாரித்த பிறகு அவர்கள் துக்ககரமான கதையைச் சாங்கோபாங்கமாகச் சொன்னார்கள். அப்பொழுது அவருடைய உற்சாகமெல்லாம் மறைந்து போய், தான் சிறைச்சாலையிலிருக்கும்போது தான் சுகமாயிருந்தது, வீணாக இந்தத் துக்கத்தைக் கேட்க இவ்விடம் வந்தோமென்று அவருக்குத் தோன்றியது. தான் முதலில் பொம்பாய்க்குப் போய் தோண்டுநாநா மஹேசன் இவர்களுடைய கொழுப்பை யடக்கி அழைத்துவரவேண்டும், பிறகு நாசிகிற்குப் போய் திரிவேணியையும் அழைத்து வரவேண்டுமென்கிற எண்ணத்துடன் அவர் முதலில் பொம்பாய்க்குப் போனார்.

அங்கு போய்ப்பார்த்தால் என்ன விசித்திரம்! தோண்டு நாநா, மஹேசன் இவர்களுடைய நண்பர்கள் இவர்கள் பேரில் ஒரு தாசியைக் கொலை செய்த குற்றத்திற்காக ஸெஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடந்து கொண்டிருந்தது. விசாரணையில் குற்றவாளிக்கு விரோதமாய் வேண்டிய சாட்சியும், ருசுவும் வெளி வந்தமையால் என்ன தீர்ப்பாகு மென்பதைப் பற்றி யாருக்கும் சங்கையே யிருக்கவில்லை. தன் பாரியைக்கான கதியையும், இவர்களுடைய இந்நிலைமையையும் பார்த்து பாவுஸஹேப் மிகவும் வெறுப்படைந்து, இனி சந்நியாசம் எடுத்துக் கொண்டு எங்காவது க்ஷேத்திரத்தில் போய் வசிக்க வேண்டுமென்று நினைத்தார். ஆனால் அதற்குள் கடைசியாக ஒரு முறை திரிவேணியைப் போய்ப்பார்க்க வேண்டுமென்று அவர் நாசிகிற்குப் போனார்.

அவர் எந்த வண்டியிலிருந்து நாசிக்ரோட் ஸ்டேஷனில் இறங்கினரோ அதே வண்டியிலிருந்து காவி வஸ்திரம் தரித்த ஓர் இளம் பிராயமுள்ள மனிதன் இறங்கினான். அவனைக் கண்டதும் பாவுஸாஹேப் திடுக்கிட்டார். இம் மனிதன் யாராயிருப்பானென்று வாசகர்களுக்கு சகஜமாய் விளங்கி யிருக்கும். இவன்தான் கங்காதரன். கங்காதரன் எல். எல். பி. பரீட்சையில் தேர்ந்திருந்தான். ஆனாலும் வக்கீல் தொழிலைச் செய்து பணம் சம்பாதிப்பதைவிட வேறு விதத்தில் தன் ஜன்மத்தை சார்த்தகம் செய்துகொள்ள வேண்டுமென்று அவன் தீர்மானித்திருந்தான். திரிவேணியை அடையும் விஷயத்தில் அவன் நிராசை அடைந்த நாள்

முதல் அவன் தன்னை விவாக சூத்திரத்தினல் பந்தப்படுத்திக் கொள்வதில்லை யென்று தீர்மானித்திருந்தான். அநாதாசிரமத்தின் சம்ஸ்தையிலிருந்து சக்தியின்படி தேச பந்துக்களின் சேவை செய்யவேண்டு மென்கிற சங்கல்பத்துடன் அவன் புறப்பட்டிருந்தான். மேலும் சம்சாரத்தில் பிரவேசிக்கும் மோகம் உண்டாகக் கூடாதென்று அவன் கிரகஸ்தாசிரமத்தின் வேஷத்தைக் களைந்து சந்நியாசிகளுடைய காஷாய வஸ்திரத்தைத் தரித்திருந்தான். பாவுஸாஹேப்பும் அவனும் ஒரே குதிரை வண்டியில் உட்கார்ந்து நாசிகிற்குப் போனர்கள். வழியில் கங்காதரன் தன் சங்கதி முழுவதும் திறந்த மனதுடன் பாவுஸாஹேப்பிடம் சொன்னன். அவனைப்பற்றி பாவுஸாஹேப்பினுடைய அபிப்பிராயம் ஆதிமுதல் நல்லதாகவே யிருந்தது. அதற்கு அவனுடைய தேச சேவையின் சங்கற்பம் புஷ்டியைக் கொடுத்தது.

பாவுஸாஹேப், கங்காதரன் இருவரும் நாசிக் சென்று திரிவேணியைப் பார்த்தனர். அப்பொழுது எல்லோருக்கும் எல்லையில்லா ஆனந்தமுண்டாயிற்று. ஆசாபாசமென்னும் மோக வலையில் அகப்பட்டுக் கொண்டிருந்த பாவுஸாஹேப், புதிய உற்சாகத்துடன் தேச சேவைக்கு ஆத்ம சமர்ப்பணை செய்ய வேண்டுமென்னும் பலமான இச்சையுடன் வந்த கங்காதரன், இயற்கையாகவே கோமளம், அதிலும் ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ந்துவரும் துக்க பரம்பரையினல் மிகவும் கோமளமடைந்த மனோவிருத்தியையுடைய திரிவேணி — என்ருல் சகோதரிகளுடைய சேவைக்காக அவதரித்த சாத்விக குணத்தின் மூர்த்தியாகிய திரிவேணி —இவர்களுடைய எதிர்பாராத சங்கமமானது திரிவேணி சங்கமத்தைப் போலவே கம்பீரமும் பெருந்தன்மையுடையதும், பவித்திர சொரூபமுடையதாகவுமிருந்தது. இந்த சங்கமத்தில் நீராடினவர்களுடைய உள்ளத்தில் இழிவான புத்தி, இழிவான எண்ணங்கள் இவைகளுக்கு இடமே இருக்கவில்லை. இந்த ஆசிரமத்திலிருக்கும் வாதாவரணமே (atmosphere) இவ்வாறு உன்னதமானதும் பவித்திரமானதுமாயிருந்து, அங்கு போனபிறகு பாவுஸாஹேப் பிறகும் தாம் இனி இங்கே நல்லோர்களுடைய சகவாசத்தில் இருந்து தேகத்தை சார்த்தகம் செய்துகொள்ள வேண்டுமென்று தோன்றியது. என் தோன்ருது? பாபாஸாஹேப்புடைய உபதேசம் எப்படியோ அப்படியே அவருடைய ஆசரணமுமிருந்தது. அவ்வுபதேசம் எத்தகையது என்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அதன் சாரத்தைக் கொஞ்சத்தில் இவ்விடத்தில் எழுதுகிறேன்.

‘ஞானம், பக்தி, கர்மம் இவைகள் பிரம்மத்தையடையும் மூன்று மார்க்கங்களாகும். அவற்றுள் முதலாவது, மூன்ருவது இவ்விரண்டும் கஷ்டசாத்தியமும், இரண்டாவது அற்பாயாசத்தால் சாத்தியமாகக் கூடியதாயும் இருக்கிறபடியால் பக்திமார்க்கமே சாமானிய ஜனங்களுக்கு விசேஷ உபயோக முள்ளதாய் இருக்கிறது. கடவுளிடத்தில் அத்யந்த அனுரக்தி என்ருல் பக்தி, கடவுளானவர் ஞானியின் ஞான சொரூபமாயிருக்கிருர். ஞானத்தினுல் மனிதன் கர்மிஷ்டனுவதற்கும், கர்மாசரணத்தினல் துராக்கிரகம் உடையவனுகவும் சம்பவ மிருக்கிறது. ஆனல் பக்திமார்க்கத்துடன் போகப்பட்டவனுடைய கதியானது எதனுலும் தடுக்கப்படாததாயிருக்கிறது. அவன் அந்த மார்க்கத்தில் எவ்வளவு தூரம் போகிருனே அவ்வளவு அவன் திருஷ்டி விரிவடைகிறது. மனதின் குறுகிய தன்மை இல்லாமற் போய் உள்ளத்தின் விருத்தி உத்தமமும் உதாரமும் ஆகிறது. அவன் இவ்விசுவமானது தன் குடும்பமாகக் கருதுகிருன். அவனுக்கு துக்கத்தின் பாதையாவதில்லை. உலகமெல்லாம் அன்பு மயமாக அவனுக்குக் காணப்படுகிறது. பிராணி மாத்திரத்

தின் கல்யாணமே அவனுடைய தியானம், மனனம், சிந்தனை இவைகளின் விஷயமாகிறது. அவன் உலகத்தின்கண் பிரம்மத்தையும், பிரம்மத்தின் கண் உலகத்தையும் காண்கிறான் என்று உபநிஷத்துக்கள் உபதேசிப்பதாவது அப்பா, 'அவனுக்காகப் பைத்தியக்காரராய் அவனைத் தேடி நாடுங்கள்.' இந்த சம்சாரத்தில் யார் பைத்தியக்கார ரல்லாம லிருக்கின்றனர் ? சிலருக்குப் பணப்பைத்தியம், சிலருக்குப் புகழுக்காகப் பைத்தியம், சிலருக்குச் சிற்றின்பப் பைத்தியம், சிலருக்கு மனைவி, மக்கள் பைத்தியம், சிலருக்குச் சுயதேசத்திற்காகப் பைத்தியம், சிலருக்குப் பிறருடைய அனுகாணம் செய்யும் பைத்தியம். இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பைத்தியக்காரர்களாயிருக்கின்றனர். ஆனால் பகவத் பிரேமையினால் பைத்தியம் பிடித்த ஸ்ரீ துகாராம் மகாராஜரைப் போன்ற புருஷர்கள் தான் தனியராவார்கள். ஆதலால் இத்தகைய விச்வபந்துத்துவம், இத்தகைய வியாபகமான பிரேமை இருதயத்தில் பிடித்து ஈசுவரனுடைய ஸ்மரணை செய்து மனிதன் தன் கடைமையைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.'' அவருடைய இவ்வுபதேசத்தை அநாதாசிரமத்தில் திரிவேணி, பாவுஸாஹேப், கங்காதரன் முதலியவர்கள் கூடியவரையில் பரிபாலித்து வந்தது முதல் அவர்களுடைய மனதிற்கு ஒப்பு உயர்வற்ற சாந்தியும், சுகமும், சமாதானமும் உண்டாயின. அதுபோல் நமது வாசகர்களுக்கும் உண்டாக வேண்டுமென்று எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன். ததாஸ்து !

சுபம்.

# ரத்னக் களஞ்சியம்.

"பாபதிருஷ்டி இருப்பதைவிட, நான் குருடனாயிருப்பது மேல். பிறருடைய நிந்தையை நான் கேட்கமாட்டேன். அதைக் கேட்பதைவிட நான் செவிடனாயிருப்பது நலம். நான் ஊமையாயிருந்தாலும் இருக்கிறேன். என் வாயினின்று கெட்ட வார்த்தைகள் வருமாறு செய்யாதே. நான் இறந்தாலும் சரி, என்னால் வியபிசாரம் ஏற்படவேண்டாம். ஈசுவரா, நீ ஒருவன்தான் எனக்குப் பிடிக்கிறாய், உன்னைத் தவிர வேறொன்றும் எனக்குப் பிடிக்கிறதில்லை'' என்று சாது சிரோன்மணியாகிய துகாராமர் ஓர் பாட்டில் பாடியிருக்கிறார்.

ஏசு கிறிஸ்துவின் உபதேசமும் இப்படித் தானிருக்கிறது. அவர் சொல்லுகிறார், "உன் கை கெட்ட காரியத்தைச் செய்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கைகளும் நன்றாயிருந்து நாகவேதனை அனுபவிப்பதைவிட முடமான கையுடன் ஜீவயாத்திரை செய்வது மேல். காரணம் பாபியின் ஜீவனம் என்றால் அகண்டமான (ஓய்வில்லாத அல்லது அறுபடாத) நாகவாசம்தான். அந்தப் பாப கர்மத்தினின்றும் விலகி அவனுக்குண்டாகும் தாகம் சமனமாவதில்லை. அவனுடைய உள்ளத்தில் தேள் கொட்டினாற்போல் சதாகாலமும் வேதனை உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. உன் கால் உன்னை துன்மார்க்கத்தில் கொண்டு சென்றால் நீ அதை வெட்டிவிடு. நொண்டியாய் ஆயுள் நாட்களைக் கழித்தாலும் கழிக்கலாமே யொழிய இரண்டு கால்களும் நன்றாயிருந்து நாகத்தில் விழவேண்டாம். காரணம், உள்ளத்திலிருக்கும் வேதனையும், தாகமும் சமனமாகப் போவதில்லை. உன் கண்ணில் பாபவாசனை இருக்குமானால் கண்ணைப் பெயர்த்து எடுத்துவிடு. இரண்டு கண்களும் நன்றா

யிருந்து, பாபச் செயல்களிலாழ்ந்து, ஈசுவரனி னின்றும் தூரத்திலிருந்து காலத்தைக் கழிப்ப தைவிட, ஒரு கண்ணுடன் சத்கர்மத்தைச் செய்து கொண்டு, ஈசுவரனுடைய சந்நி தானத்தில் வசிப்பது நலம். காரணம், பாபியின் உள்ளத்தின் வேதனையும், தேகத்தின் தாக மும் சமனமடைவதேயில்லை.''

பாப கர்மத்தைப்பற்றி துகாராமர், கிறிஸ்து இவர்களுடைய மனோ விருத்தியைப் போல் சாதாரண ஜனசமூகத்தின் மனோவிருத்தியில்லை. எனது நண்பர் ஒருவர் வெகு தனவானயிருந் தார். அவர் உலக இன்பங்களின் வசப்பட்டு தனத்தை எல்லாம் வாரி இறைத்து விட்டார். ஒரு தடவை அவர் தான் செய்ததையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது "தனத் தை எல்லாம் நாசம் பண்ணிவிட்டேன் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், ஆனால் நான் ஐசுவ ரியத்தை அனுபவித்தேன் என்பதை நீங்கள் கவனிப்பதில்லை, ஐசுவரியத்தை அனுபவிக்கா மலே எத்தனை பெயருடைய லக்ஷ்மி நஷ்ட மடையவில்லை! ஆனல் என் விஷயம் அப்படி யல்ல, நான் திரவியத்தை நன்றாக அனுபவித் தேன்'' என்றார். கிறிஸ்துவின் வசனங்களைப் பார்த்தால் இப்படிச் சொல்வது வெறும் பொய்யும், கபடம் நிறைந்த வார்த்தைகள் என்றும் தெரியவரும். துர்நடத்தையில் பணத் தைச் செலவழிப்பதென்றால் சம்பத்தை அனுப விப்பதன்று. உண்மையில் என் நண்பர் சம் பத்தை அனுபவிக்கவில்லை. துர்நடத்தையில் அவருடைய சம்பத்தை நஷ்டமடைந்தார், மானத்தைக் கெடுத்துக் கொண்டார், ஐசுவரி யத்தை வாரி இறைத்தார், சரீரமென்னும் சம் பத்தை இழந்தார், சீலத்தையும் கெடுத்துக் கொண்டார். அவர் கையிலிருந்த கருக்கான ஆயுதத்தால் தன்னையும், மனைவி மக்களையும் காயப்படுத்தினர். இதற்கு சம்பத்தை அனு பவிப்பது அல்லது உபயோகிப்பது என்று சொல்வதில்லை. இந்த அவஸ்தைக்குத் தான் கிறிஸ்து நரகவாசம் என்கிறார். இத்தகைய ஜீவி யத்தை வெறுத்துச் செய்த கர்மத்தைப்பற்றி பச்சாத்தாபமுண்டாய், மனிதன் தன் நடத்தை யில் மாறுபாடு அடைகிறபொழுது (நன்னடக் கையிற் பிரவேசிக்கும் பொழுது) அவன் புனர் ஜன்மமடைகிறான். பிறகு அவன் த்விஜனாய்க் கடைத்தேறும் மார்க்கத்தை நாடுகிறான்.

கிறிஸ்து நரகத்தில் பயமுறுத்தி பாபத்தை நிஷேதிக்கிறார். துக்காராமருக்குக் கடவுள் பேரில் வெகு இஷ்டம், மிகவும் அன்பு ஆகலால் அவருக்குப் பாபத்தைப்பற்றி வெகு வெறுப்பு. கிறிஸ்து சொல்லுவது சாதாரண ஜனங்களைப்பற்றியது. சிறு குழந்தைகளுக்குப் பிரம்பைக் காண்பித்து விளையாட்டுத் தனத்தி னின்றும் விலக்கிப் படிக்க உட்காரவைப்பது. இதைப்போல் தானிருக்கிறது. வித்தையில் அபி ருசி இருப்பதனால் விளையாட்டுத் தனத்தைப் பற்றி சகஜமாய் எந்தப் பையனுக்கு வெறுப்பு ஏற்படுகிறதோ அத்தகைய பையனைப்போல் துகாராமருக்குப் பாபத்தைப்பற்றி வெறுப்பிரு க்கிறது. பரம பவித்திரமான கடவுளைப்பற்றி நிகரற்ற அன்பிருந்தமையால் அபவித்திரமான விஷயத்தைப்பற்றி அவருக்கு வெறுப்பாயிருக் கிறது. அவருடைய ஸ்திதி பகவத் கீதையில் रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते என்று சொல்லியபடி இருக்கிறது. எவனுக்குக் கடவுளுடைய தரிசன மாயிருக்கிறதோ அவனுக்குஇதாவிஷயங்களில், சிற்றின்பம்முதலியவைகளில், சுகமிருப்பதாகத் தோன்றுவதில்லை. அவனுடைய மனம் கடவு ளிடத்தில் அமர்ந்திருக்கிறது. கடவுள் பேரில் தான் அவனுக்கு இஷ்டம். கடவுளுடைய காரியத்தைச் செய்வதில் அவனுக்கு வெகு ருசி. இதா இழிவான விஷயங்களில் அவனுக்கு வெறுப்புத்தான்.

# ஸ்ரீகிருஷ்ணன் ஜன்ம தினம்.

## அத்தியாயம் I.

### துயிலெழல்.

கிருஷ்ணனுக்கு ஐந்து வயது—பொழுது விடிந்தால் அவனுக்குப் பிறந்த நாள். அந்த விசேஷதினம் உதயமாவதற்குஇன்னும்இரண்டு மணி நேரம் தான் இருக்கிறது. சந்திரன் ஆகாயத்தில் உயரவேயிருக்கிறான். அப்பொழுது யசோதை விழித்துக்கொண்டாள். தன் இரு கால்களையும், அவளைச் சுற்றிப் பின்னியபடி அவள் மார்பை இறுக அணைந்தவாறு பாலன் உறங்கிக்கொண்டு இருந்தான். அன்று அதிகாலையிலேயே எழுந்துபோக அவளது ஆவல். இருந்தும் தன்செல்வக் கண்மணியின் உறக்கத்தைத் தொந்தரவு செய்ய அவள் தயங்கினாள். மெல்ல, அவன் பிடிப்பிலிருந்து இனிமை வாய்ந்த தன்னை விடுவித்துக் கொண்டாள். மயக்கும் அவன் முகத்தையும், ஆதாவாய் அணைந்திருப்பதையும் கண்ணுற்ற யசோதை கண்களில் நீர் நிரம்பியது. அவன் நீண்ட ஆயுளும், ஆனந்தமுமடைய வேண்டுமென உள்ளம் உருகி பகவானைப் பிரார்த்தித்தாள். பின்பு எழுந்து வெளியே வந்தாள்.

வெளியே, காலையில் மலரும் பூக்கள் மலர்ந்திருந்தன. வைகரையில் எழும்பறவைகள் கிருஷ்ணன் ஜன்ம தின உதயத்தை எதிர்பார்ப்பதில் பொறுமையற்றது போல் அடிக்கடி கூவத்தொடங்கின. யசோதையும் மெதுவாகப் பாடத்துடங்கினாள். அவள் பாடினதும் அந்த ஆனந்த தினமானது சீக்கிரத்திலேயே விடிந்து விடுமென்று அவைகளுக்கு பதில் அளித்து ஆறுதல் செய்வது போலிருந்தது.

யசோதை அதிசீக்கிரமாக ஸ்நானம் செய்து தானே தயிர்கடைய உட்கார்ந்தாள். அன்றைய விசேஷத்திற்கு வேண்டிய அனைத்தையும் தானே செய்ய ஆவலுடையவளாக இருந்தாள். எனெனில் அவளது செல்வ மைந்தனது ஆயுள் விருத்திக்கும், ஆனந்தத்திற்குமாகவே யன்றோ அவள் செய்கிறாள்! அவள் தயிர் கடையும் பொழுது மாறி மாறி வரும் மத்தானது அவள் பாட்டின் காலத்தை ஒத்துக் கடைவது போலிருந்தது.

அவள் பாடியது, பகவானை நோக்கி அவள் குழந்தையை ரட்சிக்கும்படி பிரார்த்திப்பதாக விருந்தது. அவரிடம் அக்குழந்தையை வர்ணித்துப்பாடும் பொழுது அப்படிப்பட்ட இனிமையும், அன்பு பெருகும் உள்ளமும், மனதைக் கவரும் அழகும் உடைய அவ்வுருவை சிருஷ்டித்த பகவான் கட்டாயம் அதை அனுக்ரகிப்பாரென்றும், அவரது ஆவலான விருப்பமும் அப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் அவளுக்கு உறுதியாகத் தோன்றியது.

தயிர் கடைந்து விட்டுப் பிறகு யசோதை அநேக மந்திரங்களுடனும், சுலோகங்களுடனும் அடுப்பைப் பற்றவைத்தாள். அதில்,கிருஷ்ணனை ஸ்நானம் செய்விக்க எண்ணெய் காய்ச்சிவிட்டு, பல வாசனை மலர்களைப் பொடிசெய்து வைத்த தூள்கலந்த சந்தனப் பொடியையும் அந்த எண்ணெயுடன் காய்ச்சி வைத்தாள்—பிறகு வெந்நீர் துடைக்கச் சவுக்கம் முதலியவைகளைத் தயாரித்து வைத்தாள். பிறகு ஹோமத்திற்கு வேண்டிய நெய்யைக் காய்ச்சி, பாத்திரங்களைச் சுத்தம் செய்தாள். அவைகளை மற்ற வேலையாட்களோ, பந்துக்களோ செய்ய அவள் விடுவதில்லை. இதற்குள் வேலையாட்கள் எழுந்து வந்தனர். அவர்களை இக்காரியங்களைப் பார்வையிடச் சொல்லி விட்டு யசோதை கிருஷ்ணனை

எழுப்பச் சென்றாள்—நித்தியம் அவள் பாடியும், கன்றுக்குட்டிக் கதைகளைச் சொல்லியும், அவன் விளையாட்டுத் தோழர்களைக் கொண்டும் கிருஷ்ணனை எழுப்புவது வழக்கம். ஆனால் இன்று இவள் போகும் பொழுதே அவன் எழுந்து படுக்கையில் அவனுடைய சங்கைத் தேடிக் கொண்டிருந்தான். அன்று காலையில் சீக்கிரமாகவே தான் தோழர்களை எழுப்புவதற்கு அவன் அந்தச் சங்கை ஊதவேண்டும். ஏனெனில் முதல் நாளே அவன் தன் தோழர்களுக்குச் சங்கு ஊதியவுடன் அவர்கள் எழுந்து வந்து கிருஷ்ணனுடன் அவர்களெல்லோருமாகச் சேர்ந்து கன்றுக் குட்டியை அலங்காரம் செய்து பூப் பறிக்கப் போகவேண்டுமென்று சொல்லி ஏற்பாடு செய்திருந்தான்.

மழை காலத்திலும், பனிகாலத்திலும் கிருஷ்ணன் அச்சங்கைச் சில முக்கியமான தினங்கள் தவிர மற்ற நாள்களில் ஊதுவதில்லை. க்ரீஷ்ம வஸந்தகாலத்தில் அநேகமாய் பிரதிதினமும் தன் தோழர்களைக் காட்டில் காலைபோஜனம் செய்ய அறிவிப்பதின் பொருட்டு ஊதுவது வழக்கம். அப்பொழுது அவன் தாய் அவனைப் பலவிதமாய் நல்லவார்த்தைசொல்லி நயந்து வேண்டிக் கொண்டாலும் அவளைப் பரிகாசம் செய்து வனத்திற்கு ஓடிவிடுவான். குளிர் காலங்களில் தான் அவன் அவள் வேண்டுதலுக் குட்பட்டு சுடச்சுடக் காலை ஆகாரம் தோழர்களுடன் வீட்டில் அருந்துவான். ஒருபோதும் கிருஷ்ணன் தனித்துப் புசிப்பது இல்லை. ஆதலால் இன்று விசேஷதினத்தில் முன்னமே சங்கேதம் செய்யப்பட்டதை அனுசரித்துச் சங்கானது ஊதப்பட்டது. கன்றுக் குட்டிகளை அலங்கரிப்பதுடன் மற்ற வேலைகளும் அவர்கள் செய்வதாய் ஏற்பாடு. பிராமணர்கள் வருமுன் புஷ்பமாலைகளால் தலைவாயிலையும் வீட்டின் மற்ற பாகங்களையும் அவர்கள் சிங்காரிக்கவேண்டும்.



இன்று நல்ல நாளில் கிருஷ்ணன் தானாகவே (பிறரெழுப்பாமல்) விழித்து கொண்டதில் யசோதைக்கு மிகவும் சந்தோஷம். "என் கண்மணியே! அதற்குள் எழுந்திருந்து விட்டாயா? எண்ணெய் தேய்த்துக் குளிக்கவேண்டும். வா! கண்ணே'' என்று கூறிக்கொண்டு அவனைத் தன் கைகளில் வாரி அணைந்துக்கொள்ள ஆவலுடன் அவன் அருகிற் சென்றாள். ஆனால் கிருஷ்ணனுக்கு இதற்குள் சங்கைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. முதல் நாள் அவன் தூங்குமுன் புல்லாங்குழல், சவுக்குடன் சங்கையும் தலையணைக் கடியில் அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். ஆகையால் யசோதை கொஞ்சிக்கொண்டு அவன் அருகில் வரவும், கிருஷ்ணன் கோபத்துடன் "எண்ணெயுமாச்சு, வெண்ணெயுமாச்சு! எனக்கொண்ணும் வேண்டாம். என் சங்கெங்கே?'' என்று இறைந்தான். யசோதை பிறகு அதை அவன் கால் மாட்டிலிருந்து தேடிக் கண்டுபிடித்து கொடுத்தாள். கிருஷ்ணன் தூங்கும் அமளியில் தலைமாடு கால்மாடாகி விட்டது.

அவள் கையிலிருந்து அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து ஓடினான். ஒவ்வொரு நாளும் நாலு நாழி கெஞ்சிக் கொஞ்சி எழுப்பினபின் அவன் படுக்கையிலெழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக்கொண்டு அரை விழிப்பு விழித்துச் சுற்றுமுற்றும் மெதுவாய்க் கடைக்கண் பார்வையிட்டுப் பிறகு மெதுவாக எழுவான். ஆனால் இன்று ஒரே குதியாய் எழுந்து, சங்கை ஊதுவதின் பொருட்டு வாயிலை நோக்கி ஆவலுடன் ஓடினான். மறுபடியும் ஒரு தடங்கல்—கதவு பூட்டியிருக்கிறது, தாழ்ப்பாள் திறக்க முடியவில்லை. அவனுக்கு வந்த எரிச்சலுக்கு அளவேயில்லை. துள்ளினான், கத்தினான், காலால் பூமியை உதைத்தான், மிகக்கோபத்துடன் தாயை எரிந்து விழுந்தான். அவள் ஏன் முன்னதாகவே

அவனுக்குக் கதவைத் திறந்து வைக்கவில்லை? யசோதையோ பிரமித்து ஒன்றும் புரியாமல் என்ன செய்வதென்று தெரியாமல் அருமையுடன் அவன் வேண்டுவது என்னவென்று கேட்டாள். கிருஷ்ணனுக்குத் தான் விரும்பியபடி இராமையால் துக்கமும் கோபமும் நெஞ்சையடைத்தது. பேச முடியவில்லை. அப்படியே கதவைச் சுட்டிக் காட்டினன்—யசோதையறிந்து கதவைத் திறந்தாள்.

வெகு அவசரமாய் வெளி வந்து கிருஷ்ணன் சங்கை ஊத மூச்சை இழுத்தான். ஆனல் அவனது பாபரப்பினல், இழுத்தமூச்சு உள்ளே நில்லாமல் வெளியே போய்விட்டது. அவன் முன்னிலும் பொறுமை இழந்தான். யசோதை ஒருவார்த்தை கூறவில்லை. பேசினல் அவனது உத்வேகம் அதிகமாகி விடுமென்று அவளுக்கு பயம். "இஷ்டப்படி செய்து விட்டுப் பிறகு மெள்ளவரட்டும். எப்பொழுதோ எப்படியாவது வந்தால் போதும்" என்பது அவள் எண்ணம். இதற்குள் அவனை அழைத்துச் செல்ல வேலையாட்கள் வந்து காத்துக்கொண்டிருந்தனர். கடைசியாகக் கிருஷ்ணன் ஒருவாறு தன் சங்கேத முறைப்படி மூன்றுமுறை ஊதினன். சங்கேத முறையாவது 'பூம்' என்று சங்கை அதன் ஸ்வரம் சிறிதுநேரம் த்வனிக்கும்படி ஊதினல் அதன் அர்த்தம் அதிக அவசாமில்லை, மெள்ள வரலாமென்று. அப்புறம் ஊதுவது இருமுறை 'பும் பூம்' என்று சுருக்கியும், பிறகு நீண்டும். அதனல் அவர்கள் தாமதிக்காது வரவேண்டுமென்று அர்த்தம். இப்பொழுது நாழிகையாய்விடவே மேலே குறிப்பிட்டபடி கடைசி முறையாக ஊதினன்.

யசோதை இனிமேல் தன் காரியத்தைத் தொடங்கலாமென்று நினைத்து அவனருகிற் சென்று அன்பாய் அழைத்தாள். "என் கண்ணே! இனிமேல் வரயா? அவர்கள் வருமுன் நீ குளித்துவிட்டு வந்துவிடலாம்" என்ருள். "உம், முடியாது. எண்ணெய் தேய்ச்சுக் கொள்ரத்துக்கு முன்னமேயே பதில் சொல்லியாச்சுது. நான் பூப்பறிக்கப் போகணும்" என்ருன் கிருஷ்ணன். "அவர்கள் வருவதற்கு முன் நீ குளித்துவிட்டால் அப்புறம் சாவகாசமெல்லாம் உங்களதுதான். உங்களை நான் தொந்திரவு செய்யமாட்டேன். தவிரவும் கன்றுக்குட்டிகளைப் பார்க்கவேண்டாமா?" என்று யசோதை உரைத்தாள். கன்றுக்குட்டியைப் பற்றிச் சொல்லவும் கிருஷ்ணன் கண்கள் விரிந்தன, முகம் ஜ்வலிக்க ஆரம்பித்தது. யசோதை அவனைக் கைகளில் எடுத்துக்கொண்டு வேடிக்கையாய் ஆட்டிக்கொண்டே அவனைக் குளிக்குமிடத்திற்கு அழைத்துச் சென்ருள்.

இதற்குள் சிறுவர் விழித்துக்கொண்டு, மற்றவரையும் ஒருவர்க்கொருவர் இறைந்து கூவியும், கதவைத் தட்டியும் எழுப்பிக்கொண்டு எல்லோருமாய்க் கிருஷ்ணனது வீட்டிற்கு வந்தனர். அவர்கள் இஷ்டப்படி தாராளமாய் உள்ளே வரலாம். யாராவது தடுத்தாலோ கிருஷ்ணனுக்கு மிகக் கோபம் வந்துவிடும். தடுத்தது யாராயிருந்தாலும் சவுக்கினல் வாங்கிவிடுவான். ஆகவே அச்சிறுவர் எல்லோரும் தடதடவென்று கும்பலாய், கிருஷ்ணன் ஸ்னனம் செய்யுமிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டதும் கிருஷ்ணன் அவர்களுடன் போகவேண்டுமென்று துள்ளினன். யசோதை மெள்ளக் கொஞ்சம் வயது அதிகமான சிறுவர்களுக்குக் கண்ணைக் காட்டிக் கிருஷ்ணன் முதலில் குளித்தாகட்டுமென்று ஜாடை செய்தாள். அச்சிறுவர்கள் கிருஷ்ணனிடம் தம்பியிடம் போல் அன்புடையவர்கள். அவன் சௌக்கியத்திற்கு வேண்டுவதை இனமாகச் செய்யத் தெரிந்தவர்கள். மற்ற சிறியவர்களுக்கு ஜாடை செய்தாலோ அவர்கள் கிருஷ்ணனைப் போன்றவர்கள். "ஏன் எனக்கு இரகசியமாய் ஜாடை

செய்கிறாய்? நான் கிருஷ்ணனிடம் சொல்லிவிடுவேன்'' என்று எங்கப்பா குதிருக்குள் இல்லையென்று சொல்லிவிடுவார்கள். ஆனால் யசோதை ஜாடைகாட்டிய பெரிய பையன்கள் குறிப்பையறிந்து "ஏ கிருஷ்ணா! எங்களுக்குப் பசிக்கிறது. நீ குளிக்கறத்துக்குள்ளே நாங்க பல் தேச்சுக் கொஞ்சம் ஏதாவது சாப்பிடுகிறோமே. நீ அதற்குள் குளிச்சுடலாம். அப்புறம் நாம்ப ரொம்ப நாழி தடையில்லாதே உற்சாகமா நம்ப காரியங்களைச் செய்யலாம்'' என்று சொன்னார்கள். கிருஷ்ணனும் அவர்களெல்லோரும் தன் கண் முன்னேயே பல் தேய்த்து ஆகாரம் செய்யவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் குளிக்கச் சம்மதித்தான்.

## ஸ்னானம்.

அப்பையன்கள் தலையை இப்படியும் அப்படியும் ஆட்டிக்கொண்டு "ஈ—ஈ'' என்று பல் துலக்குவதைக் கிருஷ்ணன் பார்த்து சந்தோஷப்பட்டான். "நீயும் வா, அவர்களுக்குச் சரியாய் தாளம் போடுவதுபோல் நான் எண்ணெய் தேய்க்கும் பொழுது நீயும் தலையை ஆட்டு. நீ இப்படி வேடிக்கையாய் விளையாடும் போதே நான் உன்னை ஒரு நிமிஷத்தில் குளிப்பாட்டி விடுவேன்'' என்று யசோதை கொஞ்சிக் கேட்டாள். வெறும் நாளில் இலகுவாக சம்மதிக்காத கிருஷ்ணன் இன்று கன்றுக் குட்டிகளைக் காணவேண்டும் என்ற ஆசையாலும் எங்கு தன் இஷ்டர்கள் நாழிகையாகிறது என்று எண்ணுவார்களோ என்ற பயத்தாலும் ஒத்துக்கொண்டு எண்ணெய் தேய்த்துக்கொள்ள உட்கார்ந்தான். யசோதை ஒரு கையால் அவனைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் எண்ணெய் தேய்த்தாள். அவள் அப்படித் தேய்க்கையில் "இன்னிக்கு இவ்வளவு சாதுவாக இருப்பது இந்தப் பையன்களுக்காகவாக்கம், சுருக்கக் குளுப்பாட்டு'' என்று அறிவிப்பது போல் கண்ணன் அவளை அடிக்கடி பார்க்கிறான். அவனும் எண்ணெயில் கையையிட்டு, அதிக நாழிகை ஆகாதிருப்பதிற்காக உடம்பில் தடவிக் கொள்கிறான். அப்படி அவன் தடவிக் கொள்ளும் பொழுது எண்ணெய் யசோதை புடவையில் தெரிக்கிறது. அப்புறம் அந்தப் பொட்டுகளை அவன் எண்ணுகிறான். இதற்குத் தடை செய்தால் அப்புறம் அவன் கட்டுக்கடங்கான். அதற்காக அவன் செய்யும் எல்லாவிஷமத்திற்கும் அவள் அன்புடனேயே சம்மதிப்பாள்.

கிருஷ்ணன் ஸ்னானம் செய்கையில் கோமுகமுள்ள வட்டமான கல்லில் உட்காருவான். அந்த கோமுகத்திற்குக் கீழே அவனது பொம்மைக் கன்றுக் குட்டியை வைத்திருப்பான். இவன் ஸ்னானம் செய்கையில் ஜலம் கோமுகத்தின் வழியாக அக்கன்றுக் குட்டியின் மேல் விழும். அப்பொழுது அவன் "ஸ்னானம் எப்படியிருக்கு?—இப்போ பார் வெள்ளை ஜல ஸ்னானம்—இப்போ நல்ல ஜலம்'' என்று பலவிதமாக அதனுடன் பேசிக் கொண்டிருப்பான். யசோதை எண்ணெய் தேய்க்கும் பொழுது கிருஷ்ணன் போன முறைக் கப்புறம் எவ்வளவு வளர்ந்திருக்கிறானென்பதைப் பார்ப்பதற்காக, மெள்ள அவன் அவயவங்களைக் கையினால் அளந்து பார்த்தாள். ஒரு நாளுமில்லாதபடி அன்று அவன் ரொம்ப சாந்தமாக விருப்பது பிடித்து விடுதல் இதமாயிருப்பதினாலே என்று யோசித்தாள். திடீரென்று கிருஷ்ணனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவன் நின்று கொண்டிருந்தான்—யசோதை அவன் பாதங்களுக்கு எண்ணெய் தடவுவதற்காக உட்கார்ந்திருந்தாள். இவன் நின்றபோதிலும் யசோதை உட்கார்ந்திருக்கையிலிருக்கிற அளவு உயரமாகவே இருக்கிறான். இவன் பாதத்தை அவள் உட்கார்ந்து தடவுவதா? இவனுக்கு அவமானமாகத் தோன்றியது. "ஒரு முக்காலி

கொண்டுவா. நான் அதில் ஏறிக்கிறேன். நீ ஒக்காந்து என்னை எட்டமுடியுமா. நான் அப்பொழுது ரொம்ப ஒசரமாயிடுவேன். நீயும் நின்றுதான் என்னை எட்டலாம்.'' என்று ஒரு முக்காலி கொண்டுவர உத்திர விட்டான். முக்காலியும் வந்தது, அவன் ஏறிக் கொண்டான்.

யசோதை நின்று கொண்டு எண்ணெய் தேய்த்தாள்.

அப்புறம் அவன் இரண்டு கைகளை இடுப்பில் வைத்து ஏதோ பெரிய காரியம் செய்யப்போவது போலச் சுற்றுமுற்றும் பார்த்து "இங்கேயிருந்து கீழே குதிக்கட்டுமா?'' என்றான். அந்தப் பிள்ளைகள்'' குதி, பார்க்கலாம்'' என்றனர். கல் தரையானதாலும் அவன் பாதங்களுக்கு எண்ணெய் தடவியிருந்ததாலும் கீழே குதித்தால் வழுக்கிக் கீழே விழுந்து காயம் பட்டுக்கொள்ளாமலிருக்கவேண்டுமே யென்று யசோதை பயமடைந்தாள். அதற்காக அவன் குதிக்கப் போகும் இடத்தில் தன் மேல் தலைப்பை விரித்தாள். கிருஷ்ணனுக்கு இது பொறுக்குமா? தனக்கு அவமானம் போல் அதை எடுத்து விடும்படி கோபித்தான். யசோதையும் வேறு வழியில்லாமல் தலைப்பை யெடுத்தாள். அவன் அப்புறம் சாவதானமாய்க் குதித்து ஜய வீக்ஷணத்துடன் சுற்று முற்றும் பார்த்தான். குளிக்குமிடம் வந்தான், ஆனால் அப்பொழுது சில பையன்கள் வெளியே போவதைக் கண்டான். அச்சிறுவர் பல்விளக்கிவிட்டுக் குச்சிகளை எறிவதற்காக வெளியே சென்றார்கள். கிருஷ்ணன் அவர்கள் பூப்பறிக்கப்போகிறார்களென்று நினைத்து "ஓகோ—அவர்கள் எனக்கு முன்னே போய்ப் பூவெல்லாம் பறித்துவிடுவார்கள். நானின்னமே குளிக்கமாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் பின்னால் ஓடினான். "இல்லை—அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள்; அதுக்குள்ளே நான் குளிப்பாட்டி விடுகிறேன்'' என்று யசோதை பின்னாலேயே சென்றாள். "ஹூம்! ஜலம் புகையறது, எனக்கு ரொம்ப சூடாக இருக்கும்'' என்று கூறிக் கொண்டே ஓடினான்.

வெந்நீர் அவனுக்கு அதிகச் சூடுதானிருக்கலாம்.

யசோதையும் பின்னாலேயே ஓடிப் போய் சமாதானமாய்ச் சொன்னாள். "அவா ஒருவரும் போகமாட்டா—நான் சொல்கிறதைக்கேள். நீ குளி; அப்போ ஒவ்வொத்தராக அவர் பேரைச் சொல்லிக்கூப்பிடு. அவா ஒவ்வொருவரும் வந்து ஒரொரு சொம்பு ஜலம் விட்டுட்டுப் போகட்டும். என்ன! சம்மதந்தானா?'' இந்த ஒப்பந்தத்திற்கு ஒத்துக்கொண்டான். யசோதையும் சந்தனப் பொடிக் குழம்பைத் தடவித் தேய்த்தாள்.

வழக்கமாய் எப்படி யென்றால் முதலில் வாசனைத் தைலம் தடவிப் பிறகு கொஞ்சம் வெந்நீரை விட்டுவிட்டுச் சீயக்காய்க் குழம்பை எண்ணெய் போக்குவதற்காகத் தேய்ப்பது வழக்கம். அப்படி ஒரு சமயம் தேய்க்கும்போது சீயக்காய் தேய்த்தபின் விடும் ஜலமானது வெளுப்பாக வழிவதைக்கண்டு "ரொம்ப அழுக்கு—ரொம்ப அழுக்குவாது—ம்—ம் இன்னமே எண்ணெய் தேச்சுக் குளிக்கமாட்டேன்'' என்று கத்தினான். அன்று முதல் யசோதை சந்தனப் பொடியை முதல் தேய்த்து எண்ணெயை எடுத்த பிறகு ஜலம் விட்டால் அதிக வெளுப்பாக வராததலால் சந்தனப்பொடியையே தேய்த்து வந்தாள்.

அப்படியே அன்றும் முன் சொன்னபடி பையன்கள் ஜலம்வார்க்கிற ஏற்பாடு ஆகவிட்டுச் சந்தனப் பொடியால் தைலத்தை எடுத்தபின் கிருஷ்ணன் ஸ்னானம் செய்யும் கல்லின் மேல் உட்கார்ந்து கூப்பிட்டான். "ஒன்று, ராம் கோபால்''. ராம் கோபால் வந்து ஒரு சொம்பு

ஜலத்தை விட்டுப்போனான். "இரண்டு, சர்ம கோபால்". அவன் வந்து ஒரு சொம்பு விட்டான். "மூணு, சாந்தகோபால்". இப்படியே கழுத்திற்குக் கீழே குளித்தாய் விட்டது.

பிறகு தலைக்கு ஸ்னானம் செய்வித்தாள். கிருஷ்ணனே கண்களை மூடிக்கொள்ளமாட்டான். அதற்காக இரண்டு பையன்களை ஒரு கெட்டியான துணியை—அந்த ஜலம் கண்களில் விழாமலிருப்பதற்காகவும், முகத்தில் வழிந்து மூச்சு முட்டாமலிருப்பதற்காகவும்—நெற்றியில் அழுத்திப் பிடித்துக்கொள்ளச் சொன்னாள். யசோதை அப்புறம் ஜலத்தை விட அது அத்துணி வழியாக இருபுறமும் வழிய கிருஷ்ணன் தன் உற்சாகம் ததும்பும் கண்கள் துணிக்கடியில் ஜ்வலிக்க, இருபுறமும் வழியும் ஜலத்தை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருக்கும்போதே அடிக்கடி சப்தகி வந்துவிட்டாளாவென்று விசாரித்துக்கொண்டிருந்தான். சப்தகி என்பவள் ஒரு பரிசாரகை. அவளுக்குக் கூந்தல் செம்பட்டையாக விருந்ததால் கிருஷ்ணனுக்கு அவளைக் கண்டால் பிடிக்காது. அவளிடம் எரிந்து கோபித்துக்கொள்வான். ஆனால் அவனுக்கு அவசியமானபோது அவள் வெண்ணை ரொம்ப நன்றாக விருக்குமாதலால் தன் இஷ்டர்களைக்கொண்டு அவளை விநயாசம் செய்வது வழக்கம். இன்றைக்கு முதலிலேயே அந்த சப்தகி வந்துவிட்டால் அதற்கப்புறம் குளிக்க மாட்டேனென்று சொல்லியிருந்தான். அப்பொழுது வளைகளின் சப்தமும், பாதசரங்களின் ஒலியும் கேட்டது. "ஏ கிருஷ்ணா! பால் வாங்கிண்டுபோகக் குட்டிகளும் பெண்டுகளும் வந்தாட்டா. இன்னிக்கு ரொம்ப நாழியாயிடுத்து. அவா உன்னைப் பரிகாசம் பண்ணப்போறா" என்று மற்றப் பையன்கள் கூவினார்கள். கண்ணனோ பரிகாசத்தைப் பொறுக்கவேமாட்டான். அதுவும் ஸ்திரீகளிடமிருக்கும், சிறுமிகளிடமிருந்துமா? ஆகவே உடனே அவனெழுந்து தடபுடலாய்க் கைக் கெட்டின உலர்ந்த துணியை யெடுத்துத் தலையைத் துடைத்துக்கொண்டு பால் கறக்கப் புறப்பட்டான். இதற்குள் அச்சிறுமிகள் இவனது அவசரத்தையும் அலங்கோலத்தையும் கண்டு தெரிந்தும் தெரியாமலும் கொழுப்புடன் (ரகசியமாக) இரையாமல் உடம்பு குலுங்க நகைத்தனர். இதனால் கிருஷ்ணனது கோபம் அதிகரித்தது. யசோதை அவனை நோக்கி "என் செல்வமே! நீ சுருக்க குளிச்சுடலாம் வா. இல்லாட்டா அவாள் இன்னம் அதிகமாகத்தான் பரிகாசம் செய்வாள்" என்று சொல்லக் கிருஷ்ணனுக்கும் அது சரியென்று தோன்றியது. ஆயினும் கோபமும் தன் எண்ணம் நிறைவேறாததினாலுண்டான அவமானமும் குறையவில்லை. "நீ எதுக்கு இந்த அசட்டுக் குட்டிகளும் பொம்மனாட்டிகளும் சொல்ரத்துக்குக் கவலைப்படணும்?" என்று சில பையன்கள் சமாதானம் கூறினார்கள். அவன் தலையை அசைத்தான். அது "உங்களுக்கென்ன? நீங்க சொல்லுவானேன்" என்று சொல்வதுபோலிருந்தது. பிறகு அவன் யசோதையை நோக்கி முகத்தை நிமிர்த்திக் கைகளை நீட்டினான்.

இனிமேல் தன்னைக் குளிப்பாட்டலாமென்ற உத்திரவு அது. யசோதையின் கால்களை அவன் கட்டிக்கொண்டு முகத்தை முழங்கால்களுக்கிடையில் அமிர்த்தி நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஜலம்விட்டு அலசினால் ஜலம் முகத்தில் வழியாமல் ஓடிவிடும். அப்படிப் பின்னால் விழுந்த ஜலத்தைக் கண்ணன் பார்த்தால் அது வெளுப்பா யிருப்பதைக் கண்டு "அழுக்கு அழுக்கு" என்று கத்துவானென்றே யசோதை இந்த யுக்தி செய்திருந்தாள். அவள் அலசும்போது அவன் கண்கள் சுற்றிலும் சுழன்று அருகிலிருந்த

தோழர்களிடம் சென்றன. அவன் அவர்களை நோக்கி "நீங்க எல்லாரும் தலைகிழா நிற்க றீர்கள்'' என்றான்.

இதற்குள், மற்றஸ்திரீகளும் அடுத்த உள்ளில் வந்து கூடினர். ஒருவள் ஸ்நான அறைக்குள் வந்தாள். "என்னடிம்மா! இன்னம் உன் பிள்ளையுடைய ஸ்னானநாடகம் முடியவில்லையா? இருக்கிற இருப்பைப் பார்த்தால் இன்னம் ரொம்ப நாழிகையாகும்போலிருக்கே. இருக்கட்டும். அவன் சொல்ரத்தைக்கேழ்க்க ஒருவழியிருக்கு, சொல்ரேன். அவன் காட்டுக்குப் பசுக்களை ஓட்டிக்கிண்டு போரதை நீ இதுக்கு சரியாத் தாமதப்படுத்தினா—'' இதற்குள் அந்தக் கிழவியைப் பின்னாலிருந்த சிறுமி ஒருத்தி கிள்ளி, அவளுக்கு சமிக்கை செய்தாள். ஏனென்றால், இப்படியெல்லாம் அவனை ரொம்ப பயமுறுத்தினால் கிருஷ்ணன் நேரே விபரீதமாக முரண்டடித்து வீம்பு செய்வான். அப்பொழுது அவன் குளித்து வெளிக் கிளம்ப இன்னும் தாமதமாகிவிடுமென்ற பயம். அதற்காக அச்சிறுமி கிழவி சொல்ல வந்ததைத் தடுத்து "இப்படி நாழியாக்கினா எப்போ பசுக்களுக்கு அலங்காரம் பண்ரது. அப்புறம் எப்போ எல்லாரும் பார்த்து ஆச்சரியப்படவும் கொண்டாடவும் அதுகளைக் கிராம ப்ரதக்ஷிணம் கொண்டு வந்து வீடுவீடாய்ப்போய் வேடிக்கை பண்ரது? அது ஒன்றுக்கும் சாவகாசமில்லாம பண்ணினா அப்புரம் கிருஷ்ணனுக்கு, கோகுலத்திலிருக்கிற எல்லாருக்கும் இந்த உற்சவ நாள் வீணாயிடும்'' என்றாள். இது அச்செல்வனுக்கும் மனதிற்பட்டு தன் தோழனொருவனை 'அப்படித்தானா' என்பதுபோல் பார்த்தான். அவன் பார்வையிலிருந்து அச்சிறுமி சொல்வது வாஸ்தவமென்று அவனும் நினைப்பதுபோல் தோன்றிற்று. உடனே கண்ணன் தன் தாயாரை விரைவுபடுத்தி ஓர் நொடிக்குள் குளித்துவிட்டு அந்த ஜலம் மேலே வழிவதைக்கூடக் கருதாமல் சவுக்கத்தால் துடைத்துக்கொண்டான்.

முன்னமேயே கிருஷ்ணன் அவசரப்படுவானென்பதை ஊகித்த யசோதை, வேலைக்காரிடம் கிருஷ்ணனுக்கும் அவன் தோழர்களுக்கும் ஆகாரத்தைத் தயார்செய்து இலையில் பரிமாறி வைக்கும்படி திட்டம் செய்திருந்தாள். கிருஷ்ணனும் தோழர்களும் சாப்பிட உட்கார்ந்தனர். சில பையன்கள் கண்ணனிடம் "ஏ கிருஷ்ணா! நாங்கள்ளாம் சாப்பாட்டை இரண்டு மூணு வாயாப் போட்டுண்டுடுவோம். உன்னால் அவ்வளவு சுருக்க சாப்பிட முடியாதே'' என, கிருஷ்ணன் 'ம்—அப்படியா! எங்கே? சாப்பாடு வரட்டும். யார்முந்தின்னு பாப்போம்'' என்றான். இப்படியாக அவர்கள் சாப்பிட்டார்கள்.

கிருஷ்ணன் குதித்துக் குதித்துப் பாபரப்புடனும் ஆனந்தத்துடனும் மாடுகளுக்கு அலங்காரம் செய்யும்போது அவன் கால்களில் சதங்கைகள் கட்டிச் சப்தித்துக் கொண்டிருந்தால் எவ்வளவு அழகாகவிருக்குமென்று யசோதைக்குத் தோன்றியது. அவனுக்குமட்டும் கட்டினால் அவன் கேட்கமாட்டான்; தன் தோழர்களுக்கும் கட்டவேண்டுமென்பான். ஆகவே யசோதையும், மற்ற சில சேடிகளும் சப்திக்கும் பாதசரங்களை அவர்கள் கால்களில் போஜனம் அருந்துகையிலேயே கட்டினர். சாப்பிட்டானதும், அவர்கள் குதூகலமாய்க் குதித்துக்கொண்டு வெளியே ஓடினர். பால் வாங்க வந்த ஸ்திரீகளும், சிறுமிகளும் ஆவலுடன் அவர்கள் பின்னாலேயே சென்றனர்.

கிருஷ்ணனும், தோழர்களும் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்றார்கள். பசுக்களும், கன்றுகளும் கண்ணன் வரவிற்காகக் காத்துக்கொண்டிருந்தன. அவைகள் தனித்தனியாகக் கட்டப்படவில்லை. கிருஷ்ணன் வந்து கன்றுகளைத் தாயிடம் அழைத்து வந்து ஊட்ட விட்டாலல்லது, பசுக்கள் தம் கன்றுகளுக்குப்

பால் கொடுக்கா; கன்றுகளும் தாயை ஊட்டா. கிருஷ்ணன் இடுப்பின் மீது இருகைகளையும் வைத்துக்கொண்டு அவைகள் மத்தியில் போய் நின்றான். அவன் தலை வாரப்படாமலே வர்ணப்பட்டு நாரால் மேலே தூக்கிக் கொண்டையாகக் கட்டப்பட்டிருந்தது. கிருஷ்ணன் அங்கு நின்று ஒவ்வொரு மாடாக "லக்ஷ்மி, சானகி" என்று பெயரிட்டு அழைத்தான், அவைகள் அருகில்வரக் கண்ணன் அவைகளைத் தடவிக்கொடுத்தான். பிறகு அவை கன்றுகளை ஊட்டவிட்டான். அப்படிக் கன்றுகள் ஊட்டுகையிலும் பசுக்கள் கன்றுகளை மறந்து அவைகளை நக்கிக் கொடுப்பதற்கு பதிலாக அருகிலிருந்த கிருஷ்ணனை அன்புடன் நக்கின.

அப்பொழுது, ஸ்திரீகளும், சிறுபெண்களும் அங்கு வரக்கண்டு கிருஷ்ணன் "இந்த வால்கள் வந்தூடுத்துகளே, இதுகளுக்கு இன்னிக்குப் பால் கிடையாது, போங்கோ எல்லாரும் வெளியிலே" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னான். இது சும்மா அவன் மனது சரியாயில்லாததால் சொன்னதே தவிர, வாஸ்தவத்தில் அவர்கள் போகவேண்டுமென்ற எண்ணத்துடன் சொன்னது அன்று. ஒரு தவலையில் பாலைக்கறந்து, அங்கு வரிசையாக அந்த ஸ்திரீகள் பாலுக்காகக் கொண்டு வந்து வைத்திருந்த பாத்திரங்களில் விடுவதற்காக வந்தான். முதலில் வைத்திருக்கும் பாத்திரத்தைச் சுட்டி "இது யாருடையது?" என்று கேட்டான். பதிலில்லை, இரண்டாந்தரமும் "யாருடையது?" என்று கேட்டான். அதற்கும் பதிலில்லை. அதற்குள் ஒருபெண் சொம்புடன் மெதுவாக "வால்களுடைய பெயரை விசாரிப்பானேன்? வால்களுக்கு என்ன பெயரிருந்தாலென்ன?" என்றாள். கண்ணன் உடனே பால் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டுத் தோழர்களைக் கூவி "நாம்ப இன்னமே பூப்பறிக்கப் போவோம்" என்று சொல்லிக் கொண்டே ஓடி விட்டான். அவர்களனைவரும் ஒரு நொடியில் ஓடி விட்டனர். அந்த ஸ்திரீகள் கிருஷ்ணன் தாங்களுரைத்ததற்கு கோபமாய் பதில் கூறுவான், அப்பொழுது அவனுடன் தாங்கள் வாதாடும் சந்தோஷம் கிட்டுமென்று கருதியிருந்தனர். இப்பொழுது அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

(தொடரும்).

## பரிதபிக்கத்தக்க பெருந்தோற்றம்.

(ஜனாப் A. M. அல்லாபிச்சை.)

ஒருநாள் பகல் ஏறக்குறைய மணி மூன்றிருக்கும் வேளையில் சூரியன் தனது வெப்பத்தைச் சிறிது தணித்தனன். அச்சமயத்தில் எனக்குத் தேவையான சில புத்தகங்களை வாங்கும்வண்ணம் பட்டணத்திற்குச் செல்லலாயினேன். அவ்வாறு செல்லும்போது அழகிய பற்பல கடைகளைக் கண்ணுற்றுச் சந்தோஷமடைந்தேன். மாந்தர்கள் பலரும் உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்தவராய் இங்குமங்குஞ் செல்லுதலைப் பார்த்து முற்றிலுமதிக ஆனந்தமடையலானேன். பற்பல சமயத்தவரது கோவில்களையும், பள்ளிவாசல்களையும் கண்டபோது வையகத்தைப் படைத்துக் காக்கும் கர்த்தனை வணங்கும் பக்தர் பலரிருக்க வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது. ஆயினும் ஐயோ! யான் என் சொல்வேன். ஒருவனுக்கு இன்பத்தை அளிக்கத்தக்க பொருள்கள் எண்ணிலடங்கியும், துன்பத்தையளிக்கும் பொருள்கள் எண்ணிலடங்காமலுமிருப்பதை யான்முன்னே அறிந்தேனில்லை.

சிறிதுதூர மிகுந்த சந்தோஷத்துடன் நடந்தேன். பின்னர் ஓரிடத்திலிருந்த கடையில் ஒரு பெருங் கூக்குரலுண்டாயிற்று. அதன் காரணத்தை யறியுமாறு விரைவி லங்கு சென்றேன். ஐயோ பாபம்! யான் என் சொல்வேன்! குடியால் மதிமுற்றுமிழந்த பலரு மொருவருடனொருவர் பெரும்போர் புரிதலைக் கண்ணுற்றேன். மனம் நொந்தேன். வேறு என் செய்வேன்? அவ்விடத்தை மிகுந்த வருத்தத்துடன் விட்டு நீங்கினேன். அவ்விடத்து வீண் யுத்தம் புரிந்த மதியீனர்களுக்குப் பேரறிவு அளிக்கும் வண்ணம் முழுமுதற்கடவுளை வேண்டினேன். பிறகு சிறிது தூரம் நடந்தேன். அங்கு ஒரு பெருங்கூட்ட மொரு கடையிற் கூடியிருந்தது. அதன் காரணத்தையுந் தெரிய எண்ணங்கொண்டு அக்கடைக் கேகினேன். அது சூதாட்டச் சங்கமென உணர்ந்தேன். கல்வியிற் றேர்ச்சியுற்ற பல ஆடவரும், நாணற்ற சில மகளிரும், தங்கள் ஏழைக் குடும்பத்தை வீணே அழிக்கக் கருதும் பல மதியீனரும், அழுக்காடை யணிந்திருக்கும் பல குடியரும் தங்களிடமிருந்த பணத்தை முற்றுஞ் சூதாட்டத்திலிழந்து, முகம் வாட்டமுற்றுத் தமது கரங்களைச் சிரசின்மீது வைத்துக் கொண்டு புலம்புதலைக் கண்ணுற்றேன். மனம் நொந்தேன். வேறு என் செய்வேன்? சிறிது நேரம் கடந்தது. அங்கிருந்து நடக்கலானேன். ஐயோ! பாபம்! என் சொல்வேன்! வழியில் குஷ்ட நோயால் வருந்தும் பலர் தங்கள் அழகற்ற உடம்பிலுள்ள இரணங்களிலிருந்து சீவு முதிரமுஞ் சிந்தத் தங்கள் கரங்களை யேந்தி மாந்தரை நோக்கி, "ஐயன்மீர்! எங்களைக் கண்டு மனமிரங்குக!" என்னும் பரிதபிக்கத்தக்க கூக்குரலையும், இடக்கரத்தில் தடியேந்திக் கண்ணின் பார்வையற்ற வதனத்துடன் ஜனங்களை யணுகி "தாதையீர்! எம்மீது இரக்கங்கொள்ளல் வேண்டும்" எனப் புலம்புதலையும், கை, கால் முதலிய உறுப்பற்ற பல மாந்தரணிதற்கான ஆடையற்றவராய்த் தம் கரங்களிற் றடிகளேந்தி, செல்லும் சனங்களை நோக்கி "ஐயன்மீர்! உதவியற்ற எங்கள் நிலைமையைப் பாருங்கள்! உதவி புரியுங்கள்!" என்னு மிரங்கத்தக்க பேராரவாரமு மென் மனத்தைத் தம்வயமாக்கின. மன நொந்தேன். வேறு என் செய்வேன்? இத்தகைய பரிதபிக்கத்தக்க பல தோற்றங்களையும் கண்ணுற்றுப் புத்தகங்களை வாங்காமலே என்னகத்திற்குத் திரும்பினேன். சிறிது நேரம் கடந்தது. எனது துக்கத்தை முற்றும் நீக்கும்வண்ணம் குளித்தேன். பின்னர் எனது சாதாரண ஆடைகளை யணிந்து சிறிது தூரத்திலுள்ள கற்பகச்சோலை போன்ற ஓரழகிய சோலையுட் சென்றேன்.

எனது வலக்கரத்தில் வனப்புற்ற ஒரு புத்தகமிருந்தது. எனது கண்கள் சிவந்திருந்தன; முகம் வாட்டமுற்றிருந்தது. பலமற்றவன் போல நடக்கலானேன். அப்பொழுது ஏறக்குறைய ஆறுமணி யிருக்கும். சிறிது நேரம் சென்றது. முடிவில் குளிர்ச்சியான காற்றை யனுபவிக்கும்வண்ணம் தோட்டத்திற்குள் வந்தேன்.

அங்கு சிறந்த குளிர்ச்சியான காற்று வீசலாயிற்று; மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து இருந்தன; பற்பல பறவைகள் பாடிக்கொண்டிருந்தன; அழகிய போரும்புகள் மலர்ந்து என்னுடைய அகத்தைத் தம்வயமாக்கின; இங்குமங்குஞ் சிறிய குளங்கள் தெள்ளிய நீரால் நிரம்பியிருந்தன; காற்றுலைசைவன போலத் தோன்றின; அவற்றுள் பெரிய மச்சங்கள் துள்ளிக் குதித்தன; பூமி பைம்புல்லாற் படரப்பட் டழகுற் றிருந்தது; எங்குஞ் சந்தோஷமே நிறைந்திருந்தது. இத்தகைய சிறப்பினைக் கண்டபோது, துக்கங் குடியாயிருந்த என் மனத்தில் சந்தோஷம் மறுகுடியாகலாயிற்று. ஆயின், ஐயோ! யான் என்

சொல்வேன்! வையகத்திலுள்ள இன்பம் அதி விரைவில் அழிவுறுமென்பதை யான் முன்னே அறிந்தேனில்லை.

அவ்வாறு அங்குள்ள பல பொருள்களைக் கண்ணுற்றவனாயவைகளைப் படைத்த பரமனது பேராற்றல், தயாள குணம் முதலியவற்றைப் புகழ்ந்துகொண்டே பையப் பைய நடக்கலானேன். இவ்வாறு நடக்கும்போது சற்று தூரத்திலுள்ள ஓரிடத்தில் ஒரு பெரிய அழகிய தருவினடியி லொரு மங்கை தூய்மையாகிய ஆடை யணிந்தவளாய்ப் பூமியை நோக்கிக் கொண்டே உட்கார்ந்திருந்தனள். அவளருகே ஏறக்குறைய இரண்டு வயதுள்ள அழகார்ந்த குழந்தை ஒன்று தன் கரங்களிற் சில புஷ்பங்களை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தது. அந்நங்கைக்கு வயது ஏறக்குறைய இருபதிருக்கும்.

யான் அவளை நோக்கிச் செல்லுதலைக் கண்ணுற்ற அம்மங்கை, "ஐயோ! யான் என் செய்வேன்! இப்படுபாபிகளின் முகத்தைக் காணவண்ணமென் தாய்தந்தையர்களையும், தாயத்தார்களையும் விட்டு விலகிச் சனங்கள் சஞ்சரியாத இவ்விடத்தில் தனியே வந்தேன். இங்கு மிப்பாபிக ளிருக்கின்றனர். யான் என் செய்வேன்! என்னைப் படைத்த பரம் பொருளே! இப்பாபிகளின் வஞ்சத்திலிருந்து என்னைக்காப்பாற்றுக!" என முணுமுணுத்துக் கொண்டு தனது அழகிய வதனத்தை அப்புறமறைத்தனள். யான் அதனைக் கண்டேன். அவள் மிகுந்த தாழ்ந்த குரலோசையுடன் கூறியனவற்றைத் தெளிவாகக் கேட்டுமவற்றின் பொருளைச் சிறிதேனு மறிந்திலேன். ஆகையால் அம்மங்கையின் தனிமையையும், பரிதபிக்கத்தக்க அவள் நிலைமையையுங் கண்டு மனத் தூய்மையுடனவளை யணுகி அவள் விழிகளினின்று கண்ணீர் தாரைதாரையாக ஒழுகுதலைக் கண்டு, "ஓ நங்காய்! ஏன் அழுகின்றாய்? ஏதேனு முதவி உனக்கு வேண்டுமோ? தனிமையான இவ்விடத்தில் ஒரு குழந்தையுடன் இருப்பதற்குக் காரணமென்ன? சிறிது மஞ்சாமற் கூறுக!" என்றேன்.

அப்பொழுது அவள் என்னைப் பார்த்தனள்; அவள் கண்கள் சிவந்திருந்தன; அவள் உதடு துடிக்கலாயின; அவளிருதயம்பெருமூச்செறியலாயிற்று. இத்தகைய பரிதபிக்கத் தக்க ஒரு மங்கையின் நிலைமையைக் கண்டும் இரங்காத கன்னெஞ்சன் எவனாகிலுமுளனோ? ஓராடவனுக்குரிய பராக்கிரமத்தை முற்று மகற்றியவனாய் அவளை நட்புடனோக்கி, "ஓ! பெண்மணி! நின்னை எனது தங்கையெனப் பாராட்டுகின்றேன்! நினது துன்பத்தை வெளியிடும்படி வேண்டுகின்றேன். நீ சிறிதேனு மஞ்சற்க! நினக்கு யாதொரு துன்பமுமென்னால் நேரிடாது" என்றனன்.

யான் கூறியவற்றை அம்மங்கை கவனத்துடன் கேட்டனள். மறுபடியுமொரு முறையென்னை நோக்கினள். பின்னர் "நீ யார்? உனது நாமமென்ன? நீ என் மீது இரக்கங் கொள்வதற்குக் காரணமென்ன? சிறிதேனும் அச்சமின்றித் தனிமையான இவ்விடத்தில் நீ யறியாத மங்கையினருகே நிற்றல் தகுதியுடையதோ?" என்றவள் கூறவே அப்பொழுது யான் அவளைப்பார்த்து, "ஓ தங்காய்! என் மீது சந்தேகங் கொள்ளற்க, எனது நாமமறிவதாலுனக்குண்டாகும் பயன் யாது? உதவியற்ற துன்ப மனுபவிப்பவருக் குதவி புரிதல் அறிவுடையாரது பெருங்கடமை யன்றோ? நன்மை செய்யக்கருதுபவனுக்கு எல்லோருமொன்றே; அவர்களைத் தன்னைப் போலப் பாராட்டுவன். வீணே என்மீது சந்தேகங் கொள்ளல் பாபமாகும்" எனக்கூறினேன். யான் கூறியவற்றைக் கேட்டனள். பின்னர் என் முகத்தை நோக்கிய

வளாய் "நற்குணம் வாய்ந்த ஆடவர்களும்
வையகத்திலுளரோ?" என்றனள். யான்
அதைக் கேட்டாச்சரிய முற்றவனாய், "தங்காய்
நீ என் கூறுகின்றனை" என்று கூறினன். அப்
பொழுது அவள் என்னைப் பார்த்து "எனது
இந்நிலைமைக்குக் காரணம் ஓராடவனாகும்"
என்றனள். "அஃது எப்படி? தயைசெய்து
நீ எனக்கு உரைப்பாய்!" என்றனன். பின்னர்
அம்மங்கை அருகே விளையாடிக் கொண்டிருந்த
குழந்தையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு
கண்ணீர் விழிகளிற்றதும்ப "ஓ! ஆடவருட்
சிறந்தோனே! யான் கூறுவதைக் கவனத்து
டன் கேட்பாயாக! என்மீது குற்றஞ் சுமத்தல்
வேண்டாம். யான் ஒரு பெரிய வர்த்தக
னுடைய அருமைப் புதல்வி யாவேன். ஐந்து
வருஷங்களுக்கு முன் ஒரு பாடசாலையில்
வாசித்துக் கொண்டிருந்தேன். அப்படி வாசித்
துக் கொண்டிருக்கையிலென்மீது காதற்
கொண்ட ஓராடவனை யுத்தம காதலனெனக்
கருதினேன். அவன் கூறிய மொழிகளைக் கட
வுள் மொழியெனக் கருதினேன். அவனைவிடச்
சிறந்தோனுலகத்திலெவனு மிலனென எண்ணி
னேன். வனப்பினாலவனை மதவேளெனப்
பாவித்தேன்; கல்வியிற் பிரகஸ்பதி எனக் கருதி
னேன்; பொறையிற் பூமியென நிச்சயித்தேன்;
செல்வத்திற் குபேரனென எண்ணினேன்;
உண்மை பேசுவதில் அரிச்சந்திரனென மதித்
தேன்; ஒழுக்கத்திற் இணையற்றவனெனப்
புகழ்ந்தேன்; கொடையிற் கர்ணனென மெச்
சினேன்; தைரியத்தில் அர்ச்சுனனெனப்
பாராட்டினேன். இவ்வண்ணம் அவனை மிக்க
மேன்மையாக நேசிக்கலானேன். அவன் முக
மதியைக் கண்டு ஒப்பற்ற இன்பமடைந்தேன்.
அவனைக் காணாது கடக்கு மொவ்வொரு
நாழிகையு மொவ்வொரு நூற்றாண்டாகத்
தோன்றிற்று. ஐயோ! யான் என் சொல்வேன்!
மடமையை ஆபரணமாகக் கொண்டவரின் கதி
இது தானோ?" என்று கூறினாள். இவற்றைக்
கேட்டிரங்கி, "ஓ தங்காய்! அவனெக் குலத்தி
லுதித்தவன்? அவனுடைய நாமமென்ன? தயை
கூர்ந்து கூறுதல் சாலச் சிறந்ததாகும்" என்ற
னன். அம்மங்கை, "ஓ! ஆடவர் திலகனே!
அவன் மிகச்சிறந்த குலத்திலுதித்தவன். அவன்
பெயரை நின்பாற்கூறுவது பெரும்பாபமெனக்
கருதுகின்றேன். ஏனென்றால் அவனுக்குப்
பழியுண்டாதல் நீதியோ? ஓ! ஐய! நீயே
கூறுவாயாக!" என்றனள். "தங்காய்! சிறி
துங் கூசுதலின்றி யான் கேட்பவைகளுக்கு
விடை பகர்வாய்! அவனுடைய சொந்த ஊர்
யாது? அவனை நீ கூறியவண்ணம் நேசித்ததற்
குக் காரணமென்ன? அவற்றைத் தயைசெய்து
கூறின் மிக்க நன்மையுண்டாகும்" என்றேன்.
அப்பொழுது அவள் "ஓ! ஆண்டகையே!
நின்னை என் தமயனெனக் கருதுகின்றேன்.
என்னிருதயத்தி னிரம்பியிருக்குந் துக்கமானது
சிறிது நீங்கும்வண்ணம் அதன் காரணத்தை
நின்பாற் கூறுதற் கிசைந்துள்ளேன். யான்
வாசித்துக்கொண்டிருந்த வகுப்பில் என்னுடன்
சீதையென்ற ஒரு சிறுமியும் வாசிக்கலானாள்.
அவள் தன் நாமத்திற்குரிய எழிலும், நற்குண
மும் வாய்ந்தவள். யான் ஒவ்வொரு பாடத்
திலு முதன்மையாக இருந்தமையாலும், சிறிது
நற்குணம் வாய்ந்திருந்தமையாலும் அவள்
என்னை நேசிக்கலானாள். அப்படி இருக்கும்
பொழுது ஒருநாள் அவளை நோக்கி "சீதா!
நாளை யெனக் கேதேனுமொரு புத்தகம்
கொண்டுவருவாயாக!" என்று கேட்டேன்.

மறுநாட்காலை ஓரழகிய புத்தகமெனக்குக்
கொண்டுவந்தாள். அதனை என் கரங்களிலேந்
தியபோது "சற்குணன்" என்னும் நாமத்தைப்
பார்த்தேன். பின்னர் சீதையைப் பார்த்து,
"சீதா! இது யாருடைய புத்தகம்? மிகவுஞ்
சிறந்த புத்தகம்போலும்!" என்றேன். "இப்

புத்தகம் என் அண்ணனுடைய புத்தகம். யான் அவரை நோக்கி "அண்ணு! முன்னே ஒரு நாள் யான் கீழே விழுந்தமையால் என் நெற்றியிலிருந்து உதிரம் பெருகுதலைக் கண்டு தானணிந்த ஆடையைக் கிழித்தெனது காயத்தைக் கட்டிய அருந்ததி என்னுமெனது தோழி ஒரு புத்தகம் வேண்டுகின்றனள். தாங்கள் தயைசெய்து ஒரு புத்தகம் கொடுத்தல்வேண்டும்" என்று கூறியவுடனே அவர் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை என்னிடங் கொடுத்து "சீதா! நற்குணம் வாய்ந்த அந்த அருந்ததிக் கிதனை உடனே கொடுப்பாயாக" என்று கூறினர். நீ எனக்குச் செய்த உதவியை அவர் மறந்திலர்" என்று கூறினள். அதனைக் கேட்டு மிக்க சந்தோஷமடைந்தேன். அதுதான் எனது காதலின் துவக்கமாகும். சில மாதங்கள் கடந்தபின்னர் நாங்களிருவரும் பாடசாலையிற் சந்திக்க நேர்ந்தது. அது முதல் நாங்களிருவரு மொருவரையொருவர் உண்மையாக நேசிக்கலானேம். ஒரு நாள் அவர் என்னை நோக்கி "வியக்கத்தக்க நங்காய்! சுந்தரமிகுந்த தோகாய்!" எனப் பலவாறு புகழ்ந்தனர். இவ்வாறு நாங்களிருவரு மொருவரையொருவர் காதலித்துக்கொண்டிருக்குங் காலத்தில் எங்களிருவருக்கும் பெருந்துன்பம் நேர்ந்தது. அத்துன்பம் காரணமாக இப்பொழுது நான் இத்தனியிடத்தி லிருக்கின்றேன்." என்றனள்.

"எனதருமைத் தங்கையே! நீ என்மீது கொண்டுள்ள சகோதர வொற்றுமையைப் பற்றி யானுனக்கு நன்றி செய்யக் கடமைப்பட்டவனு யிருக்கின்றேன். நீ நினது அரிய மனையகத்தைவிட் டிங்கு வருவதற்குக் காரண மென்ன? தயைகூர்ந்து கூறுக" என்றேன். அப்பொழுது அவள் எனது முகத்தை யுற்று நோக்கி "யானுன்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கோ ரளவில்லை. நீ சிறிது வயதுள்ளவனுக இருந்தபோதிலு முன்னிடத்தில் வியக்கத்தக்க சில குணங்கள் உள்ளன. அதுகாரணம் பற்றியன்றே யாவரிடத்துங் கூறுச் சில விஷயங்களை உன்னிடங் கூறினேன். ஆனலிப்பொழுது யான் எனதகத்தைவிட்ட காரணத்தை உன்னிடங் கூறுதல் தகுதியற்றதெனக் கருதுகின்றேன்" என்றனள். "எனதருமைத் தங்காய்! தயைசெய்து என்னிடமதனைக் கூறுத லுன்னுடைய கடமையாகும். அதனலெனக்கும் பிறர்க்குஞ் சிறந்த நன்மையுண்டாகும்" என்றனன்.

அவள் "ஓ நண்பனே! அதனை உன்னிடங் கூற நாணுகின்றேன். நீ யதனையறிதல் தகுதியுடைத்தன்று. ஆடவர்களுக்கும் மகளிருக்குமுரிய விஷயங்களை யானெவ்வாறு உன்னிடங் கூறத் தைரியங்கொள்வேன்" என்றனள். "தங்காய்! என்னிட மெதனையுங் கூறுதற் கஞ்சவேண்டாம்" என்றேன். அவள் "சற்குணனும் யானுமொருநாட் சிறிது மதியற்றுத் தகையற்ற செயலை விரும்பினமையின் எங்கள் தாய்தந்தையர்கள் எங்களிருவரையும் வெறுக்கலாயினர்; எனது தோழியரும் என்னைப் பாபியெனத் தூஷிக்கலாயினர்; சற்குணன் யானனுபவிக்குந் துன்பத்தை நீக்கச் சிறிதுங் கருதாமற் சனங்கள் கூறும் அபவாதத்திற் கஞ்சித் தன்னகத்தையு மென்னையும்விட்டொழிந்தனன். என்னிடமிருக்கு மிக்குழந்தையை எல்லோரும் வெறுக்கலாயினர். என்னை வியபிசாரி என்று தூஷிக்கலாயினர். இவற்றைப் பொறும லென்னகத்தை யோரிரவு விட்டொழிந்தேன். சிலநாட்கள் கடந்தபின்ன ரிவ்விடத்தை யடைந்தேன். பழமுதலியவற்றை யுண்டு எப்பொழுது சீவிக்கின்றேன்" என்றனள். அதனைக் கேட்டது மெனக்குத் தெரியாமலே என் விழிகளினின்

றுங் கண்ணீர் பெருகலாயிற்று. "ஐயோ! இளைஞர்கள் அறிவின்மையால் பெரும் பழிகளைப் படைக்கின்றனர்; சனங்களுக்கு இன்னலை விளைவிக்கின்றனர்; தம் வாழ்நாட்களை வீணே அழிக்கின்றனர்; கடவுளுடைய கட்டளைகளை முற்று மறக்கின்றனர்; செய்யத்தகாத செயல்களைச் செய்கின்றனர்; புலன்களை யடக்கி யாளுதற்கு வன்மையற்றவரா யிருக்கின்றனர்; கல்வியாற் சிறிதும் பயனடைகின்றனரில்லை; காதலென்னுஞ் சிறந்த குணத்தைச் சிற்றின்பமெனச் சிறிதுமறிவின்றிக் கருதுகின்றனர்; வையகத்தில் வியக்கத்தக்க நன்மை படைக்குங் காதலைப் பெருந்துன்பம் விளைவிக்குஞ் சிற்றின்பமாக மாற்றுகின்றனர். ஐயோ! பாபம்! இத்தகைய இளைஞர்களுக்கு இது நன்மை, இதுதீமையென்பதைப் பற்றிப் போதித்தல் வேண்டும்" என்று யான் சிறிதுநேரஞ் சிந்திக்கலானேன். பின்னர் அம்மங்கையைப் பார்த்து "என்னருமைத் தங்காய்! இத்துன்பங்கள் வாராமற் றடுத்திருக்கலாம். ஆடவர் சிறிது மதியற்றவர்கள். மகளிரவர்களுக்கு மதியைப் புகட்டல் வேண்டும். இப்பொழுது அதைப்பற்றிப் பேசுவதாற் சிறிதும் பயனில்லை. தங்காய்! அழகும் யௌவனமும் வாய்ந்த நீ ஒரு சிறிய குழந்தையுடன் வனம்போன்ற இத்தோட்டத்திற் றனியே குடியிருத்தற் சிறந்ததன்று" எனக் கூறினேன்.

அதற்கவள் "சிறந்த குணம் வாய்ந்த ஆடவர் திலகனே! இவ்விடத்தைவிடச் சிறந்த இடம் வேறெங்குளது? என்து காலத்தை இத்தகைய தனிமை யிடத்திற் கடத்தல் சிறந்ததெனக் கருதுகின்றேன்" என்றாள். "நீ கூறுவதுண்மையே! ஆயினும் ஒரு காட்டிலுட்கார்ந்துகொண் டுன் காலத்தைப் போக்குவதைவிட "மாதர் சங்கம்" என்றிருக்குஞ் சங்கத்தைச் சார்ந்து மதியற்றுத் துன்பமனுபவிக்கு மாதர்களுக்கும் பிறமகளிர்களுக்கும் பேருபகாரஞ் செய்தல் சிறந்ததன்றோ? நீயே கூறுவாய். இதுவுமன்றி ஒருகால் சற்குணன் உன்னை நாடிக்கொண்டிருப்பினு மிருக்கலாம். இவ்விடத்தி லிருப்பதா லவனைப்பற்றிச் சிறிதுந் தெரிந்துகொள்ள உன்னாலியலாது. ஆகையால் பட்டணத்திலுள்ள அச்சங்கத்தை நீ சேர்தல் நலமெனக் கருதுகின்றேன்" என்றேன். அதற்கு அச்சிறந்த அருந்ததி இணங்கினள். உடனே அவளை மாதர் சங்கத்துத் தலைவியினிடங் கொண்டு சென்றேன். அவள் அருந்ததியைக் கண்டு அவளைப்பற்றிச் சில விஷயங்களைத் தெரிந்தபின்னர்த் தன் சங்கத்தில் சேர்த்துக்கொண்டனள். பின்னர் யான் அவளை நோக்கி "என்னருமைத் தங்காய்! நீ கடவுளை நாடோறும் வணங்கி வாழ்த்திவருவாயாக! இக்குழந்தையை யன்புடன் வளர்த்து வருவாயாக! நாடோறுஞ் சிறிது நேரமேனும் நல்ல புத்தகங்களை வாசிப்பாயாக! சனங்களுக்கு நன்மை செய்வதிற் கண்ணுங் கருத்துமாயிருப்பாயாக! ஒருகால் நின் காதலனின்னைத் தேடி வருவானேயாயின் அவன்மீது நீ கோபங்கொள்ளாம லிருப்பாயாக!" எனப் பலவாறு கூறி விடைபெற்றென தகத்தை யடைந்தேன். அப்பொழுது ஏறக்குறைய மணி பத்து முப்பதிருக்கும்.

# நற்றாய் இரங்கல்.

ஓர் புதிய தேசீயத்துறைப் பாட்டு.

(கோமதியப்பன் இயற்றியது.)

குறிப்பு:—சிவனே பேயாண்டி யாவன். சுடுகாட்டில் சாம்பலைப் பூசி ஆடல், எலும்புகளையும் அரவங்களையும் ஆபரணங்களாகத் தரித்தல், மடியில் ஒரு பெண், தலையில் ஒரு பெண், இத்தியாதி அநாகரிகமெல்லாம் அந்த ஆதி சிவனுக்கே உரியன. "இந்த மாதிரிக் காட்டுமிராண்டி நபரைத் தெய்வமாகக் கொண்டாடும் மதமும் ஒரு மதமாகுமா!" என்று பரநாகரிகப் படிப்பிற் படிந்து பாழாய்ப்போவார் பலர் பழிப்பதைப் பன்முறை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் உலகத்தில் பல பகுதியார் ஆடை என்பதின் அர்த்தமே சரியாக அறியாதிருந்த காலத்திற்கும் முந்திய மிகப் பண்டைக் காலத்தில் இந்த நாட்டில் விசித்திர விசித்திரமான வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகள், அணிகள், இயற்கை செயற்கை வாகனாதிகள், தேவருலகிலும் திகழ்தற்கரிய சொகுசுகள், சுகங்கள், அன்பாலும் ஒற்றுமையாலும் பந்தப்பட்டுள்ள அற்புதமான சமூக அமைப்புக்கள், அகம் புறம், இம்மை மறுமை இவற்றின் ஆழங்களை அளந்தறிந்த ஆராய்ச்சி முதலியனவெல்லாம் விளங்கிய அதிசிறந்த நாகரிக காலத்திலேதான் நமது முன்னோர் தாங்கள் தொழும் ஆதி சிவனை முற்கூறிய "காட்டு மிராண்டி" லக்ஷணத்தில் கருதியிருக்கிறார்கள். ஆகையால் முற்கூறிய ஒப்பற்ற உயர் நாகரிகத்திலிருந்த அவர்கள் தக்க காரணமின்றிக் காட்டுமிராண்டித்தனமாய்க் கடவுளையும் ஒரு காட்டுமிராண்டியாய்க் கருதித் தொழுதார்கள் என்பதுதான் உண்மைக் காட்டுமிராண்டித்தனம்.

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் பூண்ட கோலங்களும் புரிந்த லீலைகளும் பக்த கோடிகளுக்கு அருள் செய்யும்பொருட்டும் ஜீவ கோடிகளுக்கு இதம்புரியும் பொருட்டுமே என்ற விஷயம் சங்கர சமுகிதையில் தக்ஷ காண்டத்தில் தற்காலத்துப் பலர் கேட்பது போல் தடிக் கேள்விகள் கேட்ட தக்ஷப்பிரஜாபதிக்குத் ததீசி மகாமுனிவர் விஸ்தரித்து விளம்பிய விடைகளில் நன்கு உணர்த்தப்பெற்றிருக்கிறது. ஆகையால் பக்த ரக்ஷணார்த்தம், உலக உஜ்ஜீவனார்த்தம் சிவபெருமான் பேயாண்டிக்கோலம், பிக்ஷாண்டிக்கோலம், அரவமாலை சிரமாலை அணிந்த கோலம் முதலியன கொண்டாரென்று ஓர்ந்துணர்ந்தபின், அக்கோலங்களை நினைத்தால், பேசினால், மனம் பரவசமடைகிறது, உருகுகிறது. அத்தகைய பரவசத்தையும் உருக்கத்தையும் உதிக்கச் செய்யும் பொருட்டு "பேயாண்டி தனைக்கண்டு நீயேண்டி மயல் கொண்டாய்" என்ற பல்லவியுடன் வெகு அழகான தமிழ்ப் பாட்டொன்று தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. சிவபெருமான்பால் தன்னை மறந்த கரைகடந்த காதல் பூண்டுள்ள ஒரு காரிகைக்கு அவள் தாய் அக்காதலற் பெருமானது பங்கங்களை எடுத்துக் காட்டித் தன் மகள் மனத்துள்ள மையலை மறக்கடிக்க முயல்வதாக அப்பாட்டு அமைந்திருக்கிறது. ஆனால் எவ்வெவற்றைப் பங்கங்கள் என்று எண்ணித் தாய் கூறுகின்றனளோ அவையே மகள் மனத்துள்ள காதற் பெருக்குக்கு மூல காரணங்கள் என்பதை அந்தத் தாய் அறியாது பேசிக்கொண்டே போகின்றாள். சிவபெருமான் பங்கங்களைக் கணக்கிட்டு

விவரிப்பதாக அவள் நினைப்பு. ஆனால் உண்மையில் அப் பங்க விவரிப்பெல்லாம் மகள் மனத்தொளிரும் காதற் றழலுக்கு நெய் வார்த்ததாகவே இருக்கின்றன.

சுமார் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் "பேயாண்டி தனைக் கண்டு" என்ற இப்பாட்டை ஓர் சிவாலயத்தில் ஓர் மாது மதுரமாகப் பாடியதை நான் முதல்முதல் கேட்டேன். அச்சமயம் மளமளவென என் கண்களில் ஜலம் பொங்கியதை நினைத்தால்— போதும், அவையெல்லாம் என் சொந்த பக்திக் கதை. நேயர்களுக்கு அவ்வளவு பிரியமாயிராது.—இங்கே கூறவேண்டியது என்னவென்றால் மன உருக்கத்தை உதிக்கச்செய்வதற்கென்றே அமைக்கப்பெற்ற இத்தகைய கவிதா ரீதிகள் மேல்நாட்டுப் பாஷைகளில் சல்லடை போட்டு அரித்துப் பார்த்தாலும் கிடையா.

அடியில் வரும் பாட்டு முற்கூறிய பேயாண்டி தனைக் கண்டு என்ற பாட்டின் ரீதியையும், மெட்டையும் அநுசரித்துத் தற்காலத் தேசீயத் துறைக் கேற்றவாறு பாடப்பெற்றிருக்கிறது. நாட்டு விடுதலையில் நல்லார்வங்கொண்டு காந்தியத்தைக் (மகாத்மா காந்தியின் கொள்கைகளையும் போதனைகளையும்) கடைப்பிடித்தொழுகும் குரிசிலொருவன்பால் ஓர் கன்னிகை கனிந்த காதலுற்றுக் கரைவதையறிந்து, அவள் தாய் அக்காதலைத் தன் செல்வியின் சிந்தையிலிருந்து கத்த்ரித்துவிடக் கருதி, அக்குரிசிலின் ஈனங்கள் என்று தான் கருதும் அம்சங்களை அடுக்கிக் கூறித் தூறி இளங்கொடியை இதமாகக் கடிகின்றாள். ஆனால் இந்தத் தூறுதலுரையெல்லாம் மகள் மனத்திற்கு மகத்தான மகிழ்ச்சியையும் பலத்த பரவசத்தையும் தருகின்றன. ஏனெனில் தன்னை ஈன்றாள் எடுத்தியம்பும் ஈனங்களே யுவதியின் அகத்தில் தெய்விகக் காதலை லயிப்பித்திருக்கின்றன. அத்துணைத் தேசீய ஆர்வங் கொண்டவள் அப்பெண்மணி.

காலர், சப்பாத்து, கண்ணாடி முதலிய கசடுகளில் மங்கையர் மதியிழந்து மனமிழத்தலொழிந்து முற்கூறிய தாய் கூறித் தூறுவதாய் அடியில்வரும் பாட்டில் உள்ள கோணித்துணி, வனத்தாண்டி வாழ்க்கை, சோகத்தைச் சுகித்தல், தொண்டேற்றுத் திரிதல் முதலிய அம்சங்கள் நமது நங்கையர் மனத்தில் பெரும் பிரேமையையும் கனிந்த காதலையும் அலர்விக்கக் காரணங்களா யிருப்பின், நாடு விடுதலை நண்ணுவ தெப்போது என்ற வினாவிற்கு நாள் கணக்கிலும் நாழிகைக் கணக்கிலும் உத்தரங் கூறும் நிலைமை உற்றுவிடும். ஏனெனில் பெண்ணே பிரபஞ்சம் இயங்குந் தன்மையை இயக்கும் சக்தியாகின்றாள். அவள் அகத்தெழும் கனிந்த காதலோ தெய்விகத் தீரம் வாய்ந்தது. "சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்று பெண்ணின் பெருமையைப் பேசுகின்றார் பாரதி மகா கவியும்.

பேயாண்டி தனைக் கண்டு என்ற பாட்டை ஆனந்த பைரவி, எதுகுல காம்போதி ஆகிய இரண்டு இராகங்களிலும் பாடலாம். அந்தப் பாட்டின் ரீதியையும் மெட்டையும் அநுசரித்த நமது பாட்டை ஆனந்த பைரவியில் பாடினால் தான் அத்தியந்த உருக்கமா யிருக்கும். "கையிற் பணமில்லாமல் கலவி செய்ய வந்தீரோ" என்ற பாட்டின் ஆனந்தபைரவி மெட்டு, இந்தப்பாட்டிற்கும் பேயாண்டிதனைக் கண்டு என்ற பாட்டிற்கும் உரிய மெட்டாகும் என்றும் குறிப்பிடுகிறோம்.

பாட்டு.

1. வனத்தாண்டி வாழ்க்கையானை
மனத்தேண்டி மையல் கொண்டாய்
மானே அழகாகுமோ.
தனத்தாசை புனத்தாசை
அனைத்தும் அகற்றிவைத்து
வனத்தாய் விடுதலையில்
கனத்த பயித்தியங்கொள் (வனத்)

2. காந்தியக் கோட்டியானைச்
சேந்தியேன் சிந்தை கொண்டாய்
கண்ணே அழகாகுமோ.
பாந்தள்பல் லாயிரமாய்ச்
சேர்ந்துவந் தெதிர்த்தாலும்
சாந்தமே சத்தியமே
ஏந்துமிந் நெறியென்னும் (காந்தி)

3. கோணித்துணி கொண்டானை
பேணியேன் பெட்புக்கொண்டாய்
கோதாய் அழகாகுமோ.
கோணித்துணி யென்போமோ
தோணித்துணி யென்போமோ
மாணியல் துணியென்றே
நாணின்றி யுடுக்கின்ற (கோணித்)

4. தீண்டாமை தெறித்தானை
ஏண்டிநீ இச்சைகொண்டாய்
தேனே அழகாகுமோ.
ஆண்டேயென் றழைத்திடும்
தீண்டாதார் தீண்டிவிட்ட
பாண்டத்தும் நீர்பருகும்
வேண்டா வழக்கங்கொள்ளும் (தீண்)

5. காசற்ற கையான்றன்னை
நேசித்தேன் நெஞ்சங்கொண்டாய்
கனியே அழகாகுமோ.
ஆசித்தாசித்துச்சேர்த்த
காசைக் கவிழ்த்துக்கொட்டி
தேசத்தின் பூசைக்கென்று
வீசித்தொலைத்த வீணன் (காசற்ற)

6. பழராட்டுப் பயில்வானைத்
தொழுதேண்டி துயர்கொண்டாய்
பாவாய் அழகாகுமோ.
மழமழ மல்லுமுதல்
அழகொளிர் ஆடைபல
தழலுக்குத் தானந்தந்த
கொழுமைச் செயல்கொண்ட (பழ)

7. காராக் கிருகத்தானை
ஓராதேன் உள்ளங்கொண்டாய்
கரும்பே அழகாகுமோ.
சாராயச் சழக்கர்க்கும்
கூராகக் கும்பிட்டு
வாராத வம்பையெல்லாம்
நேராகத் தலைக்கொள்ளும் (காராக்)

8. சோகத்தைச் சுகிப்பானை
ஆகத்தேன் ஆசைகொண்டாய்
சுகமே அழகாகுமோ.
தேகத்துத் தீனத்திலும்
மேகத்து மின்மழையில்
வேகத்து வெய்யலிலே
ஊகத்தோடுழைத்திடும் (சோகத்)

9. தொண்டேற்றுத் திரிவானைக்
கண்டேண்டி காதல்கொண்டாய்
தோகை அழகாகுமோ.
திண்டோர்த் தெருக்களிலும்
திண்டாத சேரியிலும்
கண்டேற்ற காந்தியத்தைக்
கொண்டேகிக் கூவுகின்ற (தொண்)

சென்னை-600 008
207619

பொருட் குறிப்புகள்.

பாட்டு 1. வனந்தாண்டி—**காட்டாண்டி**. தனத்தாசை—**பொருளாசை**. புனத்தாசை—**வயல் முதலிய ஸ்தாவர சொத்துக்களில் ஆசை**. (புனம்—வயல்) வனந்தாய்—**அழகிய தாயாகிய பாரதத்தாய்**. (வனம்—**அழகு**).

207619

பாட்டு 2. கோட்டியானை—கொள்கையுடையவனை அல்லது "பைத்தியங் கொண்டவனை" என்றும் பொருள் கொள்ளலாம். கோட்டி என்னும் மொழிக்குக் கொள்கை, பைத்தியம் என்ற இரு பொருள்களும் உண்டு. பாந்தள்—பாம்பு.

பாட்டு 3. பேட்புக்கொண்டாய்—விருப்பங்கொண்டாய். மாணியல்—மாட்சிமைபொருந்திய, உயர்ந்த.

பாட்டு 4. தெறிந்தானை—அழித்தவனை.

பாட்டு 5. காசற்ற கையான்—பணமில்லாதவன், அல்லது "குற்றமற்றவன்" என்றும் பொருள்கொள்ளலாம். காசு என்னும் மொழிக்குப் பணம், குற்றம் என்ற இரண்டு அர்த்தங்களும் உண்டு. நேசித்தேன்—நேசித்து என்.

பாட்டு 6. பயில்வானை—பயிலுகின்றவனை, தொழில் புரிவானை பழாட்டுப் பயில்வானை என்பதற்கு "ராட்டில் பழைய நூற்றல் தொழில் புரிவானை" என்றும், "ராட்டு என்னும் பழைய ஆயுதத்தைக் கொண்டுள்ள வீரன்" என்றும் பொருள்கொள்ளலாம். பயில்வான் — வீரன் தழலுக்கு — நெருப்புக்கு. கொழுமைச் செயல்—கொழுத்த செயல்.

பாட்டு 7. ஓராதேன் உள்ளங்கொண்டாய்—ஓராது என் உள்ளங்கொண்டாய், ஆராயாமல் என் மனத்திற் கொண்டாய்.

பாட்டு 8. சோகத்தைச் சுகிப்பானை—துன்பத்தைப் பாராட்டாமல் அதைச் சுகமென்றே எண்ணி அநுபவிப்பவனை. ஆகந்தேன்—ஆகத்து என், நெஞ்சில் என். (ஆகம்—நெஞ்சு). சுகமே—கிளியே.

பாட்டு 9. தொண்டேற்றுத் திரிவானை—தொண்டு ஏற்றுத் திரிவானை, தேசிய சேவையை மேற்கொண்டு திரிகின்றவனை. தோகை—மயிலே. திண்டேர்த் தெருக்களிலும்—திண் தேர்த் தெருக்களிலும், உறுதியான ரத வீதிகளிலும். சிண்டாத—நெருங்காத. சேரி—தீண்டாதாராய்க் கருதப்படுவோர் வசிக்கும் இடம்.

# ஜோன் ஆப் ஆர்க்.

(ஜனாப் A. M. அல்லாபிச்சை.)

(196-வது பக்கத் தொடர்ச்சி.)

அச்சமயத்திலங்கேற்படுத்தியிருந்த ஓராசனத்தில் அரசன் வீற்றிருந்தனன். அம்மடந்தை பிரான்சுதேயத்தின் கிரீடத்தைத் தன்னழகிய கரங்களிலேந்தி வனப்புற்ற ஆசனத்தின் மீதிருக்கும் மன்னனருகே சென்று அவனது சிரசின் மீது அக்கிரீடத்தை வைத்தனள். பின்னர் அவனையுற்று நோக்கிச் சிறிது தூரஞ் சென்றனள். அங்குள்ளார் யாவருமிவள் செய்தவற்றை மிக்க ஊக்கத்துடன் நோக்கினர். பிறகு அம்மடமயில் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகச் சிந்த அழுதனள். அதனைக் கண்ட யாவரும் அழுதனர். அத்தெய்வப் பெண் தன் அழகிய கரத்தையுயர்த்தியசைத்தனள். உடனே எல்லோரும் சாந்தமாயிருந்தனர். பின்னர் அவள் அரசனை நோக்கி, "பிரான்சு தேயத்து மன்ன! சினான் என்னுமிடத்தில் நீ மாறுவேடம் பூண்டிருந்தபோது, பரமனாலளிக்கப்பட்ட வாளைக்கொண்டு நின் பகைவர்களாகிய ஆங்கிலேயர்களை ஆர்லியன்ஸ் நகரத்திலிருந்து துரத்தி ரைம்ஸ் நகரத்தில் நின்னை முடிசூட்டும் வண்ணம் அப்பரமன் எனக்களித்த கட்டளையை யான் பூர்த்திசெய்து விட்டேன். நீ இன்று மகிமை வாய்ந்த பிரான்சு தேயத்தின் மன்னனாக ஏற்படுத்தப் பட்டாய்! நீ தேயத்தையாளுங் கடமையைப் பூர்த்தி செய்வாயாக! கடவுளது திருமொழிகளையும், சட்டத்தையுங் கடக்காமல் அவற்றைப்பின் தொடர்ந்து குடிகளின்மீது நின்னல்லரசாட்சி செலுத்துவாயாக! கடவுளுக்கஞ்சுதல் நினது கடமையாகும். நின்னைப் பயந்து நினது சட்டத்தைக் கடக்காம

விருப்பது நினது குடிகளின் கடமையாகும். நீ நமது தலைவனாகிய கர்த்தனது கருத்தினை நிறைவேற்றுவாயாயி னுலகத்தி லொப்பற்ற சந்தோஷத்தை ஏற்படுத்துவா யென்பதற்குச் சிறிதுமையப்பாடில்லை. நினது பிரதாபத்தை யுலகத்தில் நிலைநாட்டும் வண்ணமும், பல தேயங்களையும் நின்வயப்படுத்துமாறும் சுகத்திற்காக நின்னை நாடியிருக்குங் குடிமக்களை அவர்களுடைய அகங்களிலிருந்து பிறதேயங்களுக்கனுப்பி அவர்களுயிர்ச் சேதத்தையும் பிறருடைய உயிர்ச்சேதத்தையும் நிகழ்த்தாமலிருப்பாய்! நினது குடிமக்கள் வருமைப்பிணியால் அழுது கொண்டிருக்கும்பொழுது புல்லுருவிகளினினிய வார்த்தைகளைச் செவியுற்றுப் பேரானந்தமடையாமலிருப்பாய்! துன்பம், தீத்தொழில், பேராசை நினது தேயத்திற் குடிகொண்டிருப்பின், நின்னை யாசனாக ஏற்படுத்திய பரமன் நின்னைத் தண்டிப்பது திண்ணம்! நீ குடிகளின்மீது நல்லரசாட்சி செலுத்துவாயாயின், அவர்களது நட்பைக்கொண்டும் விசுவாசத்தைக்கொண்டும் வெல்ல முடியாத பகைவர்களை வெல்லுதல் மிக்க சுலபம். ஓ! மன்ன! நினக்கு முடிசூட்டுவதுடன் கடவுளளித்த கட்டளையை யான் பூர்த்திசெய்து விட்டேன். இனிமேல் யான் செய்யக்கூடியது எதுவுமில்லை'' என்று மிக்க வணக்கத்துடன் கூறினள்.

(கடவுளிட்ட கட்டளையை முற்றும் ஜோன் என்னும் மங்கையர்க்கரசி நிறைவேற்றிப் பிரான்சு தேயத்தில் சுதந்திரத்தை நிலை நாட்டியது பற்றியும், சார்லெஸ் என்னும் அரசிளங்குமரனைப் பிரான்சு தேயத்து மன்னனாக்கியது பற்றியும், பிரான்சு தேயத்திலெங்கும் பேரின்பத்தை நிலை நாட்டியது பற்றியும் யாம் முன்னமே கூறியிருக்கின்றனம். இப்பொழுது, அவள் செய்த பேருபகாரத்தைச் சிறிதும் பாராட்டாமல் அம்மடந்தையைப் பகைவர்கள் சிறைப்படுத்தியபொழுது, சார்லெஸ் மன்னவன் அவளை அச்சிறையினின்று விடுக்காத நன்றியின்மையைப் பற்றியும் அப்பெண்மணி தன் தேயத்தின் நன்மையைப் பாராட்டித் தன் இன்னுயிரினையுமொரு துரும்பெனக் கருதியர்ப்பணஞ் செய்து யாவரும் வியக்கத்தக்க பிரதாபத்தை வையகத்தில் நிலைநாட்டிய வீரச் செய்கையைப் பற்றியும் அவளுடைய நேரலர் எள்ளளவேனு மனுதாப மிரக்க முதலியவையின்றி அவளை அக்கினிக்கிரையாக்கிய வெறுக்கத் தக்க தீச்செயலைப் பற்றியும் கூறுதல் நம்முடைய கடமையாகும்.)

அம்மடமயில் சார்லெஸ் மன்னவனுக்கு முடிசூட்டிய பின்னர் தன் தாய் தந்தையையும், நண்பர்களையும், சகோதர சகோதரிகளையும் காணும் வண்ணம் டாம்ரமி என்னும் கிராமத்திற்கேக வுத்தரவு கேட்டனள். அதற்கு அக்கொற்றவன் இணங்கினானில்லை; ஏனெனில் அவளுதவிகொண்டு பாரிஸ் நகரத்திலுள்ள ஆங்கிலேயர்களைப் பிரான்சு தேயத்திலிருந்து அகற்ற எண்ணங்கொண்டனன். இவ்வெண்ணத்தை நிறைவேற்றுமாறு சார்லெஸ் கொற்றவன் அம்மங்கையுடன் ஒரு சேனையைப் பாரிஸ் நகரத்தைக் கைப்பற்றும்படி யனுப்பினான். அங்கு பிரஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குஞ் சில சிறிய போர் நடந்தது. பின்னரப் பிரஞ்சுக்காரர்கள் கம்பீன் என்னும் இடத்தைத் தம் வயப்படுத்தக் கருதினர். அது காரணம் பற்றி அம்மடமானுமவள் வீரர்களும் அந்நகரத்துக்குள் ஏகினர். அவ்விடத்து நடந்த சமரில் அம்மங்கையினது வீரர்கள் தோல்வியடைந்தனர்; ஜோனென்னும் மங்கை சிறையாக்கப்பட்டனள்.

வையகத்தில் பற்பல தீச் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன. எவ்வாறெனில், யூதர்கள், உலகத்திலுண்மையை நிலைநாட்டி யெல்லோருமத

னால் இம்மை மறுமைப் பயன்களை அனுபவிக்கும்படி செய்யக் கருதிய குணக்குன்றாகிய கிறிஸ்துவைச் சிலுவையின்மீது அறைந்த தொன்று. கிரீஸ் தேயத்தில் தத்துவ ஞானத்தை நிலை நாட்டிக் கிரேக்கர்களெல்லோரும் விபசார முதலிய தீச் செயல்களை நீக்கும் வண்ணம் கருதிய சாக்ரட்டீஸ் என்னும் பிரசித்திபெற்ற முனிவனுக்கு விஷமளித்து அக்கிரேக்கர்கள் கொல்வித்தது மற்றொன்று. பிரான்சு தேயத்தை யடிமைத்தனத்திலிருந்து நீக்கி யுலகத்தில் சுதந்திரத்தின் சிறப்பினை நிலைநாட்டக் கடவுளால் அனுப்பப்பட்ட ஜோன் என்னும் மங்கையைச் சிறிது மிரக்கமின்றி அறிவின்மையால் அவளுடைய நேரலரெரிவித்தது வேறொன்று.

ஜோன் என்னும் மடந்தை கம்பீன் என்னுமிடத்திற் சிறையாக்கப்பட்டாளென்பதையா முன்னமே கூறியிருக்கின்றனம். சிறையாக்கப்பட்ட பின்னர் ஜீன் டி லக்செம்பர்க் என்னும் தளகர்த்தனொருவன் அவளை ஆங்கிலேயர்களுக்குப் பதினாயிரம் பிரேங்குகளுக்கு விற்றனன். பின்னர் ஆங்கிலேயர்கள் அம்மங்கையைப் பியெர்காசன் என்னும் அத்தியக்ஷ குருவினிட மொப்புவித்தனர். அக்குருவினிடம் நேர்மை யென்பது சிறிதுங் கிடையாது; தன் காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு எத்தன்மைத் தீச்செயலையுஞ் செய்ய அஞ்சாத கொடும் பாதகன்; ஜோன் தெய்வ பக்தியிற் சிறந்து ஞானதிலகம்போல் விளங்கியதைச் சிறிதும் விரும்பாத் தீயோன்; முன்னர் பிரான்சுக்காரர்களுக்குரிய குருவாட்சியிலிருந்து நீக்கப்பட்டமையினவர்களுக் கிப்பொழுது சொல்லொண்ணாத் தீங்கு விளைவிக்கக் கருதினன். இப்பாதகன் கிடைத்தற்கரிய மங்கையை விசாரணை செய்யுமாறு ஒரு நியாயஸ்தலத்தை ஏற்படுத்தினன். ஏற்படுத்திய பின்னர் தானும் வேறு பர்கண்டிய கட்சியைச் சார்ந்த நியாயாதிபதிகளும் ஜோனை விசாரணை செய்யலாயினர். இவ்விசாரணை ஜனவரி மாத முதல் பெப்ரவரி மாத மிறுதியாக நடை பெற்றது. இம்மங்கையை விசாரணை செய்தவர்களில் ரோன் நகரத்திலுள்ள ஜீன்டிலொஹீர் என்னுமொரு வக்கீலைத் தவிர மற்றவர்களெவரு மிவளுக்கு மரண தண்டனையை விதிக்கப் பேரவாக் கொண்டனர். அக்கொடும் பாதகர்கள் தாம் விரும்பியவாறே அவள்மீது பற்பல குற்றங்களைச் சாட்டினர். அவைகளுக்குள் சிலவற்றை யெடுத்துரைத்தல் நலமாகும். அம்மங்கை யாடவராடை யணிந்ததும்; அவள் தன்னாசனை நோக்கித் தான் தேவனாலனுப்பப்பட்டவளென்று கூறியதும்; அவள் முன் தோன்றிய சாதுக்கள் அவளுடன் ஆங்கிலேய பாஷை பேசவில்லையென்று கூறியதும்; எதிர் காலத்தைத் தன்னாலறியக் கூடுமென்று அவள் கூறியதுமாகிய இவை பொறுத்தற்கரிய பெருங் குற்றங்களாம்! இத்தகைய குற்றங்களை அவள் மீது சாட்டி அவளை யெரிவிக்க மரண தண்டனை விதிக்கும்படி தங்கள் குற்றமுற்ற அபிப்பிராயத்தை வெளியிட்டனர் புலமையற்ற அப்புல்லறிவாளர்கள்.

பின்னரிம்மங்கையை யெரிவிக்க ஆயிரத்து நானூற்று முப்பத்தோராவது வருஷம் மே மாதம் முப்பத்தோராந் தேதி புதன்கிழமை என்னுங் காலத்தையும், அவளெரிவிக்கப்படுவது ரோன் நகரத்திலுள்ள சந்தையாகிய இடத்தையுமேற்படுத்தினர். இக்கடுஞ் செய்கையினைக் கேள்வியுற்ற சனங்கள் பற்பல விடங்களிலிருந்து வந்து மேற்கூறிய இடத்திற் கூடினர். இங்குள்ள ஓரிடத்திலொரு பெரிய கம்பம் பூமியில் நிலைநாட்டப்பட்டது. அம்மடமானையக் கம்பத்திற் பிணித்தல் செய்தனர். பின்னரவளைச் சுற்றிலும் விறகு கட்டைகளைக் குவித்தனர். குவித்த பின்னரவற்றிற்குத் தீ மூட்டினர். அப்பொழுது விறகுகளெரிவதையும், கட

வுளின்மீது முழு நம்பிக்கையுடனிருக்கு மம்மங்கையின் சாதுவின் தோற்றத்தையு மித்தகைய தீச்செயலை நிகழ்த்திய தீயோர்களின் பெருங்குற்றத்தையும், தன்னை யாசனுக்கிய மங்கையைக் காப்பாற்றச் சிறிது முயற்சியும் செய்யாத சார்லெஸ் என்னுங் கொற்றவனது பேடித்தனத்தையும் நன்குணர்ந்த பலருமிக்க துன்பமெய்தினரென்பது கூறாதேயமையுமன்றோ? அவ்விடத்துக் கூடியிருந்த மாந்தரிற் சிலர் ஜோன் என்னுமத் தெய்வப் பெண்ணின் சாந்தமான வதனத்தை நோக்கி, "இத்தகைய சிறந்த சாதுவின் தோற்றத்தைப் பெற்றிருக்குமிப் பெண்ணைச் சூனியக்காரியென்று கூறுதல் அறிவின்மையாகும். தீயோர்களாகிய புல்லறிவாளர் விளைவித்த இத்தீங்கினைக் கடவுள் மன்னியாரென்றே யாம் கருதுகின்றனம்" என்று கூறினர் சிலர்; "மரணத்திற்குச் சிறிது மஞ்சாமல் ஆகாயத்தை நோக்கித் தேவனைத் துதிக்கு மிச்சிறந்த மங்கையின் தெய்வபக்தி மிகவு மெச்சிப் பாராட்டத்தக்கது" என்று கருதினர் சிலர். "இத்தகைய வியக்கத்தக்க பெண்ணணங்கின் தைரியம், பொறை முதலியவற்றை வியந்து பாராட்டாமலிவளுக்கு இத்தகைய மரண தண்டனையை விதித்த நியாயாதிபதிகள் அறிவற்ற பெரும் மூடர்கள்; குண நலமற்ற பெரும் வஞ்சகர்கள்" என்று வெகுளியெய்தினர் சிலர்; "தனக்குச் செய்த ஒப்பற்ற நன்மையை முற்றும் மறந்து, இம்மங்கை யனுபவிக்குந் தீங்கினை நீக்கி இவளுக்குப் பேரின்பம் விளைவிக்கத் தைரியம் படைக்காத சார்லெஸ் மன்னவனுமொரு மன்னனோ?" என்று முணு முணுத்து வெறுத்தார் சிலர்; "நமது சேனைகளைப் போரில் வதைத்த இச்சூனியக்காரிக்குத் தகுந்த தண்டனைதான் விதித்தனர்" என்று பிதற்றினர் மூட பக்தர் சிலர்; "ஐயோ! பாபம்! ஐயோ! பாபம்!" என்று புலம்பியழுதனர் குழந்தைகள் சிலர். இச்சமயத்தில் அம்மங்கையர்க்கரசி சிறிது மஞ்சாமல் தன்னுயிர் நீங்குந் தருணத்தில் தன்னழகிய வாயைத் திறந்து, "இயேசுவே! யான் செவியுற்ற ஆகாயவாணிகள் நேர்மையுற்றவை!" என்று உச்சரித்துக் கொண்டே தன்னுயிர் நீத்தனள்.

(முற்றிற்று.)

# நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(154-வது பக்கத்தொடர்ச்சி.)

## முப்பத்தோராவது அத்தியாயம்.

அயாஸ்பெக்கின் மாளிகை மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்திரீகளும் புருஷர்களும் கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தார்கள். மாளிகையின் ஒவ்வொரு மூலையிலும் ஸ்திரீ புருஷர்கள் சந்தோஷமாயும் ஆனந்தமாயும் பேசிக்கொண்டிருந்தனர். பல தருணிகள் அங்க முழுவதையும் ஆபரணங்களாலும் நானாவித பட்டுச் சேலைகளாலும் மறைத்து அன்னத்தை யொத்து அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தனர். அன்று அயாஸ்பெக்கின் கிரகத்தில் யாது விசேஷமென ஆக்ரா நகரத்தில் அறியாதவர் எவருமில்லை. அக்பர் பாதுஷாவின் பெரிய சர்தார்களுள் அயாஸுமொருவனென யாவரும்

அறிந்த விஷயமே. இதுவுமன்றி டில்லிக் கதிபதியின் அந்தப்புரத்துமில்லாத அதி லாவண்ய கன்னிகையைப் பெற்றிருந்ததாலும், இளவரசன் சலீம் அவளை மணக்க விருக்கின்றனன் என்ற வதந்தியே எங்கும் பரவியிருந்ததாலும் ஆக்ரா நகரத்தில் அயாஸ்பெக் மிக்க மகத்துவத்தைப் பெற்றிருந்தனன். ஆக்ரா நகர வாசிகள் யாவரும் அயாஸின் ரூபவதியான குமாரி இளவரசனது கழுத்தில் என்று மணமாலையை இடப்போகின்றாளெனக் காத்திருந்தார்கள். மேஹரது விவாகத்தைப்பற்றியே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் எங்கும் பேசிக்கொண் டிருந்தனர்.

இஃதிப்படியிருக்க, இளவரசனல்லாது அலிகுலிபெக் என்னும் ஒரு பட்டாணிக்கு மேஹர் மனைவியாகப்போகின்றனள் என்ற சங்கதி திடீரென எங்கும் பரவவே இதைப்பற்றியே ஒவ்வொருவரும் பேசலானார்கள். இளவரசன் யுத்தத்திற்குச் சென்றிருக்குஞ் சமயம் மிக்க அவசரத்துடன் இவளது விவாகத்தை நடத்துவதற்கு வேறு ஏதாயினுங் காரணமிருக்க வேண்டுமென ஒவ்வொருவருந் தர்க்கஞ் செய்யலானார்கள். இவ்வண்ணம் அயாஸ்பெக்கின் குமாரியின் விவாகத்தைக்குறித்தே எங்கும் பேச்சாயிருந்தது.

தெருவிற் பல்லக்குகளும் மேனாக்களும் ஒன்றின்பின் னொன்றாகப் புறப்பட்டன. முன்னும் பின்னும் வாத்தியங்கள் கோஷித்தன. இவை யாவும் அயாஸ்பெக்கினது மாளிகையின் முன் வந்து சேர்ந்தவுடன் மேனாக்களிலிருந்து ஸ்திரீகள் ஒவ்வொருவராகக் கீழே யிறங்கினார்கள். அவர்கள் தமது முகங்களை வஸ்திரங்களால் மறைத்திருந்தபோதிலும் அவர்களது நடையுடை பாவனைகளால் ஸ்திரீகளென எளிதிலறிய ஏதுவாயிருந்தது. அவர்களோடு எண்ணிறந்த வேலைக்காரிகளுமிருந்தனர். ஸ்திரீகள் யாவரும் அயாஸ்பெக்கின் மாளிகையின் கதவருகில் வந்து சேர்ந்த மாத்திரத்தில் அயாஸ்பெக்கின் மனைவியும் மற்றும் பல ஸ்திரீகளும் குலவழக்கத்தை அனுசரித்து வந்தவர்களை வரவேற் றுபசரித்து வீட்டினுள் அழைத்துச் சென்றார்கள். எல்லோரும் முகங்களை மறைத்த வண்ணம் குதூகலமுடன் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் விவாகக் கிரகத்தினுள் நுழைந்தார்கள். நமது கதாநாயகி மேஹருல் நிஸா கவி ஷேக்சாதியினா லெழுதப்பட்ட 'போஸ்தான்' என்னும் காவியத்தைக் கரத்திலேந்தி ஓர் ஆசனத்தி லமர்ந்திருந்தனள். இவளைக் கண்ட மாத்திரத்தில் ஆச்சரியத்திலாழ்ந்த பேகம் சபிரா—அதாவது அலிகுலிபெக்கின் சகோதரி—"இஃதென்ன சௌந்தர்யம்! கண்களுங் கூசுகின்றனவே" எனப் பகர்ந்துகொண்டே மேஹருகிற் சென்று "மௌனமாய் வீற்றிருக்கக் காரணமேன்?" என்றனள்.

சமீபமிருந்த அயாஸின் மனைவி "நமது மேஹருக்கு அதிக சங்கோஜம். உங்கள் பரிச்சயமில்லாததால் வாயைத் திறவா திருக்கின்றனள். சரி, வாருங்கள், நேரமாகிவிட்டதால் நாம் போய்ச் செய்யவேண்டிய காரியங்களைப் பார்ப்போம்" என்றனள்.

சபிரா பேகம்:—ஆமாம், அதிக லஜ்ஜைப்படுகின்றனள். மதனியிருந்தால் இப்படியல்லவோ இருக்கவேண்டும்.

அச்சமயம் வேலைக்காரிகளும் மற்றும் ஸ்திரீகளும் பல சாமான்கள் நிறைந்த தட்டுகளுடன் அங்கே வந்து சேர்ந்தார்கள். சபிராபேகம் இரண்டு மாலைகளை மேஹரது கழுத்திற் போட்டு அவளது காதுகளில் வைரக் கம்மலையிட்டு மற்றுங் கொணர்ந்திருந்த தட்டுகளை அவ்வறையில் வைக்கும்படி வேலைக்காரிகளிடம் பகர்ந்தனள். அப்பொழுது மங்கள வாத்தியங்

களால் அவ்வீடுமுழுவதும் எதிரொலித்தது. மேஹராது தாய் வந்திருந்த ஸ்திரீகள் தருணிகள்மீது தாழை, அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களைத் தெளித்து தங்கப் பொடிகளைத் தூவவே அங்கெங்கும் சுவர்ணமென ஜொலித்தது. கொஞ்சநேரம் எல்லோரும் ஆனந்தமாகப் பேசியும் சிரித்துமிருந்தார்கள். விவாகத்துக்குரிய பல தருணிகள் தங்கள் முகங்களை மூடியிருந்த வஸ்திரங்களை ஒருபுறமகற்றி விவாகம் எவ்விதமாக நடைபெறவேண்டுமென்ற மனோராஜ்யத்தில் ஆழ்ந்திருந்தனர். வயதுமிக்க ஸ்திரீகளும் ஆனந்தமடைந்தனர். எல்லோரும் இவ்வாறிருக்க, நமது மேஹராது இருதய ரணபூமியில் கோபாக்கினியே குடிகொண்டிருந்ததால் அவள் கழுத்திலிருந்த புஷ்ப மாலைகள் வாடிவந்தன. மணமகனது சகோதரியையும் மற்றெல்லோரையும் சத்துரு சமானமாகப் பாவித்தனள். கோபாவேசத்தால் ஆங்கு வந்தவர்களை வீட்டை விடுத்துச் செல்லும்படி கூற உத்தேசித்தனள். ஆயினும் விவேகமுள்ளவளானதால் கோபத்தை யடக்கிக்கொண்டு ஊமையைப்போலாயினள். எப்பொழுது இவர்கள் யாவரும் வீட்டை விடுத்து ஒழியப்போகின்றனரெனக் காத்திருந்தனள். எல்லோருஞ் சென்றபின், ஒருவள் கஷ்டத்துடன் தன் தலைமேல் ஓர் பாரமான மூட்டையை மிக்கநேரம் தூக்கி வைத்திருந்து அதைக் கீழே வைத்தால் அவளுக்கு எவ்வளவு சிரமபரிகார முண்டாகுமோ அவ்வண்ணமே மேஹருக்குமாயிற்று. க்ஷணநேரத்தில் அவள் இளவரசனைச் சந்தித்து இச்சங்கடத்தினின்றும் தன்னை விடுவிக்கும்பொருட்டு அவனை வேண்டிக்கொள்ளுவதாக மனோராஜ்யஞ் செய்யலானாள். ஆனால் இந்த மனோராஜ்யமெல்லாம் மிக்க நேரந் தங்கவில்லை. விவாகச் சடங்குகள் ஒன்றின்பின்னொன்றாக வந்துகொண்டே யிருந்தன. அயாஸ்பெக் தன் மருமகனுக்கு மிக்க விமரிசையுடன் சீர்வரிசைகள் அனுப்பலானான். தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பேலாக்கள், வைர மோதிரங்கள், முத்துமாலைகள், பட்டுச் சட்டைகள், காஷ்மீரச் சால்வைகள், மற்றும் எண்ணிறந்த சாமான்கள் நிறைந்ததும் பட்டுத் துணிகளால் மூடியதுமான வெள்ளித் தட்டுகளைப் பல சேவகர்கள் தலையில் தூக்கிச் சென்றார்கள். மற்றுஞ் சிலர் வெற்றிலை, பாக்கு, பழம், கற்கண்டு, சர்க்கரை, புஷ்பமாலைகள், வாசனைத் திரவியங்கள் முதலியவைகளால் நிரப்பப்பட்ட தட்டுகளைத் தூக்கிச் சென்றார்கள். சீர்வரிசைகள் யாவற்றையும் மணமகன் வழக்கப்படி ஏற்றுக்கொண்டனன்.

மறுநாள் மாலை மணமகன் மிக்க விமரிசையுடன் ஊர்வலம் வந்தனன். சிங்காரிக்கப்பட்ட யானைகளிலும் குதிரைகளிலும் சிறு பையன்கள் அழகாய் அலங்கரித்து உட்கார்ந்திருந்தனர். இவைகளுக்குப் பின் குதிரை வீரர்கள் வரிசை வரிசையாகச் சென்றனர். நானாவித வாத்தியங்கள் நாலாபக்கங்களிலும் காதைத் துளைத்தன. கையில் வெள்ளித் தடிகளை ஏந்திய சிலர் 'வழிவிடுங்கள், வழிவிடுங்கள்' எனக் கூவிக்கொண்டே யிருந்தனர். பலர் சாம்பிராணிப் பொடியைத் தழதழவென விருந்த தணலில் தூவியவண்ணமிருந்ததால் ரஸ்தா முழுவதும் கமகமவென வாசனை வீசியது. அடிக்கடி பன்னீரை ஜனங்கள்மீது தெளித்துக்கொண்டே பல சிறுவர்கள் சென்றனர். இவர்களுக்குப்பின் சித்திரங்களை யொத்த தாசிகள் அபிநயித்தவண்ணம் மிருதங்க தாளத்திற்கு ஒத்து நர்த்தனஞ் செய்துகொண்டே மதுரநாதத்தோடு பாடிவந்தனர். இவர்களுக்கெல்லாம் பின்னால் வாசனைமிக்க மல்லிகைப் புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்ட குதிரைமேல் வீற்றிருந்தனன் மணமகன் அலிகுலிபெக். ஆங்கிருந்தவர்கள் யாவரும் இவ

னையே நோக்கியிருந்தார்கள். அச்சமயம் ரோஜாவர்ண நிஜார் அணிந்திருந்தனன். இடுப் பிற் காசிப்பட்டு ஒன்றைக் கட்டியிருந்தனன். உயர்ந்து தடித்திருந்ததால் மிக்க அழகாகத் தென்பட்டனன். இவனது தலைப்பாகையிற் கட்டப்பட்டிருந்த முத்துக்கள் இவன் முகத் தைச் சுற்றித் தொங்கிக்கொண்டிருந்ததால் இவனது முகத்திற்கு மிக்க விசித்திர சோபை யைக் கொடுத்தன. இவன் வீற்றிருந்த குதிரையும் அதிக அழகாய்க் கால்களை வைத் துச் சென்றுகொண்டிருந்தது. இவ்வண்ணம் ஊர்வலம் மிக்க தடபுடலாய்ச் சென்றுகொண் டிருக்கும்போது இவனது இஷ்ட மித்திரர் கள் பின்னிருந்து இவன்மேல் செம்பு, வெள்ளி தங்க நாணயங்களை எறிந்து கொண்டிருந்தார் கள். யாசகர்கள் ரஸ்தாக்களெல்லாங் கூடி ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து நாணயங்களைப் பொறுக்கலானார்கள். இந்த ஊர்வலத்தைப் பார்க்க புருஷர்கள் தெருக்களெல்லாம் கும்பல் கூடினார்கள். வீட்டுத் திண்ணைகளிற் கட்டப் பட்ட தட்டிகளின் துவாரங்கள் வழியாய் ஸ்திரீகள் மிக்க உற்சாகத்துடன் இதை நோக்கி யிருந்தார்கள். இரவு மிக்க நேரஞ் சென்றபின் இவர்கள் யாவரும் மணமகளது வீட்டிற்கு முன்னால் வந்து சேர்ந்தார்கள். அயாஸ்பெக்கும் அவனைச் சேர்ந்தோரும் மண மகனை வரவேற்றுபசரித்து விவாக மண்டபத் திற்கு அழைத்துச் சென்றார்கள். ஏராளமான திரவியத்தைச் செலவழித்து அம்மண்டபம் ஜோடிக்கப்பட்டிருந்தது. ஆங்கு யாவரும் உட்கார்ந்தவுடன் எண்ணிறந்த வேலையாட்கள் பட்சணங்கள், சிற்றுண்டிகள், கனிவர்க்கங்கள், மற்றும் சீதள ஷர்பத் வகையாக்கள் முதலிய வற்றைக் கொணர்ந்தனர். பிறகு கேட்பா னேன்? "சாப்பிடுங்கள், நீங்கள் சாப்பிடுங் கள்" என்ற உபசார மொழிகளே எங்கும் வர் ஷித்தவண்ணமிருந்தன. நாம் இனி நமது மேஹர் என்ன அவஸ்தைக்குள்ளாயினளெனக் கவனிப்போம். இவள் தன்னாலானவரை தன் தந்தையின் மனதைத் திருப்ப முயன்றும் யாதொரு பயனுமில்லாதிருக்கவே விதியை நொந்து யோசனையிலாழ்ந் துட்கார்ந் திருந்த னள்.

(தொடரும்.)

# இயற்பகை நாயனார் மனைவியார்.

## (ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாள்.)

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை."

இரண்டாவதாக இவ்வம்மையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இந்நாயனார் சிவனடியாராக எவர் வரினும் எதை வேண்டினும் தன்பாலுள்ளதாயின் மறாது அளித்தலே தன் பிறழாக் கொள்கை யாகக் கடைப்பிடித் தொழுகிவந்தார். இவ் விரதம் காப்பதில் இவர் கொண்டிருந்த உறுதி யினை ஈசனும் கண்டு வியந்தே இவர் உள்ளத் தின் நிலையினை யுலகினருக் குணர்த்தவெண்ணி ஓர் சைவநலங் கனிந்த வேதியராக இவர்பால் நண்ணி (எவரும் நெஞ்சுற நினையத் துணியாத வாறு) இவர் மனைவியாரை அளிக்க வேண்டி னர். நாயனார் இதனைக் கேட்டதும் தன்பா லில்லாத ஒன்றைக் கேளாமல் உரித்தாயிருக் கும் பொருளையே கேட்டனரான்றேவென உவகை பொங்கி அவ்வாறு அவர் கேட்டது

தான் பெற்ற பெரும்பேறெனக் கூறி அவரை வணங்கி கற்பருங் கலமாகிய தன் மனைவியாரிடம் சென்று "விதிமணக்குல மடந்தையே!" என விளித்து 'இன்று உன்னை ஒரு சிவனடியாராகிய வேதியருக்குக் கொடுத்தேன்' என அஞ்சாது புகன்றனர்.

இச்சொற் கேட்டதும் மனைவியார் துண்ணென மனங்கலங்கி அறிவழிந்து சிறிது போதிற் றெளிந்தவராய் 'என்னுயிர்க்கொரு நாயகராகிய தாமே இன்று என்னைப் பணித்ததிதுவாகில் உமது உரைவழி யான் நடப்பதல்லது எனக்கென ஓர் உரிமையுண்டோ?' எனக் கூறி வணங்கினார் என்பது பெரிய புராணத்தில் "மதுமலர்க் குழல் மனைவியார் கலங்கி மனந் தெளிந்தபின் மற்றிது மொழிவார்", "இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல் என்னுயிர்க் கொருநாதர் நீருரைத்ததொன்றை நான் செயுமத்தனையல்லா லுரிமைவே றுளதோவெனக் கென்று தன்றனிப் பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்க" என வரும் செய்யுட்களால் இனிது புலனாகின்றது.

இவர் தனக்கென உரிமையாகவுள்ள எல்லாப் பொருள்களையும் நம்பனடியவர்க்கே உரியவைகளெனக் கருதி அவ்வெண்ணமே முதிர்ந்து தழும்பேறிய உள்ளத்தினராக மாறுதல் அடைந்திருந்தமையால் மனித வியற்கைக்குரிய எண்ணங்கள் இவர் உள்ளத்தில் கால்கொள்ள இடம் பெறாமல் கழன்றொழிந்தன. இதுகொண்டே இவரை (உலகியலுக்குப் பகை பூண்டவர்) இயற்பகையாரெனத் திருத்தொண்டத்தொகையிலும் குறித்ததன்றி வேறில்லை. இத்துணை உறுதியுடையராக இந்நாயனார் இருப்பினும் இவர் எண்ணியபடி செய்ய இவர் வாழ்க்கைத்துணைவியார் உடன்படாதொழியின் இவர் யாது செய்யமுடியும்? வெறுக்கலாம், அன்றி ஒறுக்கலாம். இவர் விரதம் காப்பதற் கியலுமோ?

இவரிடத்து மனைவியார்க்கு அன்போ மதிப்போ குறைந்த காரணத்தினால் இக்கட்டளைக் குடன்பட்டதாக ஊகிக்க முடியாது. நாயனாருக்கும் மனைவியாரிடம் வெறுப்போ ஐயுறவோ ஏற்பட்டு இவ்விதமாகக் கைவிட எண்ணினார் என்பதுமில்லை. இருவர்க்குள்ளும் ஒத்த அன்பும் ஒத்த பண்பும் வேரூன்றியிருந்தது என்பதற்கு மறையவர் கேட்டவுடனே தனது உரிமைப்பொருளென இவர் எண்ணியபடியே மனைவியார் மனந்தெளிந்து "தமது சொற்படி நடப்பதொன்றே எனக்குரிய அறமாகுமல்லது எனக்கென ஓர் உரிமை வேறாக உளதோ" எனக் கூறியதும் போதிய சான்றுகளாகும். "விதிப்படி மணக்கப்பெற்ற குலமகளே" என நாயனார் விளித்தமையும், 'என்னுயிர்க்கொரு நாதர் நீர்' என அம்மையார் கூறிய மொழியும் இவ்விருவருக்குமுள்ள கரைகடந்த மதிப்பினைக் காட்டத்தக்க உதாரணங்களாகும்.

இத்தகைய தம்பதிகளிடத்து உலகோர் கொள்ளத்தகாத செய்கைக்கிடம் ஏற்பட்டதுவே இச்சரிதத்தில் பெருவியப்பு. அதுபற்றி எல்லாம் வல்ல இறைவனே "செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்" என அழைத்தருளினார்போலும். இனி அம்மையாரின் உள்ளம் உலகியலொழுக்கத்திற் றோய்ந்திருந்தது.

இது தகும், இது தகாது எனும் பாகுபாட்டுணர்ச்சி வழுவாதிருந்தனர். ஆதலினாலேயே நாயகர் சொல்லிய மாற்றங் கேட்டதும் மனங்கலங்கி யறிவழிந்து பின்னர் கடமையெண்ணித் தெளிந்து நாயகர் கருத்திற்கு எல்லா வகையிலும் துணையாக நின்று அவர் சொற்படி நடப்பதே தனது கருமம் என்கிற தீர்மா

னத்தைக் கொண்டு எனக்கென உரிமை வேறுளதோ என்று கூறி வணங்கினாரெனில் நாயனார் உடன்பட்டதிலும் நாயகியார் உடன்பட்டதே சிறப்புடையதென்பது தேற்றம். நாயனார் உலகியலை மறந்திருந்தவர், நாயகியார் நினைந்திருந்தவர். அரிய சிறப்பு மனைவியார்க்கே ஆதலினால் சோதிக்க வந்த ஈசனும் மறையவருருவ மறைந்து மங்கை பங்கனாய்க் காட்சியளித்தபோது "நண்ணிய மனைவியோடு நம்முடன் போது"கென்று அருள்செய்தனர் போலும்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" எனும் மூதாட்டியார் அருமைத் திருவாக்கிற்கிலக்கியம் இவ்வம்மையேயாவர். இனி இவ்வம்மையார் தனக்குரிமையின்மையால் தவறான செய்கைக்கிணங்கியது தகுமோ எனவும் வினவலாம். அவ்விடயமே வேறு தனித்த ஓர் பெருங் கட்டுரையாக விரியும். ஆகவே அதைப்பற்றி இவ்வாராய்ச்சியில் விவகரிப்பதும் கடனன்று. நாயகன் எவ்வழியிலும் நாயகியின் முழு ஒற்றுமையைப் பெற்றிருந்தாலன்றித் தனது கொள்கையில் வெற்றிபெற முடியாதென்பதும், அத்தகைய மனைவியைப் பெற்றவர்க்கே இல்லறமல்லது நல்லறமன்று என்ற மொழி ஏற்புடையதாகுமென்பதும் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பதின் நுட்பமான கருத்திற்கு இவ்வம்மையாரின் தீர்மானம் அரண் செய்வதாகுமென்பதும், நாயகனைத்தவிர வேறு ஆடவரை மனதாலும் நாடாத பல பெண்மணிகள் உண்டாயினும் அவர்கள் சொல்வழி இவர்கள் நடப்பதென்பதிலாமல் தங்கள் சொற்படி அவர்களை நடக்கச் செய்தே வெற்றி பெறுகின்றனராதலின் இவர்களெல்லாம் கற்புடை மடவாராகாதென்பதும் இதனாற் பெறப்படும் உண்மைகளாகும்.

அம்மையாரினது கற்பினை நிலைநாட்ட உதாரணமாக நிகழ்ந்த விஷயத்தினை விடுத்து அவர் எண்ணத்தில் ஊடுருவி நின்ற கருத்தினையே நாம் கருதிப் போற்றவேண்டியது முதற்கடனாகும்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

கைகண்ட ஔஷதங்கள் ! கவனியுங்கள் ! குணமான ஔஷதங்கள் !

# ரத்தினம் இங்கிலீஷ் மருந்துகள்.

இருபது வருஷத்திற்குமேல் பெயர்பெற்ற டாக்டரால் உபயோகிக்கப்பட்டு, எல்லோராலும் புகழப்பட்ட மருந்துகள்.

(1) குளிர் சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கு பிரசித்தியான நீலமருந்து.

(2) குழந்தைகளின் அள்ளு மாந்தம், மார்ச்சளி அல்லது நெஞ்சுக் கொளகொளப்புக்கு மருந்து.

(3) குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்பொழுது ஏற்படும் வயிற்றுக் கழிச்சல் முதலிய வியாதிகளுக்கு மருந்து.

இவைகள் தவறாமல் குணம் தருவதை திடமாய் நம்பலாம். அனுபவத்தில் உண்மை விளங்கும்.

புட்டி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று. தபாற் செலவு பிரத்தியேகம்.

## எம். ரத்தினம் அண்டு கம்பெனி, ஔஷதாலயம்,

156, பிராட்வே, மதராஸ்.

---

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பிசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே !

இப்பவும் தங்களால் நடத்தப்பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தாதாராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பிவைக்கக் கோருகிறேன்.

---

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங் கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்துவரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுதித்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண்பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப்பெறும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

ஸ்ரீமதி கிருஷ்ணம்மா 20—1—1926 தென் காசியிலிருந்து எழுதுகிறார்.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதாராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமசந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச்செய்கிறானென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

---

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா,

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்கவேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சியுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

---

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

---

ஸ்ரீமதி சோர்னலக்ஷ்மி 4—8—26-ல் F. M. S லிருந்து எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமேயல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

# சிந்தாமணி பைண்டு வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜுலைவரை பன்னிரண்டு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 5-8-0

1926 ஆகஸ்டிலிருந்து 27 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1927 பிப்ரவரியிலிருந்து 27 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற்கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் தபாற் செலவின்றி 3-ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினுலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.



# சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

## உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

## சுபோதராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளி வந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

## திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம, பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேரவாவை விளைவிக்கும்.

### தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாடச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வாரது.

## இதரப் பிரசுரங்கள்.

### இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறமையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா! என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

### ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணுவுக்கு வி.பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,

சிந்தாமணி பத்திராதிபர்,

மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

| | |
|---|---|
| பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணு | 0—6—0 |
| பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணு | 0—8—0 |
| பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணு | 0—8—0 |

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்,

மயிலாபூர், சென்னை, என்றெழுதவும்.

# "சிந்தாமணி"

நான்காவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே இருக்கும்.

விளம்பர விகிதங்கள்:—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ.10; அரைப்பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால் விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.


---

# பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காப்பி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னாருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

# லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: “நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி, கேசரியின் ‘லோத்ரா’ வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று.”

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—‘லோத்ரா’ உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.





உமது வாழ்வில்

பெருத்த லாபம்.



| | | |
|---|---|---|
| எலெக்ட்ரோ கோல்ட் பிளேட் தங்க ஒட்டியாணம், 180-ஜல்ஜை கட்டியது விலை 1-க்கு | ... | ரூ. 15 8 0 |
| டிை சாதா ஒட்டியாணம் 1-க்கு ... | ... | ரூ. 4 0 0 |
| 7 கல்லிழைத்த இமிடேஷன் வஜ்ஜிரக்கம்மல் ஜதை 1-க்கு | ... | ரூ. 1 4 0 |
| இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய அம்ச பில்லை 1-க்கு | ... | ரூ. 2 8 0 |
| இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய ஒத்த வரிசை அட்டிகை 1-க்கு | ... | ரூ. 7 0 0 |
| இமிடேஷன் சம்பசரம் அல்லது மாட்டல் ஜதை 1-க்கு | ... | ரூ. 2 8 0 |
| எலெக்ட்ரோ கோல்ட் பிளேட் ¼-காசுமாலை 1-க்கு ... | ... | ரூ. 4 8 0 |
| எலெக்ட்ரோ பிலேட் பலமாதிரி வளையல்கள் ஜதை 1-க்கு | ... | ரூ. 0 10 0 |
| இமிடேஷன் டயமண்ட் பேசரி 1-க்கு | ... | ரூ. 0 6 0 |
| இமிடேஷன் லாபுலாக்கு 1-க்கு | ... | ரூ. 0 8 0 |
| ஒரு கல் கடுக்கன் | ... | ரூ. 1 4 0 |

கே. என். ராதாகிருஷ்ணா அண்டு பிரதர்ஸ்,
109, சைனபஜார் ரோட், மதராஸ்.



## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா :— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4.

விலாசம்:—மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

## குழந்தைகளின்

மித்திரன்.

## பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகூலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

வெளியாகி விட்டது!

வெளியாகி விட்டது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேசமுன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காகவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதின் ஆசிரியர். டாக்டர் பி. வரதவராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப் பதிவுசெய்து கொண்டவர்களுக்கு விலை அணு 0—12—0.

மனேஜர், "சிந்தாமணி"
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாப்பூர், சென்னை.

## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E, முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டு வரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22 வெளியூர்: ரூ.26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

## "தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக்கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F.M.S.) என்று எழுதவும்.

# தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

**Approved as a Library Book.**

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர், விலை அணா 10.

**Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியார் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

**Approved as a Text-Book suitable for School use.**

4. இட்டார்க்கு இட்ட பலன்.—ஆசிரியர் மிஸ். J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

**Approved as a suitable Text-Book,** vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

**Approved as a Library Book.**

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

**Approved as a Text-Book for Schools and Colleges,** vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியார் அவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரி யாவர் அவர்கள் எழுதியது. விலை அணா 12,

**Parts I and II are approved as suitable class-books,** vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

**Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்.—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T. அவர்கள் இயற்றியது. விலை அணா 10.

11. காளிதாசன்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

**Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-4-1927.

---

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற் கனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்தேன். தாங்கள் நமது பரத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிசந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்திபெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

---

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7—10—1926ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

தங்களாலுயிருறும் "சிந்தாமணியின்" எழுச்சியால் தமிழ் மகளினுட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா! நந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சீவிய வியல்வை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றலைக் கொண்டியும் "சிந்தாமணியின்" செம்மையை வரை இக்கடிதமுமிடந்தரா. எனினும் எம் சகோதரிக ளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருளை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃதுபோன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச் சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும்.

அம்மா! தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண் மணிகளிற் சிலரை நான் கண்டபொழுது அவர்கள் சிந்தாமணியின் கட்டுரைகளைத் தங்களுள் ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைப்பிடித்து தாங்கள் நடப்பதாலும் தாங்கள் முன் னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப் படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை யுணர்ந் ததுமல்லாமல் தாங்கள் இதுகாறும் நடந்துவந்த வழிகளை அறவே ஒழித்துவிட்டனர்.

அம்மா! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

---

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன் னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக்கத்தக்கதே. இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகை தழைத்தோங்கும்பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப் பாராக.

கணபதி துணை.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8—5—26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதபத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண்மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமா யிருக்கவேண்டுமென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை, தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதைப் போக்கு முதலியவற்றுளின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்துகொள்ளுதற்குரியவராவாரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தா மணியாய்த் திகழுஞ் சிந்தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கவினுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

---

7—2—25ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது.

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு, தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவையனுப்பியிருக்கிறேன். நிற்க என்னுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தங்கொண்டதாக என்மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றையனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பிவைக்கவும்.

---

7—10—25ல் நேட்டாலிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது.

சகோதரி அவர்களுக்கு,

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி" எனும் பெயர்பெற்ற மாத சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது? 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான் கருணைபுரிவாராக.

---

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்துவரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக் காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வரையப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியானது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்துக் கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24—3—26ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக்கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத் தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளிற் சிறப்புற்று விளங்கத் தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

---

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, தாங்கள் பிரசுரித்துவரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டைக் காலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர்நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க்குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

---

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேறும் வழியைப்பற்றி தாங்கள் முயற்சியெடுத்துக்கொண்டதைப்பற்றியும் சிரமம் பாராது பத்திரிகை நடத்திவருவதுபற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக் கொடுத்து சிந்தாமணியை என்றும் நடத்திவரும்படியாய் சதா கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம்.

---

24—9—25ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R. M. P. R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது.

அம்மா,

ஒருகாலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழிகாட்டியாக விருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவநாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண்மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக்கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார்.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2—11—1926ல் எழுதுவது.

சாத்வீகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அதிலுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில் எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல் வைக்க விரும்பாததுடன் அடுத்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப்பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்க வல்ல மழும் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

---

27—4—26ல் சிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜே. பரமானந்தன் அவர்கள் எழுதுவது.

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக்கோ ரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும் சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி" நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும் ஓர் சந்தாதாராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—4—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன். அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என் மனது குதூஹலமடைந்தது. ஆகையால் என்னையொரு சந்தாதாராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோறுகிறேன்.

---

ஸ்ரீமான் மு. சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம்போல் விளங்கும் சிந்தாமணி வரப்பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக்கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு.........வைகமும்......... மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்குக் கடவுள் க்ருணை புரிய வேண்டுகிறேன்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

சிந்தாமணி:—மாதந்தோறும் மேன்மேலும் பல சீர்திருத்தங்கள் பெற்று, சுக்கில பக்ஷத்துச் சந்திரனைப்போல ஒளிபெற்று விளங்கிவரும் இப்பத்திரிகையின் பங்குனி மாத இதழ் கண்டு மிகவும் மகிழ்வுற்றோம். இப்பத்திரிகை தோன்றியபொழுது, வெகு காலம் நடைபெறுமோ என நாம் ஐயுற்றதுண்டு. நமது ஐயம் தீர்ந்தது. நம் சகோதரிகளிலொருவர் நம்மவர்க்காக உழைக்க முன்வந்திருப்பதைக் கண்டு உவகை கொள்கிறோம். முதலில் 32 பெரிய பக்கங்கள் கொண்டு வெளிவந்த இப்பத்திரிகை இப்போது 64 பக்கங்கள் கொண்டுள்ளது. கட்டுரைகளுக்குத் தலைப்பில் அழகிய சித்திரப் படங்களும் விளங்குகின்றன. பத்திராதிபர் தமது கல்விச் செல்வத்தையும் அனுபோகத்தையுங் கொண்டு அரிய வியாசங்களையும் இனிய கதைகளையும் எழுதி வருவதோடு அறிவிற் சிறந்த பெண்மணிகளையும் தமது பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும்படித் தூண்டி வருவது மிகவும் மெச்சற்பாலது. உள்ளே 'தமிழ் நாட்டுப் பெண்மக்களின் முன்னேற்றத்தை முக்கியமாகக் கொண்டுள்ள பத்திரிகை' என வரையப்பட்டிருப்பினும், இப்பத்திரிகை சிறப்பாகப் பெண்மக்களுக்கும் பொதுவாக ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் பயன் தருவதாகும்.

பங்குனி மாதத்து இதழிலே வெளிவந்துள்ள சில கட்டுரைகளை இங்கு குறிப்பிடுகின்றோம். "பெண்கள் சுதந்திரம், மனைவி மக்களும் முக்தி மார்க்கமும், இந்திய ஸ்திரீ ரத்னங்கள், பார்வத குமாரி, ஸ்ரீராதாகிருஷ்ண லீலைக் கும்மி, ஸலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம், கலாவதி, மஹா சிவராத்திரி".

இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளில் சிறப்புற விளங்கி தமிழ்நாடெங்கும் பரவவேண்டுமென்பதே எமது எண்ணம்.

---

ஸ்ரீமதி என். குப்பம்மாள் அவர்கள் 20—4—27ல் டேலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

அலைகடல் சூழ் அவனியின்கண் அன்பே ஓர் உருவாக உதித்த சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு,

தெய்வீகந்தங்கிய அம்மா, தங்களுடைய திரு உருவை நேரில் காணவும் தங்களுடைய தேனினுமினிய அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு ஆனந்திக்கவும் கருணை புரிந்த என் ஐயன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை என்னவிதம் வர்ணிப்பதென்று தெரியவில்லை. அம்மா! நான் டேலுக் ஆன்ஸனிலிருந்து வந்த அன்றே இவ்விடத்தில் எங்களுக்குத் தெரிந்தவர்களிடம் சிந்தாமணியின் பெருமையைப்பற்றியும், நமது இந்திய சகோதரிகளுக்காக தங்கள் தேக சுகத்தை ஓர் பொருட்படுத்தாமல் இவ்வளவு சிரமமெடுத்து இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு விஜயம் செய்ததைப்பற்றியும் தெரிவித்ததில் சிலர் சந்தாதாராக சேர விருப்பங்கொண்டிருக்கின்றார்கள். சரஸ்வதி தேவியின் அருள் நிறைந்த எனதன்னையே! தாங்கள் கோலாலம்பூருக்குப் போகும்பொழுது ஏழைமீது கிருபை கூர்ந்து தாப்பாவிற்கு விஜயம் செய்தால் தங்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தவிதம் எங்களுக்கு மரியாதை செய்ய சக்தியில்லாவிட்டாலும் எங்களால் கூடுமானவரையில் முயற்சியெடுக்கின்றோம். தாங்கள் எப்பொழுது ஈப்போவை விட்டுப் புறப்படுவீர்கள்? தங்களுடைய ஆத்ம சரீர சுக சவுக்கியத்திற்கு ரகுவீரனைப் பணிந்து வருகின்றேன். இவ்விடத்தில் கடவுள் கிருபையாலும் தங்களுடைய ஆசீர்வாதத்தினாலும் எல்லோரும் க்ஷேமம். சிரம்பான் போஸ்ட்மாஸ்டர் மனைவிக்கும் ஓர் லெட்டர் எழுதியிருக்கின்றேன். அவர்களும் சந்தாதாராக சேருவார்கள். அளவற்ற வந்தனத்தோடு இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

Mr. C. R. SRINIVASA IYENGAR, "Ramayana Vilas", Mylapore, writes :—

"Chinthamani" is, so far as I know, the only Tamil Monthly, or for the matter of that, any kind of newspaper edited and published by a lady in South India. A more pleasing feature about it is that instead of being the editor of it in name only and conducting it usually backed up by members of the other sex (as is really the case with some so-called Ladies' Magazines I have known) she is all-in-all and uniformly self-reliant so far as the editing is concerned, has gone on sustaining it for the last four years with her inexhaustible leaders and amusing and instructive short-stories.

In this she has the incalculable advantage over her sisters of being the pupil and daughter of a very learned lady, a Pundit in fact; and consequently herself a very creditable student of Sanskrit, Tamil and Canarese. As if these were not a wide scope for her talents she has devoted herself to the uplift and ameleoration of the millions of her voiceless sisters of the land. She speaks for them, she thinks for them, she writes for them and she fights for them almost single-handed for till now I have not come upon any other who could stand by her side and like the Romans of old, hold the bridge against an army. Further she throws herself heart and soul into all activities that bear upon the question of women's rights and duties. I am glad to note that she has another aspect in that she is a talented author and speaker.

The Magazine that she edits is coming up very quickly to take the place by the side of those at whose helm are the members of the sterner sex.

But I have to own that there is a regrettable feature about it; as in the States and in similar advanced centres of the world, there are papers printed, published, edited and written by women and women alone. Sister Balammal has not the pleasure and privilege of not depending for contribution or financing upon the members of the other sex: May be her sisters have not educated themselves to that level where they could share her work; may be they have not the clear eye to see that the very best use they could make of the time and the money they could spare is to start, build up and grow such concerns and, like the beautiful rose in the valley of Kashmere cover the face of Mother India with noble women of of whom she could be really proud.

Well, the editor is a host in herself, her impressive personality, her polished manners and the driving force in her words and actions cannot fail in the near future to find fruitful response in the hearts of many a gem of Indian women who now lie hidden in the dark unfathomable caves of private life.

# புதிய ஸங்கீத புத்தகம்!

பிரசித்திபெற்ற நூலாசிரியர்,
வித்வான் கெ. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் இயற்றியது.

## ஸங்கீத சிந்தாமணி

விலை ரூபா 3—0—0.

இது சங்கீத வித்யார்த்திகட்கும், உபாத்தியாயர்கட்கும் இன்றியமையாத ஓர் அரிய புத்தகம். இதுவரையிலும் வெளிவராத தியாகராஜ கீர்த்தனைகள், இன்னும் அநேக பிரசித்திபெற்ற வித்வான்களின் நூதன கீர்த்தனைகள் முதலியவைகளை ஸ்வரதாளங்களுடனும் ராக லக்ஷணங்களுடனும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பு :—நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு ஆர்டர் செய்பவர்கட்கு தபாற் செலவு இனாம்.

முழு விவரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி,**
புத்தக வியாபாரிகள், ராயபுரம், மதராஸ்.


ஸ்ரீமான் டாக்டர் கே. முத்துகுமாரு அவர்கள் (J. P.) பிணங்கிலிருந்து 10—3—'27ல் எழுதுகிறார் :—

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற மூன்று வருடங்களாகத் தாங்கள் நடாத்திவரும் "சிந்தாமணி" என்னும் மாதச் சஞ்சிகையை வாசித்து சந்தோஷமடைந்தேன். தமிழ்ப் பெண்களின் தாழ்ந்த நிலையையும், கல்வியின்மையையும், தேசாபிமானக் குறைவையும் நன்கறிந்த தாங்கள் இத்தகைய பத்திரிகையை நடத்த முன்வந்தது தமிழ் நாட்டின் நற்காலமேயாகும்.

சென்ற பலவருடங்களாகத் தாங்கள்செய்து வருகின்ற தேசத்தொண்டிற்கும் சமூக ஊழியத்திற்கும் இப்படிக்கான ஓர் அரிய சாதனம் இன்றியமையாததென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

சிந்தாமணியின் பக்கங்களிலுள்ள ஒவ்வோர் விஷயமும், பிரதானமாகத் தமிழ்ப் பெண்கட்கும், பொதுவாகத் தமிழ் மக்கட்கும் நல்லறிவையும், நன்மையையும், சுயமதிப்பையும், தேசியப்பற்றையும் உண்டாக்கக் கூடியதென்பது எனது துணிபு.

மேலும் சமையல் சாஸ்திரம், குடும்ப சாஸ்திரம், சிசுபரிபாலனம் முதலிய அங்கங்களை "சிந்தாமணி" ஏற்றுவந்தால் முன்னிலும் அதிக பலனைத் தமிழ் மக்கட்கு அளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இவ்வரிய தொண்டைச் செய்துவரும் தாங்கள் இம்மலேயா நாட்டிற்கு வந்து எங்களையும், எங்கள் பெண்மணிகளையும் கௌரவம் செய்வது நாங்கள் செய்துகொண்ட பாக்கியந்தான்.

அன்புள்ள சகோதரியே! உம்மையும் உமது அருமைச் "சிந்தாமணி"யையும் மலாய் நாட்டுத் தமிழ் மக்களாகிய நாங்கள் அபிமானித்து ஒவ்வொருவரும் சந்தாதாராகச் சேர்ந்து உங்கள் உயரிய நோக்கத்தையும், தேசத்தொண்டையும் அபிவிருத்தி செய்ய முன்னணியில் நின்று வேலைசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். சர்வ வல்லமையுள்ள கடவுள் தங்களுக்கு நீடிய ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் கொடுத்துத் தாங்கள் செய்துவரும் தொண்டை மேன்மேலும் விருத்தி செய்து ஆசீர்வதிப்பாராக.

சிந்தாமணி சந்தாதாருக்கு ஒரு நற்செய்தி.

## சோதிடம் ! சோதிடம் !!

பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம் இவைகளைக் குறித்தனுப்பினால் ஜாதக கணிதம் பண்ணி, ஸ்புடஞ் செய்து, ஜாதக மூலம், இனிவரும் பலன்கள், தொழில், புத்திர பாவம், ஆயுர்பாவம், களத்திரபாவம் முதலியவைகளையும் வியாதி முதலிய எல்லா சங்கடங்களையும் நீக்கும்படியான ஜபஹோம சாந்தி முதலிய ஜாதக சம்பந்தமான எல்லா அம்சங்களையும் அடியில் கண்டவரிடத்தில் தெரிந்துகொள்ளலாம். பிறந்த வருஷம், மாதம், தேதி தெரியாதவர்களுக்கு நஷ்ட ஜாதகமும் கணிக்கப்படும்.

சார்ஜு விபரத்துக்கு நேரில் எழுதவும்.

எம். நரசிம்மய்யர்,

சோதிட வித்வான், சுங்கைப்பாரி ரோடு, ஈப்போ, F.M.S.

---

மலாய் நாட்டு சந்தாதாருக்கு

## மானேஜர் முக்கிய அறிவிப்பு.

நம் சிந்தாமணியானது ஒவ்வொரு ஆங்கில மாதக் கடைத் தேதியிலும் வெளிவர வேண்டியிருப்பினும் பல எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் மறுமாத முதல் வாரத்திற்குள் தற்போது வெளிவந்துகொண்டிருக்கிறது. ஒருவர்விடாது உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதார்களுக்கு ஒரேநாளில் தபாலாபீசில் போஸ்டு செய்யப்பட்டு வருகிறது. இப்படியிருக்க நம் சகோதரர் சிலருக்கு போஸ்டு செய்யப்படும் சிந்தாமணியானது வந்து சேருவதில்லை எனக் கேட்க வியப்பாக விருக்கிறது. ஒருவிதத் தப்பின்றி வெகு பொறுப்பாக நம் ஆபீசில் ஒவ்வொருவருக்கும் விலாசமிட்டு அனுப்பப்படுவதால் இவ்விதம் காபிகள் கைதவறுவதற்கு நடுவழியில் களவுபோவதே காரணமென ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் நம் மலாய் நாட்டு சந்தாதார் ஒவ்வொருவரும் மறுமாத 20-தேதிக்குள் தமக்குப் பத்திரிகை கிடைக்காவிடில் உடனே தமது போஸ்டாபீசிலும் தெரிவித்துத் தாமதமின்றி நமக்கும் அறிவிப்பாரானால் இங்குள்ள போஸ்டுமாஸ்டர் ஜனரலுக்கு அக்கடிதங்களைக் காண்பித்து இனிமேல் இவ்விதம் நிகழாவண்ணம் தடுப்பதற்கும் தவறிப்போன பிரதிகளுக்கு மாற்று அனுப்புவதற்கும் மெத்த சௌகரியமாயிருக்கும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

---

ஸ்ரீமான் உ. கா. தேவராயன் செட்டியார் அவர்கள் 21—5—27ல் கல்லலிலிருந்து எழுதுகிறார்.

*அன்பு நிறைந்த சோதரியே !*

நலன் வேண்டுவது மஃதே. தங்களால் வெளியிடப்பெறும் சிந்தாமணியில் நம் பாரத நாடும் முக்கியமாகப் பெண்மக்களும் முன்னேற்றமடையப் பல அரிய பெரிய விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. நம் நாடு தற்காலமிருக்கும் நிலைக்கு தாங்கள் இத்தொண்டியற்ற முன் வந்தது மிகையே. பரோபகாரமே பரம மோக்ஷமென்றெண்ணும் தங்கட்கும் நமதருமைச் சிந்தாமணிக்கும் நீண்ட ஆயுளையும் பல நலங்களையும் தரவேண்டுமென எல்லாம் வல்ல எமது குலக்கடவுளாம் குமார நாயகனைப் பலகாலும் பிரார்த்திக்கின்றேன்.

207619

# LIFE ME BERS.

26. M.R.Ry. K. Kandiah Avl., Kla
27. „ T. R. Subramania Iyer Avl., Klang.
28 „ S. S. Iyer Avl., P. W. D, Klang.
29. „ M. Kumaraswami Pillai Avl., J.P, Kuala-Lumpur.
30. „ R. D. Ramaswami Avl., J.P., Kuala-Lumpur.
31. „ Nilakanta Iyer Avl., Klang.
32 „ W. B. Rangaswami Iyengar Avl., Port Swettenham.
33. „ V. R. Subramania Iyer Avl., Kuala-Lumpur.
34. „ Dr. P Varadaraja, Port Swettenham.
35. „ K. A Narayanan Avl, Kuala Lumpur.
36. „ E. Devi Radha Avl., Kuala Lumpur.
37. „ Dr. John Ponnambalam Avl., Kuala-Lumpur.
38. „ W. Ponnudurai Avl, Kuala-Lumpur.
39. „ S. Paramananda Pillay Avl., Lumut.
40. „ K. S. Ananthakrishna Iyer Avl, Port Swettenham
41. „ S. M. Ponniah Avl, Klang (F.M.S.)
42. „ S Ponniah Avl, Port Swettenham.
43. „ A K. Katheappa Thevar Avl., Saigon.
44. „ S. K Ramasamy Pillai Avl, Tapah
45. „ A. S. Thampoo Avl., P.W.D., Tapah.
46. „ C. Valersamy Avl., P.W.D, Sungei.
47. „ D. S. Paramesvara Iyer Avl., P.W D., Sungei.
48. „ T B. Ramakrishnan Avl., Sungei
49. „ E. Chinnayah Avl, Sungei
50. „ V Subramanian Avl., Sungei
51. „ K Elankai Nayagam Avl, Bidor.
52. „ L. Thivy (திவி) Avl., J P., Kuala Kangsar.
53. „ A. Velu Pillai Avl., Tapah
54 „ N Elaithambi Avl., J. P., Taiping.
55. „ M. Ratnasamy Pillai Avl, Taiping.
56. Miss Sornaletchumy, Mantin.
57. M.R Ry. P. Sinnathamby Avl., Gemas.
58 Miss Kamaleswari, Port Swettenham.
59. M.R Ry. S Thamboo Avl. Port Swettenham.
„ Sona Sookalingam Chettiar Avl., Kuala Muda
O. R. M. O. M S. P. Natchiappa Chettiar Avl., Tapah.
diah Avl., S. Pattani.
sami Chettiar Avl., Alorstar.

## LIFE MEM[torn]RS—(Continued).

64. A. R. PL. S. PL. Muthu K[torn]uppan Chettiar Avl., Alorstar.
65. S. K. M. Ramasami Pillai A[torn]l., Tapah.
66. N. Kuppammal Avl., Tapah.
67. Chengalvaraya Naidu Avl., Ipoh.
68. S. V. O. Namperumal Naidu Avl., Penang.
69. Dr. Veerasingam Avl., S. Bakap.
70. S. Thilliambalam Avl., B. Mertajam.
71. A. Pasupathy Avl., B. Mertajam.
72. K. M. Rm. Palaniyappa Chettiar Avl., B. Mertajam.
73. K. Visvanathan Avl, B. Mertajam.
74. P. N. M. Muthu Palaniyappa Chettiar Avl, Athangudi (R[torn]
75. M. Y. Rm. Sithambaram Chettiar Avl., Kulim.
76. Pl. K. N. Ct. Palaniyappa Chettiar Avl., Kulim
77. V. Ramalingam Avl. Sihau, F.M.S.
78. S. Rajappah, Esq. Mambau, F.M.S.
79. Mrs. G. C. Thamboo. Padang Rengas, F.M S.
80. K. Namaswayam Avl. B. Mertajam
81. M. C S. Durai Avl. Jelebu.
82. M. Vadivelu Avl. Jelebu.
83. S. Kanagaratnam Avl. Jelebu.
84. S. S. Thambimuthu Avl. Jelebu.
85. S. Nagalingam Avl. Port Dickson.
86. M. Thiyagarajah Avl. Port Dickson
87. D. S. Stoner, Esq. Kuala Pilah.
88. K. Rajah Avl. Seremban.
89. T. Parthigesu Avl. Kajang.
90. M. Vallipuram Avl. Port Dickson.
91. K Arumugam Avl. Seremban.
92. Dr. S. R. Krishnan, J. P. Do.
93. Dr. A. S. Muthu, Do.
94. S. S Selvanayagam. Do.
95. S. Sinnathamby Avl. Do.
96. K. Vettivelu. Do.
97. K. Saravanamuthu. Do.
98. S. Ponnambalam. Do.
99. S. PL. Palaniyappan Ambalam. K. Pilah.
100. V. Karuppian Avl., Butterworth.
101. T. K. Kathiresan Pillay Avl. Do.
102. T. Rajabather Avl, Do.
103. M. Kanda Gnany Avl. Kola Bharu.
104. S. Kandiah Avl. K. Lumpur.
105. K. Arulampalam Avl. Do.
106. M. Sivasithambaram. Batu Gajah.

Printed by Srinivasa Varadachari & Co., 4, M[torn]
and Published by Sister V. Balammal, Sullivan's Garden